# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 62 தை 14ஆம் நாள் சனிக்கிழமை 27 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# கோத்தாவின் பாதுகாப்பு ரணில்தான்

## போட்டுடைத்தார் மைத்திரி

கொழும்பு, ஜனவரி 27

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படாமைக்கு, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே காரணம் என்று அதிரடியாகத் தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. கோத்தபாயவைக் கைதுசெய்யவேண்டாம் என்று தாம் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை.



இவ்வாறு தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

ஊடகங்களின் ஆசிரியர்களுடனான சந்திப்பு அரச தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்வதற்குத் தேவையான ஆவணங்களை பொலிஸ்மா அதிபரிடம் சட்டமா அதிபர் வழங்கியிருந்தார். அதைப் பொலிஸ்மா அதிபர் என்னிடம் தெரிவித்தார். அப்போது நான் தலைமை அமைச் >> 06

# தேர்தல் அறிவித்த பின்னர் மன்னாரில் 16 நியமனங்கள்

## சாள்ஸ் எம்.பி. முறைப்பாடு

மன்னார், ஜன. 27

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் மன்னார் மாவட்ட அலுவலகத்துக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது அப்பட்டமான தேர்தல் விதிமுறை மீறல்.

மாவட்டத் தேர்தல் திணைக்களத்திடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் தெரிவித்ததாவது:

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அரச நியமனங்கள் வழங்கமுடியாது. அதனையும் மீறி >> 06

# விடுவிக்காத பகுதிகளுக்கான வாக்களிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 27

இராணுவத்தினரால் விடுவிக்கப்படாத பகுதிகளுக்குரிய வாக்களிப்பு நிலையங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலும் அமைக்கப்படவுள்ளன என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வலி. வடக்கில் இராணுவத்தால் விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்குரிய 13 வாக்களிப்பு நிலையங்களே. இந்த இரண்டு பாடசாலைகளிலும் >> 06

சிறுவன் தாக்கப்பட்ட விவகாரம்

# சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நால்வர் பொலிஸாரிடம் சரண்

கிளிநொச்சி, ஜன. 27

சிறுவனைத் தாக்கினர் என்று கூறப்படும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 4 பேர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். அவர்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை சிறைச்சாலை வாகனமும் சிறுவன் ஒருவன் பயணித்த மிதிவண்டியும் மோதுண்டன. சிறுவன் காயமடைந்தான். விபத்துக்குக் காரணம் சிறுவனே >> 06

# உறுதிமொழிகளை நம்பி கையறு நிலையில் நாம்

## ‘அ’புரம் சிறையில் உள்ள அரசியல் கைதிகள் கண்ணீர்

யாழ்ப்பாணம், ஜன.27

அரசியல்வாதிகளின் உறுதிமொழியை நம்பி உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கைவிட்டோம். எங்களது வழக்கை வவுனியாவுக்கு மீண்டும் மாற்ற வேண்டும் என்று கோரித் தாக்கல் செய்த வழக்கும் இழுத்தடிக்கப்படுகின்றது. அடுத்த கட்டம் என்ன என்று தெரியாத நிலையில் உள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தனர் அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள். >> 06

# பொய் முறைப்பாடுகளே அதிகம் கிடைக்கின்றன

## வவு. மாவட்டச் செயலர் தெரிவிப்பு

வவுனியா, ஜன.27

வவுனியா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்துக்கு உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாகப் பொய்யான முறைப்பாடுகளே அதிகளவில் கிடைக்கின்றன.

இவ்வாறு வவுனியா உதவி மாவட்டச் செயலாளர் நா. கமலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இதுவரை உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக வவுனியா மாவட்டத்தில் 60 வரையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

வவுனியா நகர சபை, வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு பிரதேச சபை போன்றவற்றில் 52 முறைப்பாடுகளும், செட்டிகுளம் பிரதேச சபையில் 7 முறைப்பாடுகளும், வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசசபையில்ஒருமுறைப்பாடும் கிடைத்துள்ளன. அவற்றுக்குத் தீர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பட்டாணிச்சூர் பகுதியில் ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் கூட்டம் ஒன்று இடம்பெறுகிறது என கிடைத்த தகவலையடுத்து இரவு 11மணியளவில் அங்கு சென்ற உதவித் தேர்தல் ஆணையாளரால் அந்தக் கூட்டம் நிறுத்தப் >> 06

# விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

வவுனியா, ஜன. 27

வவுனியா விநாயகபுரத்தில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா அரபாத் நகர்பகுதியைச் சேர்ந்த சஜா (வயது - 28) என்பவரே உயிரிழந்தார்.

மேசன் வேலைக்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக் >> 06



யாழ்ப்பாண பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சியை விருந்தினர்கள் நேற்று நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தனர்

# தமிழ் மக்களை மதித்தால் சமஷ்டித் தீர்வை வழங்குக

## கூட்டரசிடம் வடக்கு முதலமைச்சர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

ஆட்சிக்குவரக் காரணமாக இருந்த வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களை, கூட்டரசு உண்மையாகவே மதிக்கின்றதென்றால், எமக்குரிய சுயாட்சியை சமஷ்டி மூலம் பெற்றுக்கொடுக்க வேண்டும். இதுவே இந்த நாட்டின் மக்களிடையே நல்லிணக்கம் வரத் துணைபுரியும். நல்லிணக்கம் என்று கூறிவிட்டு எம்மை வலுவிழந்தவர்களாக்கி பெரும்பான்மையினரின் பேரினவாதத்தை எம்மீது கட்டவிழ்த்து விடுவது நல்லிணக்கத்துக்கு வழிகோலாது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு >> 06

# ஒன்றுபட்டு முயன்றாலே முன்னேற்றம் காணலாம்

## சிறுகைத்தொழில் அமைச்சர் தயா கமகே தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் இணைந்து செயற்பட வேண்டும். அவர்கள் பிற நாடுகளின் தொழில்நுட்ப அறிவை பெறவேண்டும். ஒற்றுமையாகச் செயற்பட்டாலே 30 வருட கால போரால் பின்னோக்கிப் போயுள்ள நாம் முன்னேறிச் செல்லமுடியும்.

இவ்வாறு சிறு கைத்தொழில் அபிவிருத்தித் துறை அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

9ஆவது பன்னாட்டு வர்த்தக சந்தையும் கண்காட்சியும் யாழ்ப்பாண மாநகர சபை மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது. அதன் ஆரம்ப நிகழ்வுகள் யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றன. அதில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே >> 06

கூட்டமைப்புக்கு எதிரான

# மாற்று அணியை அமைக்க அழைக்கின்றார் அங்கஜன்!

யாழ்ப்பாணம், ஜன. 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குஎதிரானமாற்றுஅணியை உருவாக்கவேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதற்குத் தயாராக இருக்கின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., தமிழ்த் தேசியப் பேரவை ஆகியவற்றை எம்முடன் இணைந்து கூட்டமைப்புக்கு எதிரான கூட்டணியை அமைக்க பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றேன்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற >> 06




## மக்களைப் பாதுகாக்கவே நாம் போட்டியிடுகின்றோம்

### அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

அம்பாறை,27

இறக்காமத்தின் மாயக்கல்லி சிலையை அகற்றுவதற்காகவே யானைச் சின்னத்தில் போட்டியிடுவதாகவும், சின்னங்கள் மாறினாலும் எண்ணங்கள் மாறாது என்றும் மு.கா தலைவர் மேடைகளிலே கூறித்திரிவது மக்களை ஏமாற்றும் செயல் என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொத்துவில் பிரதேச சபைக்காக போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

ஜனநாயக ரீதியாக நாம் பல்வேறு விடயங்களை கோரிய போதும் எமது சமுதாயத்துக்கு எதுவும் கிடைக்கவில்லை என்ற நம்பிக்கை இழந்து நமது இளைஞர்களும் நமது மக்களும் வேறு பாதையில் இறங்கி பயணிக்கக் கூடாது என்பதற்காகவும், நமது சமுதாயத்தைப் பாதுகாப்பதற்காகவும், நமது மக்களுக்கான விமோசனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகவுமே நாம் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் போட்டியிடுகின்றோம்.

காலத்துக்குக் காலம் பொய்யான பேச்சுக்களையும் பசப்பு வார்த்தைகளையும் மேடைக்கு மேடை ஏறி, வீர வசனங்கள் மட்டுமே அவர்களால் பேச முடியுமே தவிர, நமது மக்களின் நலன் சார்ந்த எந்தவொரு விடயத்தையும் அவர்களால் பெற்றுக்கொடுக்க முடியாது.

அபிவிருத்திகளை மேற்கொள்வதற்காக எம்மால் முன்னெடுக்கப்படும் அத்தனை விடயங்களுக்கும் மாற்று சக்திகளால் தடை போடப்படுகின்றது. தேர்தலில் நல்லதொரு முடிவை எடுக்க வேண்டும் என்றார். (ற-ரி4)



திருகோணமலை தமிழர் சிவில் சமூகங்களின் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. வர்ணகுலநாதன் தர்மபவன் அவர்களின் தலைமையில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் வேட்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர். (ற.ரி4,40)

# போதையற்ற நகரமாக ஹற்றனை மாற்றுவோம்

### ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு

ஹற்றன்,ஜன.27

**ஹற்றன் நகரம் போதைப்பொருட்கள் விற்பனையாகும் ஒரு முக்கிய நகரமாக மாறியுள்ளது. இதனால் எமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறிக்கு உள்ளாக்கப்படு ள்ளது. தேர்தலின் வெற்றியின் பின் ஹற்றனிலிலுள்ள போதைப் பொருள்களை ஒழித்து ஒரு தூய்மையான நகரமாக மாற்றியமைப்போம். இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.**

ஹற்றனில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தேர்தல் முடிந்தவுடன் ஊழலில் ஈடுபட்ட அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுப்போம்.

நாங்கள் ஒரு போதும் அதை செய்து தருகிறோம் இதை செய்து தருகிறோம் என்று வாக்கு கேட்கவில்லை. இன்று சேவல் சின்னத்தில் போட்டியிடுபவர்களும் எதிலும் சலைத்தவர் அல்ல அவர்களும் மக்கள் சேவைகள் செய்து விட்டு தான் உங்களிடம் வாக்கு கேட்கிறார்கள் எனவே சேவல் சின்னத்துக்கு அளிக்கும் ஒவ்வொரு வர்க்கும் எனக்கு அளிக்கும் வாக்கே சேவல் சின்னத்துக்கு சொந்தக்காரன் நான்



எனவே சேவலுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் எனக்கு அளிக்கும் வாக்குகளே-என்றார். (ற.ரி4)

## தமிழரதும் முஸ்லிம்களதும் இணைந்த ஆட்சி வேண்டும்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

அம்பாறை,ஜன.27

தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்து தம்மைத்தாமே ஆளும் நிலமையை உருவாக்கவேண்டும், இதற்கு ஏதுவான வடகிழக்கு இணைப்பை முஸ்லிம் தலைமைகள் ஏற்காவிட்டால், தமிழ் மக்கள் தம்மைத்தாமே பாதுகாக்க வேண்டிய நிலை வரும். இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார். கல்முனை மாநாகரசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிசார்பில் போட்டியிடும் வேட்பாளரின் செல்லப்பா மகேந்திர ராஜாவின் தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிலர், குறிப்பாக அமைச்சர் ரிஷாத், பிரதிஅமைச்சர் ஹரீஸ், ஹிஸ்புல்லா, அதாவுல்லா போன்றவர்கள் வடகிழக்கு இணைப்புக்கு தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

பெருந்தேசியவாதிகளின் நிழலில், சிங்களபேரினவாதத்தின் கீழ் நாம் வாழமுடியாது. இதற்கு வடகிழக்கு இணைப்பே சாத்தியமான விடயமாகும். முஸ்லிம் மக்களின் தனித்துவம் ஏற்று இதற்கான சுமுகமான தீர்வு எட்டப்பட வேண்டும். இந்த இணைப்பை முஸ்லிம் தலைமைகள் ஏற்காவிட்டால், குறைந்தபட்சம் வடகிழக்கு இணைப்பைத் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டிய நிலை வருவதுடன், தம்மைத்தாமே பாதுகாக்கவேண்டிய நிலையும் வரும்.

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், மாவைசேனாதிராசா ஆகிய மூவரும் அரசநிகழ்ச்சிநிரலுக்கு இயங்கிக் கொண்டிருப்பதால் தழிழ் மக்கள் விரக்திநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளையே நிராகரித் துள்ள அரசியல் சாசனம் குறித்து ஏமாற்றுநாடகங்களே அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. நம் வேட்பாளர் மகேந்திர ராஜா தமிழ் மக்கள் விடுதலைக்காக உயிரைப்பணயம் வைத்து போராடியதுடன், தமிழர் தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்ற சலியாத வேட்கை கொண்டவர். அவரது வெற்றியை மக்கள் உறுதிப்படுத்த வேண்டும்"- என்றார். (ற.ரி4,30)

## கட்சி அலுவலகம் திறப்பு

சாவகச்சேரி,ஜன.27



சாவகச்சேரி நகரசபை தேர்தலின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நகரப் பகுதி வேட்பாளருக்கான கட்சி அலுவலகம் சாவகச்சேரி ஹென்ஸ்மன் வீதியிலுள்ள கட்டடத்தில் திறக்கப்பட்டது.

நகரப் பகுதி கட்சியின் வேட்பாளர் கிறிஸ்தோப்பர் ஜோன்சன் தலைமையில் கட்சியின் யாழ்.மாவட்ட மேலதிக நிர்வாகச் செயலாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அலுவலகத்தை திறந்தார்.

சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச சபை ஆகியவற்றின் கட்சி வேட்பாளர்களும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற.ரி4.9)



## ம.வி.மு வின் வேட்பாளர் வீட்டில் தீ பரவல்

நுவரெலியா, ஜன.27

உள்ளூராட்சித் தேர்தலில் அக்கரபத்தனை பிரதேசபையின் கீழ் போட்டியிடும் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளரர் ரஞ்சித் உப்பாளி வீட்டில், தீ பரவல் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் போபபத்தலாவ வலாகம்பபுற பகுதியிலுள்ள கொலனி வீட்டில் 'நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. வீட்டில் இருந்த உடைமைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியது. வீட்டில் எவரும் இருக்கவில்லை எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அக்கரபத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## சு.கவை வெற்றிபெறச்செய்யுங்கள் அபிவிருத்தி காலடியில் இருக்கும்

### அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவிப்பு

அம்பாறை,ஜன.27

தேசியப்பட்டியலை வைத்து ஒவ்வொரு ஊருக்கு ஊர் ஆறுமாதம் அல்லது ஒரு வருடம் தேசியப்பட்டியல் நாடாளுமன்றப் பதவி தருவதாக இப்போதுள்ள தலைவர் கூறுவார் ஆனால் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாது ஏனைய சமூகத்தவர்களுக்கும் பல்வேறுபட்ட அபிவிருத்திகளைச் செய்து காட்டியுள்ளார். இவ்வாறு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

காரைதீவு பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாகத்தான் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை இங்கு செய்து காட்டினார்.

ஆனால் தற்போது இந்தக் கட்சியினால் என்ன அபிவிருத்திகள் நடைபெற்றுள்ளன? இங்கு வந்து வாக்குகளைப் பெற்றுக் கொண்டு சென்று கொழும்பில் சுகபோகங்களை அனுபவிக்கின்றனர்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் கைச்சின்னத்தில் இங்கு போட்டியிடும் வேட்பாளர்களை நீங்கள் ஆதரித்து அவர்களை வெற்றி பெறச் செய்யுங்கள். உங்களது அபிவிருத்திகள் காலடியில் வந்துசேரும்.என்றார். (ற.ரி4)



# அரசியல் தீர்வை பெறுவதே கூட்டமைப்பின் வேணவா

## முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கருணாகரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.27

**நாட்டை கொடுங்கோள் ஆட்சிசெய்த மகிந்த ராஜபக்சவை ஆசனத்தில் இருந்து தூக்கியெறிவதற்காக எமது தமிழ் மக்கள் அயராது உழைத்து அதில் வெற்றியும் கண்டார்கள் அந்த வெற்றியின் அறுவடையாகத்தான் புதிய கூட்டு அரசைக் கொண்டுவந்தமையை யாவரும் அறிந்திருப்பீர்கள். இவ்வாறு முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன் தெரிவித்தார்.**

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபைக்காக தேர்தலில் போட்டியிடும் எஸ். காண்டீபனின் கிளை அலுவலகம் திறப்பு விழாவும், மக்கள் சந்திப்பும் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் இதுவரை காலமாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சனைக்கான அதிகாரங்களுடனும் கூடிய சமஷ்டி முறையிலான ஒரு சுயாட்சியை பெற்றுக்கொள்வதற்காகவே நாங்கள் இன்றுவரை போராடி வருகின்றோம். தமிழ் தேசியக்கூட்டமைப்பில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் நினைத்திருந்தால் எவ்வாறான சுகபோகங்களையும் அனுபவித்திருக்க முடியும் அதனையும் கருத்தில் கொள்ளாது எமது மக்களின் விடிவுக்காகவே தங்களை அர்ப்பணம் செய்து வருகின்றார்கள்.

கடந்த காலங்களில் நடந்த போராட்டங்களினால் உயிர் நீத்த உறவுகளின் கனவு நனவாக வேண்டுமானால் எமக்கான எமது அரசியல் அபிலாசைகளை முழுமை செய்யக்கூடிய ஒரு நிரந்தரத்தீர்வு வேண்டும் அதுதான் த.தே.கூட்டமைப்பின் முதல் நடவடிக்கையாகும் என்றார். (ற.ரி4)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சி காரியாலயங்கள் திறப்பு

மன்னார்.ஜன.27

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதின்மூன்று கட்சிக் காரியாலங்கள் அண்மையில் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் மற்றும் அரச தலைவரின் பிரத்தியேக செயலாளர் சேனக்க அபேகுணசேகரவும் இணைந்து அலுவலகங்களை திறந்து வைத்தனர்.

தொடர்ந்து மன்னாரில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டமும் நேற்று இடம்பெற்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மன்னாரில் துரித வளர்சி கண்டு மக்களிடம் பலத்த வரவேற்பை பெற்றுள்ளது.

பல உள்ளூராட்சி மன்றங்களை இலகுவாக கைப்பற்றும் அளவுக்கு எமது கட்சி மக்களுடைய பேரபிமானத்தைப் பெற்றிருக்கிறது. என நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் காதர் இதன்போது தெரிவித்தார்.

எமக்குரிய ஆதரவைக் காணும் பொழுது மன்னாரின் துரித அபிவிருத்தி எமது கண்களில் தெரிகிறது. அரச தலைவர் எம்மீது கொண்ட நம்பிக்கை வீண்போகவில்லை மன்னாரில் நாம் பெறும் வெற்றிக்குப் பின்னால் வரலாறு காணாத முன்னேற்றத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உங்களுக்கு வழங்கும் என்று அரச தலைவரின் பிரத்தியேக செயலாளர் சேனக்க அபேகுணசேகர தெரிவித்தார். (ற.ரி2)



# சமூகத்துக்காகவே நாங்கள் முன் நிற்போம்



திருகோணமலை.ஜன.27

மக்கள் மற்றும் எமது சமூகத்துக்காக நாங்கள் என்றும் முன் நிற்போம். இவ்வாறு தேசிய மகளிர் அணித் தலைவி டாக்டர் ஹப்ஸா முனாசிக் தெரிவித்தார்,

பெரியாற்றுமுனை பகுதியில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பில் பெண்களுடனான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சித் தேர்தலில் எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இப் பகுதியிலும் போட்டியிடுகிறது. இம் முறை பெண்களுக்கான ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் நாட்டின் ஜனநாயகத்துக்கு முதன்மையளிப்பதுடன் பெண்களின் அரசியல் பங்குக்கு வழிவகுக்கின்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்கட்சிக்கு வாக்களிப்பதனால் பெண்களின் பொருளாதார வாழ்க்கை தரத்தை உயர்த்த எத்தனித்துள்ளோம்.

பொருளாதார தடைகளை தகர்த்தெறிந்து பெண்களுக்கான சுயதொழில் வழிகாட்டல்களையும் பல்வேறு அபிவிருத்திகளையும் வேட்பாளர் நிஸார்தீன் முஹம்மட் ஊடாக மேற்கொள்ளவுள்ளோம்.

இதற்காக எமது கட்சியின் தலைவர் ரிசாத் பதியுதீன் பெரும் நிதியை எதிர்காலத்தில் ஒதுக்கீடு செய்யவுள்ளார். உங்களின் பிரதேச நலன்களை மக்களுடைய அபிலாஷைகளை எமது தேசிய தலைமை அறிந்துள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்கட்சிக்கு வாக்களிப்பதனால் முஸ்லிம் சமூகத்துக்கு விமோசனம் கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. என்றார். இதில் கட்சியின் தேசிய அமைப்பாளரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்துல்லா மஹ்ரூப் கலந்து கொண்டார். (ற.ரி2,40)

# மு.கா.வுக்கு தாவிய பெரமுனவினர்

மட்டக்களப்பு.ஜன.27



முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தாமரை மொட்டு அணியின் ஏறாவூர் நகர சபைக்கான வேட்பாளர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு மாறியுள்ளனர்.

இந்த திடீர் மாற்றம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் முன்னிலையில் ஏறாவூரில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றது.

ஏறாவூர் நகரின் திட்டமிட்ட பெரு நகர அபிவிருத்திக்கான குறிக்கோளை முன்னாள் முதலமைச்சர் கொண்டிருப்பதால் தாங்கள் இந்த ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் அணியில் இணைந்து கொண்டிருப்பதாக அக்கீல் அர்சாத் தெரிவித்தார்.

தாமரை மொட்டுக் கட்சியின் தலைமைகள் ஏறாவூர்ப் பகுதியில் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடும் அந்தக்கட்சி சார்பிலான அபேட்சகர்களை புறக்கணித்து விட்டிருப்பதாக அதிருப்தியாளர்களான வேட்பாளர்கள் தெரிவிக்கின்றனர். (ற.ரி4.46)

# தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட சமுர்த்தி ஊழியருக்கு மாற்றல்

புத்தளம்.ஜன.27

தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர். உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் புத்தளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தனது அண்ணிக்கு வாக்களிக்குமாறு கோரி தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டமை, சுவரொட்டிகளை ஒட்டியமை மற்றும் கையேடுகளை வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இதனையடுத்து. குறித்த சமுர்த்தி உத்தியோகத்தர் பள்ளம பிரதேச செயலக காரியாலயத்தில் இருந்து புத்தளம் பிரதேச செயலாளர் காரியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் மாவட்ட செயலாளரும், தெரிவத்தாட்சி அதிகாரியான என்.எச்.எம் சித்ரானந்த இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் சுவரொட்டிகள் ஒட்ட தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை மீறி சுவரொட்டிகளை ஒட்டிய சம்பவம் தொடர்பில் தேர்தல்கள் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (ற-ரி2)

*சிறிலங்கா பொதுஜன கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நுவரெலியா கெலேகால கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் முன்னாள் மாநகரமுதல்வரும் வேட்பாளருமான மகிந்த தொடம்பேகமகேயும் வேட்பாளர்களும் கலந்து கொண்டனர். (ற,ரி4)*



# தென்மராட்சியில் அஞ்சல் வாக்களிப்பு

தென்மராட்சி ஜன. 27

உள்ளூராட்சி தேர்தலின் அஞ்சல் வாக்களிப்பு தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினமும், நேற்றும் அமைதியாக நடைபெற்றன.

அரச அலுவலகங்களில் தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் அஞ்சல் வாக்களிப்புக்கு விண்ணப்பித்த அலுவலர்கள் தமது வாக்குகளை அளித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. வாக்களிப்புகள் இடம்பெற்ற இடங்களில் கட்சிகளின் வேட்பாளர்கள் எவரையும் காணமுடியவில்லை. உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் போன்றோர் இரு தினங்களும் வரிசையில் நின்று வாக்களித்ததைக் காணமுடிந்தது.

சில அலுவலகங்களில் நேற்றுமுன்தினம் அஞ்சல் வாக்களிப்பு முடிந்ததும் தேர்தல் அலுவலகத்துக்கு வாக்குச்சீட்டுக்களை கொண்டு சென்றதையும் காணமுடிந்தது. (எ-9)

# புத்தூர் பெரும்பாக விவசாயிகளுக்கு

# 2017இல் ரூ.16.33 மில்லியன் உரமானியம் வழங்கப்பட்டது

அச்சுவேலி,ஜன.27

**புத்தூர் பெரும்பாக கமநல சேவை நிலையப் பிரிவில் கடந்த வருட பெரும் போக பயிர்ச்செய்கைக்கான உரமானியமாக 16.33 மில்லியன் ரூபா விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.**

தாழ்நிலப்பயிர்செய்கையான நெற்பயிர்ச் செய்கைக்கு 05.34 மில்லியன் ரூபாவும் மேட்டுநிலப்பயிர்ச்செய்கையான உப உணவுப் பயிர்செய்கைக்கு 10.99 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டன என பெரும்பாக கமநல சேவை நிலையப் பொறுப்பதிகாரி இ.செ.சுகந்தராஜி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் கூடியளவு விவசாய நடவடிக்கை மேற்கொள்ளும் பிரதேசமாக புத்தூர் கமநல சேவை நிலையம் காணப்படுகின்றது.

பெரும்போக தாழ்நில பயிர்செய்கையாக நெற்பயிர்ச் செய்கை 392.61 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. 890 விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 5.34மில்லியன் ரூபாவரையில் வழங்கப்பட்டுள்ளது. பெரும்போக உப உணவுப் பயிர்ச்செய்கையில் 3,221 விவசாயிகள் ஈடுபட்டனர். மேட்டுநிலப்பயிர்ச்செய்கை 870.18 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், கத்தரி, கோவா,கரட்,கறிமிளகாய், பீற்றூட், பயிற்றை உள்ளிட்ட பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன-என்றார். (எ-21)

# இறால் பிடிப்பில் மீனவர் ஆர்வம்

யாழ்ப்பாணம்.ஜன.27

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கடல் ஏரியில் இறால் பிடிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் இறால் பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த கடல் ஏரியில் இறால்களின் பெருக்கம் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. இறால்கள் பிடிப்பதற்கு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது இந்த இறால் பிடிப்புப் பருவம் ஆரம்பமாகியுள்ளதால் கூடுதலான மீனவர்கள் இறால் பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர். கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி,முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பிரதேச மீனவர்கள் இறால் பிடிப்பில் ஆர்வம் காட்டி வருகின்றனர். (17)

# கொள்கை விளக்கக் கூட்டமும் வேட்பாளர் அறிமுக நிகழ்வும்

வலி.தென்மேற்கு.ஜன.27

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் ஒரே மேடையில் 7அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களின் கொள்கை விளக்கக் கூட்டமும் வேட்பாளர் அறிமுகமும் கட்டுடை சனசமூக நிலையத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி,தமிழர் விடுதலைக் கூட்டணி,·சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுஜன பெரமுன ஆகிய ஏழு அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன.

28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட இந்தப் பிரதேசம் 17 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சுமார் 37 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட இத் தேர்தல் தொகுதியில் 7 கட்சிகளைச் சேர்ந்த வட்டார ரீதியாக 119 வேட்பாளர்களும் விகிதாசார ரீதியாக 98 வேட்பாளர்களுமாக 217 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். சுமார் 3,200 வாக்காளர்களைக் கொண்ட 10ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் 7 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களின் கொள்கை விளக்கக் கூட்டமும் வேட்பாளர் அறிமுகமும் நிலையத் தலைவர் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது. சகல ஆதரவாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-115)

# வீதியை சீரமைத்து தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம். ஜன.27

நீர்வேலி தெற்கு விவசாய வீதியை சிரமம் இன்றி போக்குவரத்துச் செய்வதற்கு வசதியாக சீரமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக சீரமைப்பு இன்றி சேதப்பட்டிருக்கும் வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இராச வீதியில் கருணாலய வீதி வரைக்குமான இந்த வீதி சீரமைப்பு இன்றியும் வீதியோரம் பற்றைகளால் மண்டியும் உள்ளது.இந்த வீதியால் விவசாயிகள் தமது விவசாய நிலங்களில் விளையும் விவசாய உற்பத்திகளை எடுத்துச் செல்வதற்கும் சிரமப்பட்டு வருகின்றனர்.இந்த வீதியை சீரமைத்துத் தருமாறு பல தடவைகள் வலி.கிழக்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரைக்கும் சீரமைப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று விவசாயிகள் விசனம் தெரிவித்தனர். (எ.17)



வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசாரத் திணைக்களம், யாழ் மாவட்ட கலை கலாசாரப் பேரவை இணைந்து கடந்த டிசெம்பர் மாதம் நடத்திய பண்பாட்டுப் பெருவிழாவில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த மூத்த எழுத்தாளர் சந்திரா தனபாலசிங்கம் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனால் 'யாழ் முத்து' விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். (எ-ம)

# மீனவர்கள் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் இந்த ஆண்டுக்குரிய அனுமதிப்பத்திரத்தை மீளவும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இதுவரைக்கும் தமது கடற்றொழில் உபகரணங்களைப் பதிவு செய்யாதவர்களும் உடனடியாகப் பதிவு செய்யுமாறு கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களம் கேட்டுள்ளது. கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் தமது அனுமதிப் பத்திரத்தை வருடாந்தம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். அந்தவகையில் 2018ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

# மாணவர் மதிப்பளிப்பு

கொழும்புத்துறை, ஜன.27

தாங்கும் கரங்கள் அமைப்பின் மக்கள் நலவாழ்வுச் சங்க ஏற்பாட்டில் மாணவர் மதிப்பளிப்பு நிகழ்வு யாழ்ப்பாண மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்க காப்பாளர் அருட்பணி ஸ்ரனி அன்ரனி அடிகள் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சட்டத்தரணி ஜொனி மதுரநாயகமும் சிறப்பு விருந்தினராக அருட்பணி ஜே.மவுவிஸ் அடிகளாரும் மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல் துறை உதவி விரிவுரையாளர் சிமியோன் புளோரிடாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-135)

# ஏகாதசி விரத பூசை

யாழ்ப்பாணம்.ஜன.27

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் ஏகாதசி விரத பூசை இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு சிறப்பு அபிசேக ஆராதனைகளுடன் பூஜைகள் ஆரம்பமாகி 9 மணிக்கு சமய நிகழ்ச்சிகள் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து காலை 10 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று நாராயணசுவாமி பூமாதேவி ஸ்ரீதேவி சமேதராக அலங்காரத் தண்டிகையில் வீதியுலா வருவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அதிபர் ல.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனையின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரதீபா கிருஷ்ணபிள்ளையும் சிறப்பு விருந்தினராக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரி கிளை முகாமையாளர் கேசவன் பிரதீபனும் கலந்து கொண்டனர். (எ-9)

# வீதியோட்ட நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஜன.27

யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வீதியோட்ட நிகழ்வு இடம்பறவுள்ளது. நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறும் என பாடசாலை அதிபர் எம்.இந்திரபால தெரிவித்துள்ளார். (எ-4)

# ஆண்டு நிறைவும் பொங்கல் விழாவும்



சாவகச்சேரி நுணாவில் மேற்கு வான்மதி சனசமூக நிலையத்தின் 15ஆவது வருட நிறைவு விழாவுடனான பொங்கல் விழா நிலைய முன்றலில் அண்மையில் இடம்பெற்றது. நிலையப் பொருளாளர் க.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை வருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியை ரஞ்சிதா ரகுநாத் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கடந்த வருடம் நுணாவில் பகுதியில் இடம்பெற்ற சாலை விபத்தில் சாவடைந்த நிலைய அங்கத்தவர் கந்தையா மோகனராஜின் குடும்ப மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக கிராம மக்களால் சேகரிக்கப்பட்ட நிதி வங்கியில் வைப்பிலிட்ட சான்றிதழும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## வலி.தென்மேற்கு பிரதேசத்துக்கு தனியான தேர்தல் அறிக்கை

வலிகாமம்,ஜன.27

வலி.தென்மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு தனியான தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான ஒழுங்குகளை வலி.தென்மேற்கு பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

பிரதேச சபை தேர்தலை அடுத்து எதிர்வரும் காலங்களில் மக்களுக்குத் தேவையான வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக ஆராயும் ஆலோசனைக் கூட்டம் கட்டுடையிலுள்ள ஒரு வீட்டில் அண்மையில் இடம் பெற்றுள்ளது. முன்னாள் தவிசாளரும் தற்போதைய வேட்பாளருமான அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் சம்பந்தமான கருத்துக்களை வழங்கினார்.

கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் 17 வேட்பாளர்களும் விகிதாசார முறையின் கீழ் தெரிவு செய்யப்படவிருக்கும் 14 வேட்பாளர்களும் கலந்து கொண்டு தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்.

உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கமைய தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கான ஒழுங்குகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டுள்ளது. (எ-115)

## வலி. தென்மேற்கில் 6 வீதிகள் புனரமைப்பு செய்யப்பட வேண்டும்

### நவாலி ஹேமலதா சனசமூக நிலையச் செயலாளர் கோரிக்கை

வலிகாமம்,ஜன.27

வலி.தென்மேற்கு மானிப்பாய் உப அலுவலகத்துக்கு உட்பட்ட வகையில் நவாலி வடக்கில் நான்கு வீதிகளும், நவாலி தெற்கில்-இரண்டு வீதிகளுமாக மொத்தம் ஆறு வீதிகள் உடன் மீள்சீரமைப்புச் செய்யவேண்டும். இவ்வாறு நவாலி ஹேமலதா சனசமூக நிலையச் செயலாளர் லக்சிகா ஜெயசுதன் கேட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக மீள்சீரமைப்புச் செய்யப்படாத நிலையில் பல வீதிகள் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு அழிவடைந்துள்ளன. இதில் நவாலி வடக்கு கிராமத்தில் நவாலி வடக்கு தணை வீதி நவாலி வடக்கு இலகடி வீதி, நவாலி வடக்கு உடுவில் வீதி, நவாலி வடக்கு திருச்சபை வீதி. நவாலி தெற்கு கிராமத்தின் கீழ் நவாலி தெற்கு தம்பனை மாரியம்மன் வீதி நவாலி தெற்கு கொத்துக்கட்டி களையோடை கண்ணகை அம்மன் வீதி ஆகிய 6 வீதிகளுக்கு வலி.தென்மேற்கு பிரதேச சபை முன்னுரிமையளித்து அழிவடைந்த வீதிகளை மீள்சீரமைத்துத் தருமாறு கோரியுள்ளனர்.

இதேவேளை நவாலி வடக்கு வீதி, நவாலி தெற்கு இராஜராஜேஸ்வரி ஆகிய இரு வீதிகளும் 'ஐ' திட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்டதால் 2018இல் மேற்படி வீதிகளை ஒருங்கிணைந்த கிராமிய அடிப்படையிலான 'ஐ' திட்டத்தின்கீழ் மேற்படி வேலைகள் இடம்பெறுவதனை துரிதப்படுத்த வேண்டும். (எ-50)



வடமராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் 3 ஆயிரம் பனம் விதைகளும் ஆயிரக்கனக்கான புளியம் விதைகளும் கரணவாய் கப்பூது கிராமத்தில் இறந்தபிட்டிகுறிச்சியில் அண்மையில் நடுகை செய்யப்பட்டன. நிறுவனத்தின் தலைவர் செ.ஸ்ரீநிவாசன், பொறியியலாளரும் திட்ட நிபுணருமான க.யோகேஸ்வரன் ஆகியோர் விதைகளை நட்டு வைப்பதைப் படத்தில் காணலாம். (எ-173)

### பிரான்பற்று விவசாய சம்மேளனம்

# பிடித்து வைத்தல் நிதியை உடன் விடுவிக்க வேண்டும்

### விவசாயிகள் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜன.27

12 கிணறுகள் மீள்புனரமைப்பு தொடர்பில் பிரான்பற்று விவசாய சம்மேளனம் பிடித்து வைத்தல் நிதியை விடுவிக்க வேண்டும் என பிரிவு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சண்டிலிப்பாய் கமநல சேவைப் பிரிவுக்கு உட்பட்ட பிரான்பற்று விவசாய சம்மேளனத்துக்கு உட்பட்ட வகையில் 12 விவசாயப் பயனாளிகளின் கிணறுகள் 2016 ஒக்ரோபரில் மீள் சீரமைப்புச் செய்யப்பட்டன.

இதற்கான பிடித்து வைத்தல் நிதி உட்கட்டுமானம் நிறைவேறி மூன்று மாதத்தின் பின்னர் வழங்கப்பட வேண்டும். இது 2017 ஜனவரி மாதம் வழங்கப்பட வேண்டும். எனினும் குறித்த விவசாய சம்மேளனம் உரிய 12 பயனாளிகளுக்கு உரிய காலத்தில் வழங்கப்படவேண்டிய நிதி வழங்கப்படாததால் விவசாயிகள் விசனமடைந்துள்ளனர்.

இதேவேளை மேற்படி பிடித்து வைத்தல் நிதி வழங்கப்படாத நிலை குறித்து பிரான்பற்று விவசாயிகள் சம்பந்தப்பட்ட அரச கமநல நிறுவனத்தின் விவசாய போதனாசிரியரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-50)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரி முதல்வர் வே.த.ஜெயந்தன் தலைமையில் நடைபெறவுள்ள போட்டியில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்விப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் இ.சசிக்குமார், மதிப்புறு விருந்தினராக் லண்டன் பழைய மாணவர் சங்க உறுப்பினர் ச.தமயந்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-4)

## உரமானியக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது

அச்சுவேலி,ஜன.27

கடந்த வருடம் செய்கை பண்ணப்பட்ட கால போக மேட்டு நில பயிர்ச் செய்கைக்கான உரமானியக் கொடுப்பனவுகள் விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் வழங்கப்படுகின்றன. மேட்டு நிலப்பயிர்ச் செய்கையில் வெங்காயம், மிளகாய், கத்தரி, சோயா, சோளம் ஆகிய ஐந்து வகையான பயிர்ச்செய்கைக்கு உரமானியக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

உரமானியக் கொடுப்பனவாக ஒரு ஏக்கர் பயிர்ச் செய்கைக்கு 5ஆயிரம் ரூபா என்ற வகையில் ஆகக்கூடியது ஐந்து ஏக்கர் பயிர்ச் செய்கைக்கு 25 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொள்ள முடியும்.கடந்த வருடம் கால போக பயிர்ச் செய்கையில் மேயட்டு நில பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்களின் வங்கிக் கணக்கில் உரமானியக் கொடுப்பனவு வைப்பு செய்யப்பட்டு வங்கி கணக்கில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. உரமானியக் கொடுப்பனவு தொடர்பாக விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "பணமாக உரமானியம் வழங்கப்படுவதால் நில வளமும் நீர் வளமும் கணிசமான அளவு பாதுகாக்கப்படுகின்றது. உரமாக வழங்கிய காலப்பகுதியில் உரம் முழுவதும் நிலத்தில் போடப்பட்டது. இதனால் நில வளம் மற்றும் நிலக்கீழ் நீர்வளம் என்பன பாதிப்படைந்தன. தற்பொழுது விவசாயிகள் தங்களுக்கு தேவையான அளவு உரத்தை பணம் செலுத்தி கொள்வனவு செய்கின்றனர்." எனத் தெரிவித்தார். (எ-11)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக போட்டியிடும்

## வேட்பாளர்களுக்கு அரசதலைவர் கையொப்பமிட்ட சான்றிதழ்கள்

நல்லூர்,ஜன.27

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நல்லூர் தொகுதியில் நல்லூர் பிரதேச சபையின் வேட்பாளர்களாக களமிறங்கியுள்ள 23 வேட்பாளர்களுக்கும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கையொப்பம் இட்ட சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டன.

சிறிலங்கா சுதந்திரகட்சி மற்றும் ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் தலைவராக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளார்.

சான்றிதழ்கள் யாழ்ப்பாண மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் கந்தசாமி கருணாகரன் ஊடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (எ-50)

## கால்கோள்விழா

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தரம் 6 மாணவர்களுக்கான கால்கோள்விழா கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கல்லூரிச்சமூகத்தினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் சதா நிமலன் அறிவித்துள்ளார்.

## நூல் வெளியீடு

பருத்தித்துறை,ஜன.27

பா.இருகுவரன் எழுதிய 'கண்டல்காடுகள்' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெறவுள்ளது.

எம்.கே.முருகானந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

## வட்டு. விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம். ஜன. 27

மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன்மோதுண்டு தீ பிடித்து எரிந்தபோது காயமடைந்திருந்த நபரும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. வட்டுக்கோட்டையில் கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றது. ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது உடல் எரிந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தது.

அந்த மோட்டார் சைக்கிளில் சென்று படுகாயமடைந்திருந்த அராலி மத்தி வட்டுக்கோட்டையை சேர்ந்த கந்தசாமி ஜதீஸ்வரன்(வயது 31) என்பவரே நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4.8)

## 10 கிராம் ஹெரோயினுடன் இரண்டு பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம். ஜன. 27

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பேர் நேற்றுமாலை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 10 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாண சிறப்புக் குற்றத்தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 78 ஆயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொம்மைவெளி மற்றும் மாதகல் பகுதிகளைச் சேர்ந்த 32 மற்றும் 38 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேலதிக விசாரணை நடத்தப்படுகிறது. அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4.37)

## கோத்தாவின்...

சரைத் தொடர்பு கொண்டேன். அவர் அப்போது இந்தியாவில் இருந்தார். சட்டமா அதிபர் செய்த பரிந்துரைகளை மீளாய்வுசெய்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் அவரைப் பணித்தேன். இந்தக் கோவைகளை சட்டத்தரணி ஒருவருக்கு வழங்கி அதற்கேற்ற வகையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறே நான் சொன்னேன். என்ன குற்றச்சாட்டுகள்? அவற்றின் அடிப்படை என்ன? என்பதைப் பார்க்கவேண்டுமல்லவா! ஆனால், அவர் அதனைச் செய்யவில்லை. அப்படியே மூடி வைத்துவிட்டார். இதில் என்னைக் குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை". என்றார். (ற-4)

## விபத்தில்...

கிளில் வீடு திரும்பியபோதே விபத்து நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.
உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நெளுக்குளம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (ற-4)

## பொய்...

பட்டுள்ளது.
பெரும்பாலான முறைப்பாடுகள் ஆதாரமற்றவையாகவும். உதவிப் பொருள்கள் வழங்கப்படுகின்றன என்றும் கிடைத்துள்ளன. அங்கு சென்று பார்த்தால் அவ்வாறான நிலைமைகள் இருப்பதில்லை - என்றார். (ற-21)

## ஒன்றுபட்டு...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நாம் முன்னெடுக்கவுள்ளோம். நாம் சிறு கைத்தொழில் முயற்சிகளின் மூலம் நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியும். அரசால் மட்டும் இந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தி வெற்றி பெற முடியாது. தனியார் நிறுவனங்களின் பங்கும் அதிகமாக இருக்க வேண்டும். அனைவரும் அரச உத்தியோகத்தையே விரும்புகின்றார்கள். நமது நாட்டில், ஐந்தில் ஒரு பங்கினரே அரச வேலை பார்க்கின்றார்கள். நாட்டில் எல்லாருக்கும் அரச வேலை வழங்கிச் சம்பளம் வழங்க முடியாது. தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சில வேலைகளைச் செய்யவேண்டும். உலக வங்கியின் அனுசரணையுடன் நாம் சிறு கைத்தொழில் சார்பான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு வவுனியாவில் காரியாலயம் ஒன்றை அமைத்துள்ளோம். ஒவ்வொரு பிரதேசத்தின் சிறப்பியல்பு சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும். ஐந்து லட்சம் மாங்கன்றுகளை நாம் யாழ்ப்பாணத்தில் நடவுள்ளோம்.
சாதி, மத பேதமின்றி ஒற்றுமையாகச் செயற்பட்டாலே 30 வருட கால போரால் பின்னோக்கிப் போயுள்ள நாம் முன்னேறிச் செல்லமுடியும். வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். பிரேமதாச அரச தலைவராக இருந்த காலத்தில் ஆடைத் தொழிற்சாலை மூலம் 53 வீத இலாபத்தைப் பெற்றார். நாம் உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும். கடந்த கால அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பல கடன்களை பெற்றிருந்தார். அதனைச் செலுத்துவதற்கே 2022 ஆம் ஆண்டு வரையில் காலம் தேவைப்படும். வரிச் சலுகையை எப்படிப் பெற்றோமோ அதேபோல சில ஏற்றுமதி இறக்குமதி வரிகளை விலக்கியுள்ளோம். எமது அமைச்சும் பல உதவித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது - என்றார்.
நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்ப்பாணம் வர்த்தக கண்காட்சியின் இணைத் தலைவர் கோசல விக்கிரமசிங்கே, இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளின் நிர்வாகப் பணிப்பாளர் அர்ஜுன் தர்மதாச, இந்திய கொன்சுரல் ஜெனரல் எ.நடராஜன், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், யாழ்ப்பாண வர்த்தக தொழிற்துறை தலைவர் கெ.விக்னேஷ், சிறு கைத்தொழில் அமைச்சர் தயா கமகே, பன்னாட்டு வர்த்தக கண்காட்சியின் இணை நிறுவன முன்னாள் தலைவர் கெ.பூர்ணச்சந்திரன், கண்காட்சி சபை தலைவர் வினை ஆர் சர்மா, சிறுவர் விவகார அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், எஸ்லோன் நிறுவனத்தின் மூத்த முகாமையாளர் நுவான் விக்ரம பத்திரன ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ச்சியாக 2 நாள்கள் நடைபெறவுள்ள நிகழ்வில் 300 க்கும் அதிகமான காட்சிக் கூடங்கள். இந்திய முதலீட்டாளர்களின் ஐம்பதுக்கும் அதிகமான காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4.ரி)

## மாற்று...

உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
கூட்டமைப்பைப் புலிகள் உருவாக்கியிருந்தனர். அவ்வாறு உருவாக்கியவர்கள் இன்று இருந்தால் கூட்டமைப்பினருக்கு என்ன நடக்குமென்று உங்களுக்கும் தெரியும். கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட நோக்கம் சரி. தற்போது பயணித்துக் கொண்டிருக்கின்ற பாதை பிழையானது. அதை சரிப்படுத்த வேண்டிய கடமை மக்களிடம் இருக்கிறது.
மக்கள் யாருக்கு வாக்களிப்பதில்லை என்பதில் தெளிவாக இருக்கின்றார்கள். கூட்டமைப்புக்கு வாக்களிப்பதில்லை என்பதில் அவர்கள் தீர்மானமாக இருக்கின்றார்கள்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பாடம் புகட்ட வேண்டுமாக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வாக்களிக்கக் கூடாது. கூட்டமைப்புக்கு வாக்களிப்பதும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதும் ஒன்றுதான்.
சபையைக் கைப்பற்றுவதற்கு பெரும்பான்மை கிடைக்காவிட்டால், கூட்டமைப்புடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்கும்.
ஆட்சி அமைப்பதற்கு சில வேளைகளில் யாருக்குமே பெரும்பான்மை கிடைக்காத சந்தர்ப்பமும் ஏற்படலாம். கூட்டமைப்புக்கு எதிரான அணியை உருவாக்க வேண்டும். பிரதேச சபைகளில் நாங்கள், தமிழ்த் தேசியப் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி. இணைந்து கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணியை உருவாக்க வேண்டும் - என்றார். (ற-5)

## தேர்தல்...

மன்னார் மாவட்டத்தில் 16 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வர்த்தக வாணிப அமைச்சால், மன்னார் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையில் பணியாற்றுவதற்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நியமனங்கள் கடந்த 15ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளன., அப்பட்டமான தேர்தல் விதிமீறல் என்பதால் இது தொடர்பில் மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்திடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளேன் - என்றார். (ற-5)

## சிறைச்சாலை...

என்று குற்றஞ்சாட்டி, குறித்த வாகனத்தில் பயணித்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் வீதியோரம் கடை ஒன்றுக்கு அருகில் வைத்துச் சிறுவனைத் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அது பற்றிய ஒளிப்படங்கள் இணையத்தளங்களில் வெளியாகியிருந்தன.
அது தொடர்பான காணொலியும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 4 பேர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுச் சரணடைந்தனர். அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். ஆரம்ப விசாரணைகளின் பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். நால்வரும் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ற-4,35)

## தமிழ்...

மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.
யாழ்ப்பாணம் வர்த்தகம் மற்றும் உற்பத்தியாளர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் 9ஆவது பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது. அதன் ஆரம்ப நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பொது நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
**இந்த நிகழ்வு வடக்கில் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்த விரும்புகின்ற நிறுவனங்களுக்கான ஒரு உள்நுழைவு நிகழ்வாகக் கருதப்படுகின்றது.** இருந்தாலும் முதலமைச்சர் என்ற வகையில், இவை தொடர்பில் வடக்கு மாகாணத்தின் இன்றைய நிலை பற்றிக் குறிப்பிட வேண்டியுள்ளது.

**பொறுப்பு**

இலங்கை மத்திய வருவாயுடைய நாடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குறியீட்டினுள் வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணங்களை வகைப்படுத்த முடியாதுள்ளது. போரால் முற்றாக அழிவடைந்த பிரதேசங்கள் அடிப்படை மட்டத்துக்கும் மிகக் கீழேயே இருக்கின்றன. இவற்றை அடிப்படை மட்டத்திற்கேனும் கொண்டுவருவதற்கு விரைந்து செயற்பட வேண்டிய பெரும் பொறுப்பு கொழும்பு அரசுக்கும் மாகாண அரசுகளுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் பன்னாட்டு முதலீட்டாளர்கள் ஆகியோரைச் சார்ந்துள்ளது.

**நிதிச் சுரண்டல்**

இந்த நாட்டில் போர் நடைபெற்றவேளையிலும் அவர்களின் கைகளில் போதுமான பணம் இருந்தது. போர் முடிவுற்று இயல்பு நிலை திரும்பியதும் மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டார்கள். ஆனால் அது நீடிக்கவில்லை. பன்னாட்டுக் கம்பனிகளும் நிதி நிறுவனங்களும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் உள்நுழைவும் இங்குள்ள நிதி மற்றும் மூலதனங்களை முழுமையாகச் சுரண்டிச் சென்றுவிட்டன. நிதி நிறுவனங்களின் ஆசை வார்த்தைகள் எம்முள் பலரைக் கடனாளிகள் ஆக்கின. அவர்களின் மிகை வட்டி அறவீடுகளின் காரணமாக அனைத்துத் தர மக்களும் இன்று கடனாளிகளாகக் காணப்படுகின்றனர். சிலர்உயிரை மாய்த்துள்ளனர்.

**சிறுதொழிலே சாத்தியம்**

வடக்கு மாகாண பூமியின் தட்ப, வெட்ப சூழ்நிலைகளைக் கருத்தில் எடுக்கும்போது இந்தப் பகுதிகளில் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதே சாலச்சிறந்ததாகத் தென்படுகிறது. இந்தத் தீபகற்பம் ஒரு பாரம்பரிய முறையின் அடிப்படையிலான விவசாய பூமியாகவும், மீன்பிடி தொழிலுக்கேற்ற சூழலாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஆறுகளோ, நீர்வீழ்ச்சிகளோ இல்லை. நிலத்தடி நீரை நம்பியே மக்கள் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். பெருமளவிலான தொழில் முயற்சிகள் எதனையும் இங்கு மேற்கொள்வது கடினம். பெரும் ஆலைகளையுந் தொழிற்சாலைகளையும் எமது மக்கள் வரவேற்க மாட்டார்கள்.

**மதிநுட்பம் தேவை**

இங்குள்ள மக்கள் பாரம்பரிய தொழில் முறைகளில் தொடர்ந்தும் இருக்க விரும்புபவர்கள். ஆனால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் நாட்டம் காட்டுபவர்களாக இருக்கின்றார்கள். கல்வியில் சிறந்து விளங்குகின்ற போதிலும் அவர்களின் தொழில் முயற்சிகள் சிறப்பாக அமையாத காரணத்தால் சிலர் தவறான வழிகளில் சென்று வன்முறைகளில் ஈடுபடுவதை அவதானிக்கலாம். பிறரின் உடல், பொருள்களுக்குச் சேதம் விளைவிக்கும் சில இளைஞர்கள் மதிநுட்பத்துடன் நோக்கப்பட்டு சரியான பாதையில் செல்லவிடப்பட வேண்டும். அவர்கள் தாமாகத்தான் இயங்குகின்றார்களா என்ற கேள்வி சதா எழுந்துகொண்டே இருக்கிறது.
இங்குள்ள இளைஞர்களில் சில வீதத்தினரைத் தவிர ஏனையவர்களுக்கு அரச நிறுவனங்களில் தொழில் கிட்டுவதில்லை. நிதி வசதிகள் உள்ள சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகின்றனர். ஏனையோர் தனியார் நிறுவனங்களிலோ அல்லது தொழில் முயற்சிகளிலோ ஈடுபடுவதற்கான தொழில் பயிற்றுவிப்பு நிலையங்கள் குறைந்திருக்கும் நிலையில் இவர்கள் தொழில் முயற்சிகளில் ஈடுபட முடியாதுள்ளனர். சிறிய, மத்தியதரத் தொழிற்சாலைகளையும் உற்பத்தி நிறுவனங்களையும் கூடுதலாக அமைக்கும் பட்சத்தில் இந்த இளையோருக்கான வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். அவர்களின் வருவாய் மட்டமும் அதிகரிக்கும். இதன் மூலமாக இங்கு முதலீடு செய்ய விரும்புகின்ற நிறுவனங்களும் முதலீட்டாளர்களும் கூடிய நன்மைகளைப் பெறுவதுடன் இங்குள்ள மக்களின் வருவாய்களும் அதிகரிக்கப்படும்.

**பொலித்தீன் பாவனை**

பொலித்தீன் பாவனை தடை பற்றி மிகப் பெரியளவில் பரப்புரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதும் அவற்றுக்கிணையான மாற்று உபயோகப் பொருள்கள் அறிமுகப்படுத்தப்படவில்லை. அவை சந்தைகளில் விற்பனைக்குக் கொண்டுவரப்படாமை பெரும் குறைபாடே. மாற்றீடாகத் தயாரிக்கப்படுகின்ற பொருள்களின் விலை மற்றும் பாவனைத் தரம் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. மிகக் குறைந்த விலையில் கிடைக்கப் பெற்ற பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக பலமடங்கு கூடிய விலையில் மாற்றீட்டுப் பொருளை உற்பத்தி செய்வது பயனற்றது. வாழையிலை, வாழை நார் போன்றவை இங்கு போதியளவில் கிடைப்பதால் மாற்றீடு விரைவில் சந்தைக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம். இவற்றைக் கருத்திற்கொண்டு எமது உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல்கள் மேம்படுத்தப்படுவதுடன் அவற்றின் பாவனைத் தரங்கள் உறுதிப்படுத்தப்படல் அவசியம். - என்றார். (ற-4)

## உறுதிமொழிகளை...

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு வவுனியா நீதிமன்றில் நடைபெற்றுவந்தது. அந்த வழக்கு அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது. வழக்கின் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் என்று கூறியே வழக்கு இடமாற்றப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசியல் கைதிகள் மூவரும் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வழக்கு மாற்றப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர், தமிழ் அரசியல்வாதிகள் ஆகியோரின் உறுதிமொழியை அடுத்து தமிழ் அரசியல் கைதிகள் தமது உணவு ஒறுப்பைக் கைவிட்டனர்.
மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாட்சிகளில் ஒருவர் வவுனியா நீதிமன்றில் சாட்சியமளிக்க இணங்கியுள்ளார். மற்றையவர் வெளிநாட்டில் உள்ளதால் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று சட்ட மா அதிபர் திணைக்களத்தினர் கூறினர். வழக்கு தவணையிடப்பட்டது. ஒவ்வொரு தவணையிலும் இவ்வாறே கூறப்படுகின்றது.
மேன்முறையீட்டு நீதிமன்றில் உள்ள வழக்கு முடியும் வரை அரசியல் கைதிகளின் வழக்கு அநுராதபுரம் நீதிமன்றிலேயே தவணையிடப்படும் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். கடந்த 22ஆம் திகதி அநுராதபுரம் நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அரச சட்டத்தரணி தான் விசாரணைக்குத் தயார் என்று மன்றில் கூறியுள்ளார். பிரதிவாதிகள் மூவரும் சட்டத்தரணிகளை வழக்குக்கு அழைத்துவருவதாகக் கூறியும் இதுவரை அழைத்து வரவில்லை என்றும் நீதவானின் கவனத்துக்குக் கொண்டு சென்றார். பிரதிவாதிகள் சட்டத்தரணிகளை அழைத்துவராமை தொடர்பில் பிரதிவாதிகளிடம் நீதவான் கேள்வி எழுப்பியுள்ளார்.
மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு உள்ள விடயத்தை பிரதிவாதிகள் தெரியப்படுத்தினர். வழக்கு ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீண்டும் எதிர்வரும் 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. எமது விடயம் தொடர்ச்சியாக இழுத்தடிக்கப்படுகின்றது. என்ன செய்வது என்பது தெரியாத நிலையில் உள்ளோம் என்று தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்தனர். (ற-5)

## விடுவிக்காத...

அமைக்கப்படவுள்ளன. தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 7 வாக்களிப்பு நிலையங்களும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலத்தில் 6 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.
இந்த வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கவுள்ள மக்களை அவர்களது பிரதேசங்களிலிருந்து ஏற்றி வருவதற்குரிய போக்குவரத்து ஒழுங்குகளும் தேர்தல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றது என்றும் தெரியவருகின்றது. (ற-5)

# வெகுண்டெழுந்த மைத்திரி

## ஐ.தே.கட்சி மீது கடும் சாடல்

கொழும்பு, ஜன.27

தற்போதைய அரசியல் நிலமைகள் தொடர்பாக நேற்றுப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும், ஊடக நிறுவனங் களின் முக்கியஸ்தர்களுக்கும் விளக்கமளித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் விளாசித் தள்ளினார். அதேபோல் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் இப்போதைய நாட்டு நிலைமைகளுக்குப் பொறுப்புக் கூறவேண் டும் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

**ரூபா பத்து ரில்லியன் கடனுக்கு என்ன ஆனது?**

""பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பக்கங்கள் குறைவாக நாடாளுமன்றத்தில் கொடுக்கப்படவில்லை. எதிர்க்கட்சிகளின் அந்தக் குற்றச்சாட்டுகளை நான் நிராகரிக்கிறேன். இரண்டு லொறிகளில் ஏற்றக்கூடிய அளவுக்கு அந்த விசாரணையின் துணை ஆவணங்கள் உள்ளன. அவற்றைக் கவனமாகக் கையாண்டு இரகசியங்களைப் பாதுகாக்கவேண்டிய தேவையும் உள்ளது. நான் நன்கு ஆராய்ந்து சட்ட வல்லுநர்களுடன் பேசிய பின்னரே எனது கருத்தை வெளியிட்டேன். நான் சொன்னதெல்லாம் உண்மை. எதிர்காலத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முக்கியமான ஆவணங்கள் தேவை என்பதால் அவற்றைப் பாதுகாக்கவேண்டிய தேவை உள்ளது.

இரண்டு அறிக்கைகளும் ஒரே நேரத்தில் ஓரிரு நாள் இடைவெளியில் சமர்ப்பிக்கப்பட்டதால் நாங்கள் ஏதோ திட்டமிட்டு இவற்றைச் செய்ததுபோல் ஒரு தோற்றம் வரலாம். ஆனால், நாங்கள் எதையும் அப்படி திட்டமிட்டுச் செய்யவில்லை. இந்த அறிக்கை வந்த பின்னர் இரண்டு தரப்பினரும் மௌனம் காக்கின்றனர். இரண்டு தரப்பினரும் பேசி முடிவெடுத்துவிட்டதால் நாடாளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்த முடியாதுள்ளது. இவர்கள் முடிந்தால் அந்த விவாதத்தை நடத்திக் காட்டுமாறு நான் ஒரு சவாலாகக் கூற விரும்புகிறேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்த விவாதத்தை நடத்தவேண்டுமென கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது கேட்டது. ஆனால், பெரும்பாலான தரப்பினர் இதற்கு அனுமதி வழங்கவில்லை. இரண்டு தரப்பினரும் தங்களைப் பாதுகாக்க முயற்சிக்கின்றனர்.

கடந்த பத்து வருட காலத்தில் வெளிநாட்டிலிருந்து பத்து ரில்லியன் ரூபா அதாவது, ஒரு இலட்சம் கோடி ரூபா கடனாகப் பெறப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் ஒன்பது ரில்லியன் ரூபாக்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. திறைசேரியில் இதற்கு ஓர் ஆதாரமும் இல்லை. கணக்கும் இல்லை. அமைச்சரவையில்கூட முழு வெளிநாட்டுக் கடன் எவ்வளவு பெற்றிருக்கிறோம் எனக் கேட்டுள்ளேன். ஆனால் பதில் இல்லை.

திறைசேரியின் அனுமதியின்றி அரசின் அனுமதியின்றி அந்தப் பணம் தனியார் நிறுவனங்களுக்குச் சென்றுள்ளது. மிகவும் நுட்பமாக இது நடந்துள்ளது. அரசின் வருமானம், பொருளாதாரம் வீழ்ச்சியடைய இதுவும் ஒரு காரணம். வெளிநாட்டுக் கடன்கள் குறித்து வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டாலும் அவற்றுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. இவற்றுக்கும் ஆணைக்குழுக்களை நியமிப்பதா? ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கு அளவில்லையா? இவற்றுக்கு ஒரு தீர்வைக் காணவேண்டும்" என்று அரச தலைவர் தெரிவித்தார்.

**வாக்கு எண்ணும் இடங்களில் கடும் பாதுகாப்புக்கு ஏற்பாடு**

தேர்தல் நீதியான முறையில் நடத்தப்படவேண்டும். அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறு நான் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரைக் கேட்டுள்ளேன். வாக்குப்பெட்டிகளைக் கொண்டுசெல்லும்போது பாதுகாப்பு வழங்குவது மற்றும் பாதுகாப்பான இடங்களில் வாக்குகளை எண்ணும் பணிகளைச் செய்வது போன்ற விடயங்களை முக்கியமாகக் கவனிக்குமாறு நான் கேட்டுள்ளேன். எல்லாவற்றுக்கும் பொலிஸ் பாதுகாப்பை வழங்கமுடியாது. அதற்காக இராணுவத்தினரையும் தேர்தல் வேலைகளில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்த முடியாது. முன்னைய காலங்களில் அமைதியாகத் தேர்தல் நடந்தது. அப்போது போட்டி, பொறாமைகள் இல்லை. இப்போது ஒரு தேர்தலில் வேட்பாளர் போட்டியிட்டு தோல்வியடைந்து அவரே அமைதியாக இருந்தாலும் அவரது ஆதரவாளர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். அதுதான் நிலமை.

போரின் பின்னர் இந்தளவு சபைகளுக்கு தேர்தல் ஒரே தினத்தில் நடத்தப்படுகிறது. சிறி லங்கா சுதந்திரக் கட்சி பல இடங்களில் பலர் வேறு சின்னங்களில் கேட்டாலும் இறுதியில் கட்சிக்கே வெற்றி. தொண்டமான் சேவலிலும், அதாவுல்லா குதிரையிலும் கேட்டாலும் இறுதியில் எமது கட்சிக்கே அது பலமாக இருக்கும். தேர்தலை அமைதியாக நடத்தவேண்டும். நீதியாக நடத்த அரசு ஒத்துழைக்கும் என்றும் அரச தலைவர் குறிப்பிட்டார்.

ரவி முயல்வது தற்கொலைக்குச் சமன்

பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக்குழு அறிக்கை தவறானது எனக் கூறி விளக்கமளிக்க ரவி கருணாநாயக்க முயல்வது தற்கொலைக்கு ஒப்பானது. நாடாளுமன்றத்தில் அதனைச் செய்யவேண்டாம் என்று தலைமை அமைச்சர் ரணில், ரவியிடம் கூறினார். பின்னர் சபாநாயகரும் அதற்கு அனுமதி வழங்கவில்லை. பிணைமுறி மோசடி குறித்து நான் சொன்னது தவறென ரவி சொல்கிறார். நான் வல்லுநர்களுடன் நன்கு ஆராய்ந்து அதன் பின்னரே எனது நிலைப்பாட்டை அறிவித்தேன்.

எனது கொள்கைகளால் நான் பலரின் எதிர்ப்பை சம்பாதித்திருக்கிறேன். அன்று புகையிலைக் கம்பனிகளுக்கு எதிராகவும் மருந்துக் கம்பனிகளுக்கு எதிராகவும் நான் செயற்பட்டதால் பெரும் கம்பனிகளின் எதிர்ப்பை நான் சம்பாதித்துள்ளேன். கொள்கை காரணமாகவே நான் மகிந்தவிடமிருந்து வெளியேறினேன். அவருடன் நான் தனிப்பட்ட கோபத்தில் வெளியேறவில்லை. மோசடி மற்றும் ஊழல்களை ஒழிப்போம் என தேர்தல் காலங்களில் நான் கூறினேன். ஆனால், ஆட்சிக்கு வந்து இரண்டே மாதங்களில் அரச வளம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இவற்றை நாம் அனுமதிக்கமுடியாது. யார் என்ன சொன்னாலும் நான் எனது நாட்டுக்கான கடமையைச் செய்வேன். என்னை நிறுத்த முடியாது. அப்போது விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரிகளுக்கும் அழுத்தம் வந்தது. எவை வந்தாலும் நான் அஞ்சப் போவதில்லை. ஊடகவியலாளர்கள் லசந்த, பிரகீத் மற்றும் தாஜுதீன் கொலை தொடர்பான வழக்குகள் குறித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

மனித உரிமைகளை மேம்படுத்தும் விடயத்தில் நாங்கள் உறுதியாகவுள்ளோம். எமது ஆட்சியில் மனித உரிமைகள் மேம்பட்டிருப்பது குறித்து உலக நாடுகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன. நாங்கள் எமது பொறுப்புக்கூறலை நிறைவேற்றி வருகிறோம் என்றும் அரச தலைவர் தெரிவித்தார்.

(ற)

# பிக்குகள் ஒழுக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும்

## அரச தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.27

சைட்டம் ஆர்ப்பாட்டத்தின்போது பௌத்த பிக்குகள் நடந்துகொண்ட விதம் மிகவும் வருத்தத்தக்குரியது. பிக்குகளின் ஒழுக்கத்தில்தான் பௌத்த மத கோட்பாடுகள் தங்கியுள்ளன. பௌத்த பிக்குகள் இப்படி நடந்துகொண்டால் அது சர்வதேச மட்டத்தில் இலங்கை தொடர்பில் தவறான பார்வையொன்றையே வழங்கும்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் சைட்டம் மாணவர்கள் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பில் நேற்றுக்காலை அரச தலைவர் மாளிகையில் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போது கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழக மாணவர்கள் அச்சுறுத்தப்பட்டே ஆர்ப்பாட்டங்களுக்கு கொண்டுவரப்படுகின்றனர்.

அப்படி வராதவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர். இப்படி நடந்த பல சம்பவங்கள் கூட உள்ளன. தேர்தல் காலம் என்பதால் இப்படிச் செய்வதன் மூலம் எதனை எதிர்பார்க்கின்றனர்?. பிக்குகள் இப்படி நடந்துகொண்டால் பௌத்தர்களைப் பற்றி ஒரு தவறான எண்ணம் ஏற்படாதா?. உலகம் என்ன விதமாக எங்களை நோக்கும்? இலங்கையின் புராதன சின்னங்களை தொல்பொருள் திணைக்களம் பாதுகாத்ததோ இல்லையோ பௌத்த பிக்குகள்தான் அவற்றைப் பாதுகாத்தனர். ஆனால் இப்போது அப்படியில்லை. சைட்டம் பிரச்சினை தொடர்பில் வழக்கு இருக்கின்றது. இப்போது தேவையில்லாமல் பிரச்சினைகளை எழுப்புகின்றனர். இது தேர்தல் காலமென்பதால் அவர்கள் இயக்கப்படுகின்றனர் - என்றார்.

(ற)

# தாஜுதீன் படுகொலை: மகிந்தவின் உறவினர்களிடம் விசாரணை

கொழும்பு, ஜன.27

பிரபல ரகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் உறவினர்கள் சிலரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

இந்த வழக்கு, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் தர்ஷிக்கா விமலசிறி முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் மேலதிக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், மேற்கண்ட அறிவிப்பை விடுத்த டிலான் ரத்நாயக்க, 2012ஆம் ஆண்டு மே முதலாம் திகதியிலிருந்து 2012ஆம் ஆண்டு மே 30ஆம் திகதிவரையான காலப்பகுதியில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் கடற்படையினரின் இரண்டு ஜீப்கள் தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன என்று அறிவித்தார்.

வசீம் தாஜுதீன் பயன்படுத்திய மடி மற்றும் மேசைக் கணினிகள் பரிசீலனைக்காக மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கணினிப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று அறிவித்த அவர், குறிப்பிட்ட காலப்பகுதியில் அரசதலைவர் செயலகம், அரச தலைவர் அலுவலகம் மற்றும் அலரிமாளிகைக்கு வந்த மற்றும் வெளியே எடுக்கப்பட்ட அழைப்புகள் தொடர்பிலும் விசாரிக்கப்பட்டு வருகின்றது என்றும், மேலதிக விசாரணைகளுக்கு நீண்டகாலம் தேவை எனவும் கோரி நின்றார். அதேவளை, முன்னாள் பிரதான சட்டவைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகரவின் உடல் நிலையைக் கருத்திற்கொண்டு விசாரணைகள் இடம்பெற்றதன் பின்னர் அமர்வுக்கான தினத்தை வழங்க வேண்டும் என்று அரசதலைவர் சட்டத்தரணி ஷவேந்திர பெர்னாண்டோ கோரினார். அதன்போது குறிக்கிட்ட டிலான் ரத்நாயக்க, சி.ஐ.டியினரின் விசாரணையின் நிமித்தம் சமரசேகரவிடம் விசாரணை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கு அனுமதிக்குமாறும் கோரினார்.

நேற்றுமுன்தினமும் விசாரணைக்கான தமது சேவை பெறுநர் அழைக்கப்பட்டார் என்று கூறிய சட்டத்தரணி ஷவேந்திர பெர்னாண்டோ, ஒரே கேள்வியே திரும்பத் திரும்பக் கேட்கப்படுகின்றது என்று மன்றுக்கு அறிவித்தார். இதனையடுத்து, வழக்கின் அடுத்த அமர்வுக்கான தினமாக மே 3ஆம் திகதி அறிவிக்கப்பட்டதுடன், 2 வாரங்களின் பின்னர் இடம்பெறவுள்ள விசாரணைக்காக சி.ஐ.டிக்கு செல்லுமாறு சமரசேகரவுக்கு உத்தரவிடப்பட்டது. 2012ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதியன்று நாரஹேன்பிட்டி சாலிகா விளையாட்டு மைதானத்துக்கு அருகில் காரொன்றுக்குள்ளிருந்து தாஜுதீன் சடலமாக மீட்கப்பட்டார். முதலில் அது விபத்து என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் அவர் படுகொலைசெய்யப்பட்டு காருடன் எரிக்கப்பட்டிருந்தமை சி.ஐ.டியினரின் விசாரணையில் தெரியவந்தது.

(ற)

# ஆச்சரியப்படுத்திய மைத்திரிபால

கொழும்பு, ஜன.27

மைத்திரி நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது தமிழ் வானொலி ஒன்றின் அதிகாரி தமிழில் கேள்வியொன்றைக் கேட்டார். அந்தக் கேள்வி கேட்ட பின்னர் அதனை சிங்களத்தில் மொழிபெயர்த்துச் சொல்ல சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளரும் அரச தலைவர் செயலக அதிகாரியுமான ராகுலன் தயாராகினார். ஆனால், அதற்குள் முந்திக்கொண்ட அரச தலைவர் ""தம்பி சொல்லுங்க" என்றார் தமிழில். அரச தலைவரின் இந்த தமிழ் உச்சரிப்பு அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. இன்னுமொரு விடயம். அடுத்த ஜனாதிபதியாக நீங்கள் தேர்தலில் போட்டியிடுவீர்களா என்ற கேள்வியொன்றுக்கு அரச தலைவர் அளித்த பதில், அவர் ஆம் என்று சொல்கிறாரா இல்லை என்று சொல்கிறாரா என்று புரிந்து கொள்ள முடியாததாக இருந்ததாம்.

எல்லோரையும் உணவு மேசைக்கு அழைத்துச் சென்ற அரச தலைவர் ஊடகவியலாளர்களைப் பார்த்து, ""நீங்கள் முதலில் சாப்பிடுங்கள்" என்று கூறிவிட்டு எல்லோரும் உணவைப் பகிர்ந்துகொள்ளும்வரை பிரதான உணவு மேசைக்கு அருகில் இருந்தார். அங்கு வந்த அமைச்சர் பைசர் முஸ்தபா, ""சேர் நேற்று கொழும்பில் நடந்த கட்சிக் கூட்டத்தில் பெருமளவில் மக்கள் கலந்துகொண்டனர். வெற்றிகரமாக நடந்தது" எனக் கூறினார். அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாநகர சபைக்கான வேட்பாளர் அஸாத் ஸாலியும் உடனிருந்தார்.

(ற)

ரணிலுக்கும், மைத்திரிக்கும்

# நன்றி

கூறுகிறார் மகிந்த

கொழும்பு, ஜன. 27
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் நான் நன்றி சொல்கின்றேன். என்னிடம் கூட்டம் சேர்வதற்கு அவர்களே காரணம். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:.
ரணில் விக்கிரமசிங்கவும், மைத்திரிபால சிறிசேனவும் பொதுக் கூட்டங்களில் என்னைப் பற்றி அதிகமாகப் பேசும்போது பொது மக்கள் எனது கூட்டங்களில் கலந்து கொள்வது அதிகரித்து வருகின்றது.
மேலும், முஸ்லிம்களிடம் பொய்யைக் கூறி அவர்களை எனக்கு எதிராக மாற்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த முஸ்லிம்களே தற்பொழுது என்னிடம் நேரில் வந்து இனி நாம் ஏமாற மாட்டோம் என்று தெரிவித்துள்ளனர் என்றார். (5)

## வாக்களிப்பை படமாக்கிய நால்வர் கைது

கொழும்பு, ஜன. 27
தபால் மூலம் வாக்களிப்பை காணொலியாகப் பதிவு செய்து முகநூலில் பதிவிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். தபால் மூல வாக்களிப்பில் தாம் எவ்வாறு வாக்களித்தோம் என்பதை ஒளிப் படம் எடுத்து காணொலியாக பதிவிட்ட நால்வரே கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும், கொழும்பு, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் வவுனியா பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டதாக குறித்த நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார். (5)

## முழந்தாளிட்டச் செய்த விவகாரம்: அதிபர் ஏழு மணி நேரம் சாட்சியம்

கொழும்பு, ஜன. 27
ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சமிந்த தசநாயக்கவால், முழந்தாளிட்டு மன்னிப்புக் கோர வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பதுளை பெண்கள் பாடசாலை அதிபர் ஆர்.பவானி ஏழு மணி நேரம் சாட்சியம் அளித்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.
பாதிக்கப்பட்ட பதுளை பெண்கள் பாடசாலை அதிபர் பவானி மனித உரிமை ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்டிருந்தார்.
அவர் சுமார் 7 மணிநேரம் சாட்சியம் அளித்துள்ளார். அதே வேளை, ஊவா மாகாண கல்வி அமைச்சின செயலர் சந்தியா அம்பன்வல உள்ளிட்ட 6 அதிகாரிகளுக்கு மனித உரிமை ஆணைக்குழு அழைப்பாணை விடுத்துள்ளது. (5)

## புலிகளின் சொத்துக்களை விற்க அரசு திட்டம்!

கொழும்பு, ஜன. 27
தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களை விற்பனை செய்வதற்கு அரசு தயாராகி வருவதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
தமிழீழ விடுதலைப் புலிகளின் சுமார் 1.5 பில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் விற்பனை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கட்டுநாயக்க வானூர்தி நிலையத்திற்கு அருகாமையில் காணப்படும் காணியொன்றே இந்தச் சொத்துக்களில் மிகவும் பெறுமதி வாய்ந்தது.
வன்னிப் போருக்கு முன்னதாக இந்தக் காணி தொடர்பில் எவ்வித தகவல்களும் தெரியவரவில்லை. வெள்ளவத்தையில் அடுக்கு மாடி வீடொன்றும், அச்சகமொன்றும் இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான மூன்று வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டிருந்த பணமும் அரசுடைமையாக்கப்படவுள்ளது. (5)

## முதலீட்டுக்கான கதவு ஜப்பானுக்கு திறப்பு

மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 27
இன்னும் அதிகமான முதலீட்டு வாய்ப்புகளை ஜப்பானுக்கு வழங்க அரசு தயாராக இருக்கிறது என்று, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள, ஜப்பானின் முன்னணி கைத்தொழில், வர்த்தக நிறுவனங்களின் 77 பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தார்.
1979ஆம் ஆண்டு ஜப்பானின் மிகப் பெரிய வர்த்தகக் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட பின்னர், 39 ஆண்டுகள் கழித்து, ஜப்பானில் இருந்து மிகப் பெரிய வர்த்தகப் பிரதிநிதிகள் குழு இலங்கை வந்துள்ளது.
இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கியுள்ள கலாநிதி அகியோ மிமுரா, சந்திப்பின் போது கருத்து வெளியிடுகையில், கைத்தொழில், உட்கட்டமைப்பு, உருக்கு, மென்பொருள், போக்குவரத்து, வானூர்தி சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலங்கையின் முதலீட்டு வாய்ப்புகளை ஜப்பானிய அரசு எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்தார்.
இது தொடர்பான பல முன்மொழிவுகளையும் அவர் மைத்திரிபால சிறிசேனவிடம் வழங்கினார். (5)

## தேங்காய் தட்டுப்பாட்டுக்கு மகிந்த அணியே காரணம்

அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 27
நாட்டில் தேங்காய் பற்றாக்குறை ஏற்படுவதற்கு பிரதான காரணம் மகிந்த ராஜபக்சவுடன் உள்ள குழுவே. இவ்வாறு அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது,
இன்று தேர்தல் மேடைகளில் மகிந்த ராஜபக்ச குழுவினர் மக்களிடம் தேங்காயின் விலை அதிகமாகவுள்ளதாக கூறி அரசுக்கு எதிரான சிந்தனையை வளர்க்கின்றனர்.
கடந்த காலத்தில் வணக்கத் தலங்கள் அனைத்துக்கும் சென்று ஒவ்வொரு மகிந்த குழு உறுப்பினரும் அதிகமான தேங்காய்களை வேண்டுதலுக்காக உடைக்கப் போய்த்தான் நாட்டில் தேங்காய் தட்டுப்பாடு ஏற்பாட்டது என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள் என்றார். (5)

## திருடர்களைப் பிடிப்பதற்கு புதிய சட்டம் தேவையில்லை

கொழும்பு, ஜன. 27
திருடர்களை பிடிப்பதற்கு புதிய சட்டம் தேவையில்லை. நடைமுறையில் உள்ள சட்டத்திலேயே திருடர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளன. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெரிய ஊழல் மோசடி தொடர்பான விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படுவதற்கு முன்னரே, அதில் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். பிணைமுறி விசாரணை அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதும், அதனுடன் தொடர்புடைய எவரும் இன்னமும் கைது செய்யப்படவில்லை.
பெரிய ஊழல் மோசடி தொடர்பான ஆணைக்குழு அறிக்கையில் திருட்டு இடம்பெற்றதாக இல்லை. அத்துடன் திருடர்களைப் பிடிப்பதாயின் புதிய சட்டம் தேவையில்லை. நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அதனை மேற்கொள்ள முடியும் என்றார். (5)

## அவயவங்களை தானம் செய்யும் தேசிய தினம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 27
ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 18ஆம் திகதி உடல் அவயவங்களை தானம் செய்யும் தேசிய தினமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
சிறிஜயவர்தனபுர வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சிறப்பு சத்திரசிகிச்சை நிபுணர்கள் இந்தத் தகவல்களைத் தெரிவித்தனர்.
சிறிஜயவர்தனபுர வைத்தியசாலையில் அன்றைய தினத்தில் தமது அவயவங்களை தானம் செய்ய முடியும் எனவும் அதற்கான அனைத்து வசதிகளும் வைத்தியசாலையில் செய்து கொடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர். (5)

## அரச தலைவர் செயலக மேலதிக செயலர் கைது

கொழும்பு, ஜன. 27
அரச தலைவர் செயலகத்தின் முன்னாள் மேலதிக செயலர் ஏ.எஸ்.குணரட்ண மற்றும் முன்னாள் பிரதான கணக்காளர் சி.டி.குணரட்ண ஆகியோர் பொலிஸ் சிறப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.
2010ஆம் ஆண்டு அரச தலைவர் செயலகத்துக்கு வாகனங்கள் கொள்வனவு செய்யும்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் 179 இலட்சம் ரூபா நிதி மோசடி தொடர்பிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன்குணசேகர தெரிவித்தார். (5)

## கை, கால் இழந்த சாரதி அனுமதிப் பத்திரமும் இல்லாமல் வாகனம் செலுத்தியவர் கைது



கொழும்பு, ஜன. 27
இரு கைகளிலும் மணிக்கட்டுக்கு கீழ்ப்பகுதி இன்றி, வலது காலின் முழங்காலுக்கு கீழுள்ள பகுதியை இழந்த, சாரதி அனுமதிப்பத்திரமும் இல்லாதவர் சிறிய ரக லொறியைச் செலுத்திச் சென்ற போது நிக்கவரட்டிய பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.
நிக்கவரட்டிய நகருக்கு அப்பால் ரஸ்நாயக்கபுர ஆண்டிகம வீதியில் வைத்தே ரஸ்நாயக்கபுர பொலிஸாரால் இவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.
நீண்ட காலமாக ஆணமடுவையில் இருந்து தானிய வகைகளை காலிக்கு அவர் லொறியில் கொண்டு செல்வது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
அவர் செலுத்திச் சென்ற லொறி சிறிய ரகமானாலும் அதனை செலுத்த பார ஊர்திகளைச் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் அவசியம் எனவும், அவரிடம் எந்த அனுமதிப் பத்திரமும் இருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (5)

## மதவாச்சி தலைமன்னார் தொடருந்துசேவை 2 மாதங்கள் தடைப்படும்

தொடருந்துத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 27
மதவாச்சி முதல் தலைமன்னார் வரையான தொடருந்து சேவையை பெப்ரவரி முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தவுள்ளதாக இலங்கை தொடருந்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.
'மதவாச்சி முதல் தலைமன்னார் வரையான பகுதியில் பாலம் அமைக்கத் திட்டமிட்டுள்ளதன் காரணமாக மதவாச்சி முதல் தலைமன்னார் வரையான தொடருந்து சேவை தற்காலிகமாக இடைநிறுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தொடருந்து திணைக்கள செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)





# இந்தியாவின் 69வது குடியரசு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.27
இந்தியாவின் 69ஆவது குடியரசு தின நிகழ்வு நாடளாவிய ரீதியில் நேற்றுக் கொண்டாடப்பட்டது.
இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள துணைத்தூதுவரின் 'இந்தியன்' இல்லத்தில் இடம்பெற்றது.
யாழ்.இந்தியத் துணைத் தூதரகக் கொன்சியூலர் ஆ.நடராஜனால் இந்திய தேசியக் கொடி ஏற்றப்பட்டு இந்திய அரச தலைவர் ராம்நாத் கோவிந்தின் குடியரசு தினச் செய்தியும் வாசிக்கப்பட்டது.
இதன் போது இந்தியா அசாம் மாநிலத்தில் இருந்து வந்த பிகு நடன குழுவினரின் நடன நிகழ்வு மற்றும் இந்திய பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.
இந்த நிகழ்வில் மத குருமார்கள் உட்பட இந்திய துணைத் தூதரக கொன்சியூலரின் துணைவியார் சாந்தி நடராஜன் மற்றும் சிறுவர் மகளீர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், இந்திய அதிகாரிகள், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், எனப்பலரும் கலந்து கொண்டனர்.
இதேவேளை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்திலும் இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ந - 106)

# ஊவா முதலமைச்சருக்கு எதிராக திருமலையில் ஆர்ப்பாட்டம்





திருகோணமலை,ஜன.27
**ஊவா மாகாண பாடசாலையின் பெண் அதிபரை மண்டியிடச் செய்த விவகாரத்தைக் கண்டித்து நேற்று திருகோணமலையில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.**

கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை பாடசாலையின் ஆசிரியர்கள், அதிபர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு சில மணி நேரங்களில் பிணையில் விடுவிக்கப் பட்டார். 2 லட்சம் ரூபா சரீரப் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டு, எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகும்படி நீதிபதியால் உத்தரவிடப்பட்டது. (ந-ரி2,40)

# மெதடிஸ்த மத்திய கல்லூரியின் தைப்பொங்கல் விழா



மட்டக்களப்பு, ஜன.27
மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் தைப்பொங்கல் விழா நேற்று கல்லூரி அதிபர் ஜே.ஆர். பீ.விமல்ராஜ் தலைமையில் இடம்பெற்றது. இந்துக் கலாசார முறைப்படி சூரியநமஸ்காரம் செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவனும்,சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பிரதி முகாமையாளரும், பொறியியலாளருமான வை.கோபி நாத், கல்லூரியின் பழைய மாணவ சங்கத் தலைவர் எஸ்.சசிதரன்.வர்த்தகர் ரீ.கிரிதராஜ்.பிரதி அதிபர்.உப அதிபர் மற்றும் ஆசிரியர்கள்.மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ந)

# வாவியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஜன.27
மட்டக்களப்பு கல்லடி வாவியிலிருந்து ஆணொருவரின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கிருஷ்ணன் கோயில் வீதி, கல்லடியைச் சேர்ந்த, மின்சார சபைப் பொறியியலாளரும் இரு பிள்ளைகளின் தந்தையுமான கணேஷமூர்த்தி உமாரமணன் (வயது 34) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.
இந்த இளைஞன் கடந்த 24ஆம் திகதி தொடக்கம் காணாமற்போயிருந்தார்.
இவர் காணாமற் போனதையடுத்து உறவினர்கள் இவரது வீட்டில் இருந்து கடிதம் ஒன்றைக் கண்டெடுத்தனர். அதில் உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து தனது பிள்ளைகளை நன்கு கவனித்துக் கொள்ளுமாறும், வேலைப் பிரச்சினை காரணமாகத் தான் தான் இந்த முடிவெடுப்பதாகவும் வேறு யாரும் காரணம் இல்லை எனவும் எழுதியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
இவர் கல்லடிப் பாலத்தில் குதித்திருக்கலாம் என்ற ஊகத்தினடிப்படையில் வாவிப் பகுதியில் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. வாவியில் ஆணொருவரின் சடலம் ஒன்று மிதப்பதாக மீனவர்கள் தெரிவித்ததையடுத்து மீனவர்களின் உதவியோடு சடலம் மீட்கப்பட்டது.
உடற் கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது. சம்பவம் தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-46)



# விக்டர் ரத்னாயக்கவின் மனைவி தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு, ஜன.27
தங்க ஆபரண மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரபல பாடகர் விக்டர் ரத்னாயக்கவின் மனைவி ஹஷினி அமேந்ராவை எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.
இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே தங்காலை நீதிவான் நீதிமன்றத்தின் பதில் நீதிவான் விதுர வீரகோன் இந்த உத்தரவு பிறப்பித்தார்.
2012 தொடக்கம் 2016 ஆண்டு வரையான காலப்பகுதியில் தங்காலை பிரதேச அரச வங்கியொன்றின் அடகு பிரிவில் சேவையாற்றிய போது ஒரு கோடியே இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் காணாமல் போனமை தொடர்பில் கடந்த 9ஆம் திகதி மோசடி விசாரணை பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டார். (ந)

# 14 பானைகளில் பொங்கல் விழா

மட்டக்களப்பு.ஜன.27
வாழைச்சேனை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழா நேற்று இடம்பெற்றது. வாழைச்சேனை செல்வ விநாயகர் ஆலயத்தில் இருந்து மாட்டுவண்டியில் நெல் ஏற்றி செயலக உத்தியோகத்தர்கள், விவசாயிகள் சகிதம் வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதி வழியாக செயலகம் வரை பவனியாக வந்தனர்.
பிரதேச செயலகத்துக்குட்பட்ட பன்னிரண்டு கிராம அலுவலர் பிரிவுகள், செயலக நலன்புரிச் சங்கம், வலம்புரி



விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். 14 பொங்கல் பானை வைக்கப்பட்டு பொங்கப்பட்டது.
செயலக உத்தியோகத்தர்களுக்குகிடையில் பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்றதுடன், வாழைச்சேனை இந்துக்கல்லூரி மற்றும் கும்புறுமூலை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.நிரூபா பிருந்தன், மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் த.மலர்ச்செல்வன், செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-ரி2)

## கலாசாரத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் செலவழிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்.ஜன.26

வடக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்துக்கு கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதி வருட இறுதியில் முழுவதும் செலவழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஒவ்வொரு வருடமும் திணைக்களங்களின் செயற்றிட்டங்களுக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி வழங்கப்படுவது வழமை. இதன் அடிப்படையில் கடந்த வருடம் மாகாண கலாசாரத் திணைக்களத்துக்கு 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. வருடம் நிறைவடைவதற்கு ஒரு மாத காலம் உள்ள நிலையில் 0.7 மில்லியன் மாத்திரமே செலவழிக்கப்பட்டதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கேட்கப்பட்ட வினாவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

திணைக்களத்தின் திட்ட முன்மொழிவின்படி ஆவணக் காப்பகம் அமைத்தல் 4.4 மில்லியன், இசைக்கருவிகள் வழங்கல் 2.5 மில்லியன், கலைக்குழுக்கள் அமைத்தல் 1.6 மில்லியன், பயிற்சி வழங்கல் 1 மில்லியன், தமிழ் தாய்க்கு சிலை அமைத்தல் 0.5 மில்லியன் என நிதி ஒதுக்கப்பட்டது. இதில் கடந்த நவம்பர் மாதமளவில் 0.75 மில்லியன் வரையிலான வேலைத்திட்டங்கள் நிறைவடைந்தன.

அதன்பின் வேலைத்திட்டங்களை விரைவுபடுத்தி ஒரு மாதத்துக்குள் அனைத்து வேலைத்திட்டங்களும் முழுமை பெற்று 10மில்லியன் ரூபா நிதியும் செலவழிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

### போக்குவரத்துப் பொலிஸாரின் வழக்கு விளக்கத்துக்கு

# மது அருந்தினார் என்ற குற்றச்சாட்டு பொலிஸாரால் சோடிக்கப்பட்டதா?

யாழ்ப்பாணம், ஜன. 27

போதையில் வாகனம் ஓடியதாகத் தெரிவித்து யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பிரிவுப் [illegible]ஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, பொலிஸாரால் வேண்டுமென்றே சோடிக்கப்பட்டுத் தாக்க[illegible]யப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டது. பலூனின் நிறம் மாறாமையால், பொலிஸார் தாமே பலூனை ஊதி, அதில் சந்தேகநபரின் பெருவிரல் அடையாளத்தைக் கட்டாயப்படுத்திப் பெற்றுக் கொண்டனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

அதனையடுத்து இந்த வழக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேக நபர் சார்பில் தோன்றிய சட்டத்தரணி தி.கணதீபன் ஊடாக நீதிமன்றுக்கு தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர் மோட்டார் சைக்கிளைத் தனது வதிவிடத்தின் முன்பாக நிறுத்திவிட்டு வீட்டுக்குள் செல்ல முற்பட்ட வேளை, போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் சந்தேகநபரிடம் உரிய ஆவணங்களைக் காட்டுமாறு கோரினார். அதற்குச் சந்தேகநபர், 'குறித்த மோட்டார் சைக்கிளை வீதியால் ஓடியபோது நீங்கள் ஆவணங்களைக் காட்டக் கேட்கவில்லையே? வாகனத்தை வீட்டுக்கு முன்பாக நிறுத்திய நிலையில் எதற்காக ஆவணங்களைக் காட்ட வேண்டும்? என்று கேட்டுள்ளார்.

அதனால் இருதரப்பினருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் சிலர் குறித்த மோட்டார் சைக்கிளைப் பலவந்தமாக வீதிக்கு இழுத்துச் சென்றதுடன், சந்தேகநபரின் வீட்டுக்குள் பலவந்தமாகச் சென்று சந்தேகநபரைத் தாக்கிக் கைது செய்து யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் ஒரு நாள் முழுவதும் தடுத்து வைத்திருந்தனர் என்றும் சந்தேகநபரின் சட்டத்தரணி கணதீபனால் குற்றஞ்சாட்டப்பட்டது.

'மது போதையில் சில பொலிஸார் இருந்தனர் என்றும் சந்தேகநபரைக் குடித்தாகக் குற்றஞ்சாட்டியதுடன், சந்தேகநபர் மது அருந்தியுள்ளாரா என்று பரீட்சிப்பதற்குப் பலூனை ஊதுமாறு கோரிய போது, பலூனின் நிறம் மாறவில்லை என்றும் அதனால், பொலிஸார் ஒருவரே பலூனை ஊதி அதில் சந்தேகநபரின் பெருவிரல் அடையாளத்தைக் கட்டாயப்படுத்திப் பெற்றுக் கொண்டார். எனவும் மன்றில் பொலிஸாருக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைத்தார்.

ஆனால் சட்டத்தரணியின் குற்றச்சாட்டை யாழ்ப்பாணப் பொலிஸார் மறுத்தனர். இல்லாத விடயங்களைச் சட்டத்தரணி மன்றில் கூறுகிறார் என்றனர். இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிவான் இந்த வழக்கை விளக்கத்துக்காக நியமித்து உத்தவிட்டார். (எ-4)

## சைக்கிளில் வந்த பெண்ணை மோதித் தள்ளிய சிற்றூர்தி

### மாங்குளத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.27

ஏ9 நெடுஞ்சாலையில் அதிவேகமாக வந்த ஹைஏஸ்ரக வாகனம் ஒன்று துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த பெண்ணொருவரை மோதித்தள்ளியது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மாங்குளத்தில் இடம் பெற்றது. அதே இடத்தில் வசித்துவரும் விஜயேந்திரன் சசிதா என்ற பெண்ணே காயமடைந்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

சம்பவதினம் குறித்த பெண் மாங்குளம் பகுதி சாலையில் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்தார். அதேவழியாக யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி ஹைஏஸ் வாகனமும் வந்தது. வேகமாக வந்த வாகனத்தின் கண்ணாடி பெண்ணின் தலையில் மோதியது. இதில் காயமடைந்த அவர் நிலைதடுமாறி கீழே விழுந்தார்.

உடனடியாக மாங்குளம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். காயமடைந்த பெண் சாலையோரமாகவே வந்தார் எனவும், ஹைஏஸ் வாகனம் அதிகவேகத்தில் வந்தது எனவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். இதுதொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ய - 4)

## ஓவியம் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம்.ஜன.27

யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை மற்றும் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் அனுஷா சோமசுந்தரத்தின் 'கறை' என்ற தலைப்பிலான ஓவியக்காட்சிப்படுத்தல் இடம்பெறவுள்ளது.

காட்சிப்படுத்தல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத்தொகுதியில் உள்ள கலைக்கூடத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை நடைபெறும். ஆர்வமுள்ளவர்களை கலந்து கொள்ளுமாறு நுண்கலைத்தறை தலைவர் தா.சனாதனன் தெரிவித்துள்ளார். (எ-4)

## தொழிற்கற்கை நெறிகளில் இணைந்துகொள்ளுங்கள்

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரிவின் ஒழுங்குபடுத்தலில் தொழிற்பயிற்சி தொடர்பான செயற்றிட்டமானது வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப்பிரிவுடன் இணைந்து ரெக் நிறுவனத்தால் நடத்தப்படவுள்ளது. அதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சையானது யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் மட்டும் பயிற்சி நெறிக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் தெய்வேந்திரராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் 10 நாள்கள் (பெப்பிரவரி மாதம் 19ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை) பன்னாட்டு, உள்நாட்டு வளவாளர்களால் முழுவதும் இலவசப் பயிற்சிநெறியாக மூலப் பொருள்கள், இயந்திர உபகரணங்கள் வழங்கப்பட்டு பயிற்சி நடைபெற்று அந்த உற்பத்தி பொருள்களை ஐரோப்பிய நாடுகளில் சந்தைப்படுத்தி வருமானம் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

ஆயுர்வேத மூலிகைகள் கொண்டு உற்பத்திப் பொருள்கள், மட்பாண்டக் கைத்தொழில், தென்னந்தும்புக் கைத்தொழில், தோற்பொருள் உற்பத்திகள், கடற்சிப்பிகள், பேப்பர் இரத்தினக்கற் கழிவுகளிலிருந்து புத்தாக்கப் பொருள் உற்பத்திகள் போன்ற பயிற்சிநெறிகள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலையை விட்டு விலகிய 16 வயதுக்கு மேற்பட்டோர், ஒழுங்கான வரவு வீதத்தினைக் கொண்ட மாணவர்களின் பெற்றோர்கள், பொருளாதாரப் பிரச்சினையை எதிர்நோக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள், மாற்று ஆற்றல் கொண்ட இடை விலகியோர், கற்று தொழில் வாய்ப்பு பெற முடியாமல் உள்ள இளையோர் போன்றோர் பயிற்சி நெறியில் இணையமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

### காரை வழிமறித்து நகைகள் மற்றும் பணம் பறிப்பு:

## சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

சாவகச்சேரி.ஜன.27

சாலையில் வந்த காரை வழிமறித்து அவர்களிடமிருந்து தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றை கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் கைதாகிய இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

கடந்தவாரம் கிழக்கு மாகாணம் காத்தான்குடியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலாவந்த காரை முதன்மைச் சாலையில் வழிமறித்த இருவர் ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி அவர்களிடமிருந்து தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றை அபகரித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடைமைகளைப் பறிகொடுத்த குடும்பத்தினர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்ட விவரங்களின் பிரகாரம் அன்று இரவு மிருசுவில் தொடருந்து நிலையத்திலிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட வேளையில் இருவரையும் கைது செய்து மறுநாள் சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

இருவரையும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட பதில் நீதிவான் ப.குகனேஸ்வரன் அன்றையதினம் அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் பொலிஸாரைப் பணித்திருந்தார். நேற்று அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சாட்சிகள் நீதிமன்றுக்கு வரவில்லை. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரையும் எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## கல்வி நிர்வாக தரம் 111க்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் 2ஆம் கட்ட விவரம் வெளியீடு

அச்சுவேலி,ஜன.27

இலங்கை கல்வி நிர்வாக தரம் 111 க்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் இரண்டாவது பெயர் பட்டியல் இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது. பட்டியலில் 78 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களில் 31 பேர் தமிழ் மொழி பேசுவோர், 47 பேர் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 111 பதவி ஆளணிக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இலங்கை ஆசிரியர் சேவையில் குறிப்பிட்ட கால சேவையை பூர்த்தி செய்தவர்கள் மட்டும் தோற்றலாம். தெரிவு செய்யப்பட்ட தமிழ் மொழி பேசுவோர் பெயர் விவரம் வருமாறு:

கணிதம் -தி.வாகீசன், எஸ்.ஜெகதீஸ்வரன், எஸ்.எச்.எம்.பரீஸ், ரி.சுஜீவன், ஏ.வத்சலன்.

விஞ்ஞானம்-வை.வசந்தன், கே.பிரதீபன், எஸ்.கவிதாஞ்சலி.தமிழ்மொழி-கே.விஜிதா, ஆர்.இராஜயோகன், ஈ.இரவிச்செல்வன், எம்.ஏ.ஆர்.முகமட், ஏ.மகாதேவன், ரீ.மதியழகன், ஏ.கலாவண்ணன், ஆர்.பார்த்தீபன், எஸ்.சத்தியதாஸ், ஏ.எம்.முபாவுதீன், கே.மனோரஞ்சன் உடற்கல்வி-எம்.எல்.எம்.முத்தரிஸ், ஆர்.கோமகன் இஸ்லாம்-ஜெ.ஜெயப்பிராகஷ், யூ.விவேகானந்தன், ஆர்.கணேசலிங்கம்

வரலாறு-எஸ்.ஸ்ரீவேணுகோபாலசர்மா. என்.வசந்தன்.

திட்டமிடல் பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் வேறு பாடத்துறைக்கான விருப்பத்தெரிவை மேற்கொண்டிருப்பதால் திட்டமிடலுக்கான ஆளணி பூரணப்படுத்தப்படாமல் தொடர்ந்து வெற்றிடமாகவே இருப்பதாக கூறப்படுகின்றது. மேலதிக விவரங்களை இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பார்வையிடலாம். இவர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதியில் இருந்து செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திக்கான

# திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.27

வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள 5 மாவட்டங்களில் இரு பெரிய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அவற்றுக்கான முன்மொழிவுகளை தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி 5 மாவட்டங்களின் செயலர்கள் ஊடாகக் கோரியுள்ளார். முன்மொழிவுகளை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் உரிய படிவங்களில் அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

துரித மீட்சித் திட்டத்தை மையமாகக் கொண்டு வாழ்வாதார, பொருளாதார அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதற்காக் வீதி அபிவிருத்தி, குடி தண்ணீர் திட்டம், சுகாதார நிலையங்கள், விவசாயம், மீன்பிடி போக்குவரத்து, துறைமுகவீதி பாடசாலை வகுப்பு அறைகள், சமூக உட்கட்டுமான திட்டங்கள், சமூகநல வசதி திட்டங்கள் போன்றவற்றுக்கு முக்கியத்துவமளிக்குமாறு கோரப்பட்டுள்ளதோடு வாழ்வாதார மற்றும் பொருளாதார வலுவூட்டல் திட்டத்தின் கீழ் வறுமையை ஒழிக்கக் கூடிய திட்டங்கள், மீள்குடியேற்ற மக்களுக்கான அடிப்படை வசதி, பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்கள், விசேட தேவையுடைய மாற்றுத் திறனாளிகள், முள்ளந்தண்டு வடம் பாதித்தோர், காணாமற்போன மற்றும் வருமானம் குறைந்த கொட்டில்களில் வாழும் மக்களுக்குக் கருத்திட்டங்களை முன்வைக்கு மாறு கோரப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு குடும்பத்துக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத வகையில் மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சிறுகைத்தொழில் மற்றும் முயற்சியாண்மைக்குரிய கருத்திட்டங்களைத் தயாரித்து வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. மேற்படி விவரங்கள் அந்தந்த மாவட்டப் பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக கோரப்பட்டுள்ளன. (எ-50)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# வவுனியா வளாக மாணவன் சக மாணவர்களால் தாக்கப்பட்டார்

வவுனியா.ஜன.27

வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வவுனியா வளாகப் பிரயோக விஞ்ஞான பீட மாணவர் மீது நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் விடுதியில் தங்கியிருந்த முதலாம் ஆண்டு பிரயோக விஞ்ஞான பிட மாணவன் மீது நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் விடுதிக்கு வந்த இரண்டாம் ஆண்டு பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் (பெருன்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்) தாக்குதல் மேற்கொண்டனர்.

காயமடைந்த குறித்த மாணவனை அவரது சக நண்பர்கள் மீட்டெடுத்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லமுற்பட்டனர். பெரும்பான்மையின மாணவர்கள் 'நீங்கள் விடுதலைப்புலிகள். இராணுவத்தினரின் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுங்கள்' எனப் பணித்துள்ளனர். பெருன்பான்மை இன மாணவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. சம்பவ இடத்துக்கு விடுதி காப்பாளர் சென்றவுடன் பெருன்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் கலைந்து சென்றுள்ளனர். அதன் பின்னர் அவரை அவரது நண்பர்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

குறித்த பல்கலைக்கழக மாணவனுக்கு நெஞ்சு, வாய் பகுதிகளில் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் சிகிச்சைகளை மேற்கொண்டு வருவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா வைத்தியசாலை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

மோதல் தொடர்பாக வவுனியா வளாகத் தலைவர் த. மங்களேஸ்வரனுடன் தொடர்பு கொண்டபோது, இது தொடர்பாக தனக்கு முறைப்பாடு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த கைகலப்பானது மூத்த மற்றும் இளநிலைப் பிரிவு மாணவர்களிடையே மரியாதை செலுத்தவில்லை என்ற காரணத்தினாலேயே இடம்பெற்றுள்ளது. இது குறித்த பல்கலைக்கழக ஒழுக்காற்றுக்கு முவினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் கைகலப்பில் ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை இடம்பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ.4)

# சிவராத்திரிவரை கேதீஸ்வரத்துக்கு தொடருந்துசேவை நடத்தவேண்டும்

அரச தலைவரிடம் இந்துமாமன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.27

மகாசிவராத்திரி தினத்துக்குப் பின்னர் திருக்கேதீச்சரத்துக்கான தொடருந்துப் பாதைச் சீரமைப்பை ஆரம்பிக்குமாறும் அதுவரை சேவையை நடத்துமாறும் வலியுறுத்தி அகில இலங்கை இந்து மாமன்றம் அரச தலைவருக்குக் கடிதம் எழுதியுள்ளது.

இது தொடர்பில் இந்து மா மன்றம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மதவாச்சி மற்றும் தலைமன்னார் இடையேயான தொடருந்து சேவை எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து 2 மாதங்களுக்குத் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை இந்துமன்ற அமைப்புகளதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புகளினதும் ஒன்றியமாகத் திகழும் அகில இலங்கை இந்து மாமன்றம் இதனைக் கண்டிக்கிறது.

2018ஆம் ஆண்டு எதிர்வரும் 13ஆம் தேதி மகா சிவராத்திரிக்குப் பெருமளவில் இந்து பக்தர்கள் திருக்கேதீச்சரம் சிவன் ஆலயத்தில் பிரார்த்தனைக்காக கலந்து கொள்வார்கள். தொடருந்து சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்து இந்துக்கள் தமது மதக் கடமைகளைத் தடையின்றி ஆற்றுவதற்கு அனைத்து இந்து மக்கள் சார்பாகவும் அரச தலைவரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்த விடயத்தில் அரச தலைவர் கவனம் செலுத்தி அது தொடர்பாக சாதகமான நடவடிக்கை எடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றுள்ளது. (எ-4)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்.ஜன.27

சாந்திகம் நிறுவனத்தால் 'சிறுவர் உளநலம்'(3ஆம் பதிப்பு) நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் பொது நூல்க மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும்சிறப்பு விருந்தினராக ஆஸ்திரேலிய மருத்துவ உதவி நிதியத் தலைவர் மருத்துவர் பொன்.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களான சாந்திகம் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (எ-4)

# சிறுவர் பராமரிப்பு நிலைய விதிமுறைகள் அரசிதழில்

நன்னடத்தைத் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம்.டிசெ.27

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்களின் ஒழுங்கு முறைகளை அரசிதழில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாகாண சிறுவர் பராமரிப்பு நன்னடத்தைத் திணைக்களம் தெரிவித்தது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்கள் 25 உள்ளன. இவை ஒரு ஒழுங்கு விதியின் கீழ் சரியாக செயற்பட வேண்டும். ஆனால் இதுவரை அவர்களுக்கான ஒழுங்கு முறைகள் தொடர்பான பொதுவான விதிமுறைகள் இல்லை. இதனால் அவற்றின் செயற்பாடு ஒவ்வொரு நிலையத்திலும் மாறுபட்டுக் காணப்படுகின்றது. அத்துடன் பகல் பராமரிப்பு நிலையங்கள் முன்பள்ளிகளுடன் இணைந்த செயற்பாடாகவே காணப்படுகின்றது.

ஆகவே இந்த நிலையங்களின் செயற்பாடுகளை ஒரு பொதுவான நடைமுறையின் கீழ் கொண்டு வருவதற்கு ஒழுங்கு முறைகள் அடங்கிய அரசிதழ் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு சிங்கள மொழி மொழிமாற்றம் நடைபெற்று வருகின்றது. விரைவில் அது மாகாண சுகாதார அமைச்சிடம் வழங்கப்பட்டு பிரசுரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

# குடும்பத் தகராறால் அடிதடி ஆண் உட்பட 6பேர் காயம்

சாவகச்சேரி, ஜன.27

கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டமை தொடர்பாக எழுந்த வாக்குவாதம் கைகலப்பாக மாறியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பெண்கள் உட்பட ஆறுபேர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் நாவற்குளி 300 வீட்டுத் திட்டத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

புலம்பெயர் நாட்டிலிருந்து வந்த அண்ணனிடம் தம்பி கடனாகப் பணம் வாங்கியுள்ளார். பின்னர் அவரிடமிருந்து அந்தப் பணத்தை வாங்குமாறு தனது தங்கையிடம் குறித்த அண்ணன் கூறியுள்ளார். இதற்காக தங்கை தனது இரண்டாவது அண்ணனின் வீட்டுக்குச் சென்றுள்ளார். அண்ணனின் மனைவியுடன் கடன் பணம் பற்றிக் கதைத்தபோது இருவருக்கும் வாக்குவாதம் எழுந்துள்ளது.

இதன்போது அண்ணனின் மனைவி பணத்தை வாங்க வந்த தனது கணவனின் தங்கையைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார். இந்தச் சம்பவத்தை அறிந்த கடன் கொடுத்த அண்ணன் அங்கு வந்து தனது தம்பியை தாக்கியுள்ளார். இதனால் எழுந்த கைகலப்பில் ஐந்து பெண்கள் உட்பட ஆறுபேரும் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ய-9)

அனுமதிப் பத்திரமின்றி

# மாடு கொண்டு சென்றவருக்கு 20ஆயிரம் ரூபா தண்டம்

சாவகச்சேரி.ஜன.27

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து வலிகாமம் கிழக்குப் பிரதேசத்துக்கு அனுமதிப் பத்திரமின்றி மாடும் கன்றும் கொண்டு சென்ற அவற்றின் உரிமையாளருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவிலைச் சேர்ந்த ஒருவர் உரும்பிராயில் உள்ள தனது காணியில் கட்டுவதற்காக மாட்டை நடத்தியும் ஒரு மாதக் கன்றை ஓட்டோவிலும் கொண்டு சென்ற வேளையில் பொலிஸாரால் அவை பிடிக்கப்பட்டன.

கால்நடைகளை ஒரு பிரதேசத்தில் இருந்து மற்றொரு பிரதேசத்துக்குக் கொண்டு செல்வதாயின் கிராம அலுவலர், பிரதேச செயலர், பொலிஸார் ஆகியோரிடம் அனுமதி பெற்றே செல்ல வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அவ்வாறான அனுமதிப் பத்திரமின்றி மாட்டையும் கன்றையும் கொண்டு சென்ற வேளையிலேயே பிடிக்கப்பட்டார்.

சாவகச்சேரி பொலிஸாரால் உரிமையாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதிவான் அனுமதிப்பத்திரமின்றி மாடும் கன்றும் கொண்டு சென்றமைக்காக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# தவறான சாரத்தியம் சாரதிகளுக்கு தண்டம்

சாவகச்சேரி.ஜன.27

மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதியின் சாரதிய அனுமதிப்பத்திரத்தை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் 7 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதித்தார். அத்துடன் காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கும் 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தார்.

மேலும் கஞ்சா உடைமையில் வைத்திருந்த இருவருக்கு தலா 7 ஆயிரத்து 500 வீதமும் அனுமதிப்பத்திரமின்றி வீரை விறகு வாகனத்தில் ஏற்றிவந்த இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டன. தனித்தனியாக விசாரித்த நீதிவான் தண்டம் விதித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)



# போட்டியிலிருந்து தகுதி இழந்த 12 ஒட்டகங்கள்

சவூதி அரேபியாவில் ஒட்டக அழகுப் போட்டியின்போது விதிமுறையை மீறியதாக 12 ஒட்டகங்கள் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளன. சவூதி அரேபியாவில் ஆண்டுதோறும் ஒட்டகத் திருவிழா நடைபெற்று வருகிறது. ஒரு மாதம் நடைபெறும் இந்தப் பாரம்பரியத் திருவிழாவில் ஒட்டக அழகுப்போட்டியும் நடைபெறும். இதில் ஏராளமான ஒட்டகங்கள் கலந்து கொள்கின்றன. இந்த ஆண்டு நடைபெற்றுவரும் போட்டியில் 12 ஒட்டகங்கள் பங்குபெற தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒட்டகங்களுக்கு அழகை மேம்படுத்த அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளதால் அவை நீக் கப்பட்டுள்ளன என ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர். (ம)

## ம்ம்ம்... இமாலய சாதனைதான்

ஏதேன்ஸ், ஜன. 27


கிரீஸ் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட, 9 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெண்ணின் முகத்தை விஞ்ஞானிகள் சீரமைத்து அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைத்துள்ளனர்.

பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் அது தொடர்பான தகவல்களைப் பகிர்ந்துள்ளது.

இந்த பெண்ணின் எலும்புகள் 1993ஆம் ஆண்டு ஒரு குகையில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

எலும்புகளை ஆராய்ந்து பார்க்கும் போது அவர் கற்காலத்தில் வாழ்ந்த இளம்பெண் என்பது தெரிய வந்தது. கிடைத்த எலும்புகளை வைத்து அந்தப் பெண்ணின் முகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. (ம)





# முகாபேக்கு மன்னிப்பு அறிவித்தார் எமர்சன்

ஹராரே, ஜன. 27

சிம்பாப்வேயின் முன்னாள் அதிபர் ரொபேர்ட் முகாபேக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்று சிம்பாப்வேயின் தற்போதைய அதிபர் எமர்சன் தெரிவித்தார்.

ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் 37 ஆண்டுகளாக பதவி வகித்து வந்தார். அவர் தனது ஆட்சிக் காலத்தில் பல்வேறு முறைகேடுகளைச் செய்தார் என்று குற்றம் சாட் டப்பட்டது.

தேர்தல் மோசடிகள் தொடர்பாகவும் முகாபே மீது வழக்குகள் இருந்தன. தனக்குப் பின்னர் தனது மனைவியை ஆட்சிப்பீடம் ஏற்றவும் அவர் திட்டமிட்டார். இதையடுத்து இராணுவப் புரட்சியின் மூலம் முகாபேயை பதவியில் இருந்து நீக்கியது இராணுவம்.

முன்னாள் துணை அதிபர் எமர்சன் அதிபராக்கப்பட்டார். முகாபேக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் முகாபேக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்று அறிவித்தார் எமர்சன். (ம)

ஆளில்லா வானூர்தியின் தாக்குதல்

## அமெரிக்காவுக்கு பாக். கண்டனம்

இஸ்லாமபாத், ஜன. 27

பாகிஸ்தானுக்குள் புகுந்து அமெரிக்க ஆளில்லா வானூர்தி நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தது பாகிஸ்தான்.

பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் இயங்கி வரும் ஹக்கானி அமைப்பைச் சேர்ந்த ஆயுததாரிகள் ஆப்கானிஸ்தானில் பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்தக் குழுவுக்கு பாகிஸ்தான் அரசு மறைமுகமாக உதவுகிறது என்று அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் குற்றம் சுமத்தியுள்ளன.

கைபர் பக்துங்கா மாகாணத்தில் உள்ள ஹங்கு மாவட்டத்தின் ஸ்பீன் தால் பகுதியில் இருக்கும் ஒரு வீட்டைக் குறிவைத்து அமெரிக்க ஆளில்லா வானூர்திகள் தாக்குதல் நடத்தின. அந்த வீட்டில் ஆயுததாரிகள் பதுங்கியிருக்கின்றனர் என்று கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அமெரிக்கா தெரிவித்தது.

எனினும், தமது அனுமதி இல்லாமல் தமது எல்லைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியமைக்கு கண்டனம் தெரிவித்தது பாகிஸ்தான். (ம)

குழந்தையில்லாத் தம்பதியர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி
தினமும் மாலை 5.00 மணிக்கு
CAPTAIN TV
காணத்தவறாதீர்கள்



மியன்மார் அரசின் இனச் சுத்திகரிப்பை அடுத்து. அங்கிருந்து சுமார் 6 லட்சத்து 50 ஆயிரம் ரொஹிங்யர்கள் அயல் நாடான பங்களாதேஷுக்குச் சென்று அங்கு தஞ்சமடைந்துள்ளனர். அவர்களை மியன்மாருக்கு திரும்பக் கொண்டு செல்வது தொடர்பில் மியன்மார் அரசுக்கும், பங்களாதேஷுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இதையடுத்து ரொஹிங்யர்களை மீண்டும் குடியேற்றுவத்றகான நடவடிக்கைகளை துரித கதியில் முன்னெடுத்து வருகிறது மியன்மார் அரசு. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் அது தொடர்பான ஒளிப்படங்களை வெளியிட்டுள்ளது. (ம)

மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
பாலசுப்பிரமணியம் தர்மசீலன்
(பௌதிகவியல் ஆசான் - யா/ அருணோதயக்கல்லூரி, B.Sc Dip. in Edu.)
தோற்றம் 23.02.1974
மறைவு 31.01.2015
திதி : 27.01.2018 ஏகாதசி

மூன்றாண்டென்ன மூவேழு ஜென்மங்கள் ஆனாலும்
முழுநிலவான உமையிழந்த கொடிய துயர்
மூளாத் தீப்போல் எம் உள்ளங்களுள் முழுமையாய் நிறைந்திருக்கும்
முத்துப் போல அவதரித்து பண்பாலும் பாசத்தாலும்
நேர்மையினாலும் பார்போற்றும் உத்தமராய் வாழ்ந்தீரே
தன்னலமற்ற நல்லாசானாய் பௌதிகவியலை
பௌவியமாய் போதித்து எண்ணற்ற மாணவரை உயர்வடையச் செய்தீரே
தந்தையை இழந்த தனயர்கள் மூவரும் தந்தையின் அரவணைப்பின்றி
தவியாய் தவிக்கின்றார்களே
பெற்றவரும் மனைவியும் உற்றவரும் உற்ற உமது பாசம் மறுபடியும்
கிடைக்காதோ உமது திருமுகம் காணமாட்டோமா என
நித்தமும் ஏங்குகின்றோம் எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா
இறைவன் திருவடியில் இளைப்பாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அளவெட்டி மத்தி, அளவெட்டி. (C 31811) (14.17) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் மலேரியா தடை இயக்கத்தில் தெளிகருவி இயக்குநராகக் கடமையாற்றும் திரு.சி.தேவகுமார் அவர்களின் அன்புத் தந்தையார்

**வேலன் சிங்கராசா**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிசங்கம்**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - பணிமனை யாழ்ப்பாணம்.**

(CS 13300) (04.17)

## பெயர் மாற்றம்

உபய கதிர்காமம் புலோலி தெற்கு, புலோலி என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட **வில்லியம் வினோதன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **வினோதன்** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு, இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும், மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

(ANE 00392 (12-17)) **வினோதன்**

## தேவை

சிறுவர்களுக்கு வாகனம் ஓட்டிப் பழக்குவதற்கு இந்தியன் அம்பாஸிடர் கார் உடன் தேவை.

**077 7521 434**
analionhl@gmail.com

(CS 13304) (12-17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 13 . 02 . 1944

கர்த்தருக்குள் 25 . 01 . 2018

**திருமதி நாகேஸ்வரி வில்லியம்ஸ்**

(முன்னாள் உப அதிபர் OLR யாழ்ப்பாணம்.
பரி.யாக்கோபு ஆலயம் நல்லூர்)

யாழ்.வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி வில்லியம் 25.01.2018 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் வில்லியம்ஸின் அன்பு மனைவியும், ஹரிஸ் பென்ஜமினின் (UK) தாயும், பேர்வினின் மாமியும், பிரணடன், பேசோன், பிரெக்ஸ்டன், பெத்தனி ஆகியோரின் பேர்த்தியும், தேவி, காலஞ்சென்ற கைலாசபதி ஆகியோரின் சகோதரியும், சொலமன் சாமுவேலின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.01.2018) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு St.Stephen Church நீர்கொழும்பில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக நீர்கொழும்பு பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: திருமதி பார்வதிதேவி**
**(சகோதரி)**

031 223 8679/077 767 9884 (ONO 9090) (13.17)

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் பதில்சாரதியாக கடமையாற்றும் திரு.செ.பரந்தாமன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சறோஜினிதேவி செல்வராசா**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிசங்கம்**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - பணிமனை யாழ்ப்பாணம்.**

(CS 13299) (04.17)

## யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள் தேவை

நன்கு அனுபவம் உள்ள
மின் இணைப்பாளர்
(வயரிங் வேலை தெரிந்தவர்)

**தொடர்பு - 075 918 3940** (CS13315/15/17)

## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பத்திற்கு வீட்டுடன் தங்கிநின்று வீட்டுவேலை மற்றும் குழந்தையை பராமரிக்கக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு - 077 232 0354** (CS13312/15/17)

## விற்பனைக்கு

கறைப்பிடித்தலைத் தடுக்கும் தன்மையும் சுற்றாடலுக்கு ஏற்புடையதும் உங்களுக்கு தேர்ந்தெடுக்கக் கூடிய வர்ணங்களில் நீண்டகாலம் நீடிக்கக் கூடியதுமான சிங் அலுமினியம், கூரைத்தகடுகள் மற்றும் Turbo Roof, Ventilator, பாதுகாப்புத் தகடுகள், இணைப்புகள் ஒரே கூரையின் கீழ் மிக்க விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
Aybowan, No.419, Oldmoor Street, Colombo -12
011 2458 171 / 011 432 0020 (ACO/144)(11)

## விண்ணக வாழ்வின் 25 ஆம் வருட நினைவஞ்சலி



அமரர்

**C.A.சண்முகநாதன்**

(முன்னாள் பிரதம லிகிதர் - சுகாதார திணைக்களம்)

திதி: தை மாத வளர்பிறை ஏகாதசி (27.01.2018)

பிறப்பு 13.12.1910

இறப்பு 03.02.1993

குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய்
எம்மையெல்லாம் பாசத்துடன் வளர்த்து
பரிவுடன் அறிவூட்டி நெறிப்படுத்தி வாழ வைத்த பப்பா
நீங்கள் மறைந்து இருபத்தைந்து ஆண்டானாலும்
என்றும் மறையாது உங்கள் நினைவுகள்

அம்பனை,
பன்னாலை, தெல்லிப்பழை.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
Dr.S.சிறிபவானந்தராஜா

(cs 13233-13.17)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்: பலாலிவீதி, திருநெல்வேலி (Farm School) இற்கு அண்மையாக 5 பரப்பு 13.70 குளி அளவு கொண்ட காணி விற்பனைக்குண்டு.

**077 614 6434**

## காவலாளி தேவை

கிறிஸ்தவ மிஷனெரி சபை, தோப்பு அச்சுவேலி சபைக்கு விசுவாச காவலாளி தேவை. கிறிஸ்தவர்கள் விரும்பத்தக்கது.


**வயது 60 - 70 விரும்பத்தக்கது.**

தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

**077 0828 448**

(CS13277 (12-17))

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 16 . 08 . 1991

மறைவு 29 . 12 . 2017

கடந்த 29.12.2018 பரந்தாமன் பாதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**திருமதி கீர்த்திகா லக்ஷன்**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்ததும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் தனது அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் அன்னார் நோயுற்று இருந்த வேளை வைத்திய உதவிகள் புரிந்த அனைவருக்கும் அன்னார் கடமையாற்றிய விவசாய திணைக்களத்தினைச் சேர்ந்த அனைத்து உள்ளங்களுக்கும், கல்வி கற்ற பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது குடும்பத்தவர்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன்,
அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 26.01.2018 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 28.01.2018 எமது இல்லத்திலும் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக தயவுடன் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கந்தசாமி வீதி,**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

**குடும்பத்தினர்.**

(CS 13307)(10)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 17 . 05 . 1950

கண் நெகிழ 03 . 02 . 2012

**அமரர் கந்தப்பு செல்வராசா**

**(முன்னாள் காசாளர் - கூட்டுறவுச்சங்கம், கொடிகாமம்)**

ஆண்டுகள் ஆறு வேகமாய் கழிந்தனவோ - ஐயனே!
நாம் வளர்வதைக் கண்டுகொண்டு காணாமல் சென்றதேனோ?
உம் புன்னகையினால் நம் சோகங்கள் எல்லாம்
மறந்து இன்பமாய் வாழ்ந்தோமே
உங்களது உழைப்பால் உயர்ந்த நாங்கள்
உங்களது பிரிவால் இன்றும் தத்தளிக்கின்றோமே
எம் உள்ளத்திலிருக்கும் உங்களது உருவம்
எம் இல்லத்தில் வலம்வர வேண்டுமையா!
எம் தந்தையைக் காண அருள் தருவாயோ - இறைவா...?

**இடைக்குறிச்சி,**
**வரணி.**

(ACH/305)(11,17)

**குடும்பத்தினர்.**

# 9 ஆவது பன்னாட்டு வர்த்தக சந்






























# சந்தையின் நேற்றைய பதிவுகள்


































## வேலைக்கு ஆட்கள் தேவை

கொழும்பு 05ல் சகல வசதியுடன் கூடிய வீட்டில் தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு பெண்கள் தேவை.

சம்பளம் 30,000 இற்கு மேல் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு 0769 70 17 92



## தங்குமிடம் வாடகைக்கு

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறைந்த வாடகையில் இல.531 பலாலி வீதி திருநெல்வேலியில் (UNICARE DENTAL CLINIC NEXT DOOR) உள்ளது.

நேரில் வரவும் 27.01.2018 - 30.01.2018 வரையும்

தொடர்புக்கு :- 077 7769 260


# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் சதாசிவம்

**(வேவி) (ஸ்ரூடியோ சதா, கொட்டாஞ்சேனை)**



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை 30.வருட வசிப்பிடமாகவும், கொக்குவில் மேற்கில் சிவகுரு வீதியை தற்போதைய வசிப்பிட மாகக்கொண்ட இராமலிங்கம் சதாசிவம் நேற்று (26.01.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் லக்சுமிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவவேணி (கனடா), சிவசக்தி (ஜேர்மனி) ஆகி யோரின் அன்புத்தந்தையும் சிவக்கொழுந்து (கனடா) காலஞ்சென்ற பங்கயவதி மற்றும் குமாரலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் வசந்தகுமார் (கனடா), சுதாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் டாயினி, ஜெய்சன், லூக்கா (கணேசா) ஆகிய்ோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11மணியளவில் அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**லக்சுமிபவனம், சிவகுரு வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(cs13326)(17.8)

## திருமதி சர்மிலி றொமாணி

(பழைய மாணவி - யா/திருக்குடும்ப கன்னியர் மடம், யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சர்மிலி றொமாணி ஜோசப் பாலகாந்தன் 25.01.2018 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பாலகாந்தன் (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் BOC), றோஸ் வினிவி (F) றெட் (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்) தம்பதியரின் அருமை மகளும், ராஜகோபாலன் (Accountant), ரஞ்சிதா தம்பதியரின் பாசமிகு மருமகளும், அசோக் ரஜிந்தர் ஜோசப்பின் அன்பு மனைவியும், அல்வினா ஷனனின் அருமைத் தாயாரும், ஜ°டி எலன் (ஆசிரியை, சென் பீற்றர்ஸ் கல்லூரி- கொழும்பு), ஜோய் பபின்ரன் (வைத்தியர்- Lady Ridgeway Hospital - Colombo) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரமேஷ்குமார் (முகாமையாளர்- Chrystler's Farm Estate - Kotagala), கிஷன் (Australia) ஆகியோரின் மைத்துனியும், கிறேசின் உடன்பிறவா சகோதரியும், தேவிவிமலா, சுசிலகாந்தன், தயாளகாந்தன், குணாளகாந்தன், றோஸ்மேரி, ஜோர்ஜ் வெலிங்டன், காலஞ்சென்ற மேரி சொபியா மற்றும் மனோகரன், காலஞ்சென்ற றஞ்சன் மற்றும் றஞ்சினி, றாகினி, சாந்தி, றாஜி, காலஞ்சென்ற கொண்சி மற்றும் யூலி, பொபி ஆகியோரின் பெறாமகளும், சங்கர், விஜி, ஷியாமி, நிமலன், ஜனனி, சுஜி, ஹென்லி, (B) பில்லி, யூட், றூபி, ஜட்ஜ், லூடி, டான்ரி, டுலால், நிஷாந்தி, டிலான், ஸ்ரெபனி, சோந்திரின், (f)பனன், வென்டி, ஜேசன், பிறயன், கற்தி, பிறெண்டா, மைக், ஹறி, இலிவ், லவ்லி, எலிசா ஆகியோரின் அருமை மச்சாள் மற்றும் உடன்பிறவா சகோதரியும், ஹஷேன், ஹர்ஷதா, மைசா, பீற்றர், (f) பெயித் ஆகியோரின் அருமைச் சித்தியும், (t) ரானியா, டெமிஷிலோவின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பேர்த், ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இவை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**
**(தொ.பே:**0772369550 / 0774740123
+61481562423 Australia **)**

(CS 13304)(10)

# மரண அறிவித்தல்கள்

தோற்றம்
10 . 04 . 1938



மறைவு
23 . 01 . 2018

## தியாகராஜா தங்கராஜா (சின்னத்தம்பி)

(உரிமையாளர், முருகன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) -

நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா தங்கராஜா 23.01.2018 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம் - சவுந்தரம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிவ சோதிமலரின் ஆருயிர்க்கணவரும், மைதிலியின் (மஞ்சு - ஆஸ்திரேலியா) பாசமிகுதந்தையும், சுஜிதரனின் (ஆஸ்திரேலியா) அன்பு மாமனும், காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் தர்மராஜா (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), விக்னராஜா (முருகன் மோட்டோர்ஸ்), லிங்கராஜா (சட்டத்தரணி - கனடா), பத்மராஜா (முருகன் - மோட்டோர்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதர னும், பரிபூரணி (வத்தளை), அவன்சீத்தா (கம்பஹா), விஜயகுமாரி, பாமதி (கனடா), கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரியாந்தினி, நிலாந்தினி, கஜந்தினி ஆகியோரின் சிறிய தந்தையும், சுராஜ், சங்க, பார்த்தீபன், மயூரி, ஜசிந்த்மிலானி, ஜயந்தன், சஞ்சுதா, ஜிதுர்ஷினி ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**88/5, கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

021 222 5974/ 077 668 9468 (cs.73302)(13.17)

## திருமதி சாந்தநாயகி தணிகாசலம்

**(நிறுவுநர் - தணிகா நுண்கலைக் கல்லூரி)**



கைதடி, நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தநாயகி தணிகாசலம் நேற்று (26.01.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான SK ஆறுமுகம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மரு மகளும் காலஞ்சென்ற தணிகாசலம் (JP) இன் அன்பு மனைவியும் பாலகுமரன் (UK), ஞான குமரன் (UK), ஞானசக்தி (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி), செல்வகுமரன் (UK), ஆனந்தசக்தி (ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம்) ஆகியோரின் அன்புத் தாயும் கௌரி (UK), மேகலா (UK), கணேசநாதன் (உடற்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்), யமுனாநிதி (UK), ஜெனார்த்தனன் (கணியஅளவையாளர்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ் சென்றவர்களான துரைரத்தினம், பொன்னையா, திருமதி தங்கம்மா சின்னத்தம்பி மற்றும் திருமதி சரஸ்வதி சுப்ரமணியம், காலஞ்சென்ற பஞ்சரத்தினம் மற்றும் திருமதி பரமேஸ்வரி விநாயகமூர்த்தி, திருமதி மகேஸ்வரி திருநீலகண்டன், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் ஆகியோரின் சகோதரியும் சிவகாமி, தணிகைக்குமரன், வைஸ்ணவி, சாம்பவி, விஷாலினி, நிவாஷினி, வர்ஷினி, அக்ஷரா ஆகியேரரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் புவ னேஸ்வரி, பேரின்பநாயகி, பரந்தாமதி, திரு மதி மு.இந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி அனுசியா தில்லை நடராசா, திருமதி அனுராதா பவளகாந்தன், சுவர்ணியா ஆகியோரின் மாமியும் பவள காந்தன், திருமதி பவளராணி நல்லைநாதன், பவளநாதன், பவளகுமார் ஆகியோரின் ஆசை அம்மாவும் மயூரன், துளசி, வித்தியா, சுரேஸ்குமார், திருமதி சுபோதினி சிறி கரன், திருமதி சுகந்தினி பார்த்தீபன், விஜயகுமார், திருமதி வினோதினி செல்வகுமார், விக்னகரன், திருமதி விஜிந்தினி பிரபாகரன், திருமதி விஜயரதனி மதிராஜ், திருமதி நிரூஜினி பதுமநாபன், திருமதி நிஷாந்தினி தார்மீகன், நிர்மலரூபன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (30.01.2018) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக நண்பகல் 12.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**528, பலாலி வீதி, திருநெல்வேலி.**
**0212222106-வீடு, 00447432119981-பாலகுமரன்(மகன்)-UK,**
**00447956541832-ஞானகுமரன்(மகன்)-UK,**
**0776660161-கணேசநாதன்(மருமகன்), 0776160340-ஞானசக்தி(மகள்)**
**00447803974289-செல்வகுமரன்(மகன்)-UK,**
**0777624475-ஆனந்தசக்தி(மகள்)**

**தகவல் : பிள்ளைகள்.**

(CS 13323/15/17)

## தீ விபத்தில் 33 பேர் உயிரிழப்பு

சியோல், ஜன. 27 தென்கொரியாவின் மிர்யாங் நகரில் உள்ள மருத்துவமனையில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 33 பேர் உயிரிழந்தனர். விபத்து ஏற்பட்ட கட்டடத்தில் 200 பேர் இருந்தனர். மேலும் பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருந்தமையால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)




Polycrome®
Light the future

நல்ல தரமான சூழலுக்கு ஏற்ற மின்சார உபகரணங்கள்



உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

JAFFNA INTERNATIONAL TRADE FAIR 2018
ஜனவரி 26/27/28 யாழ்ப்பாணம் நகரசபை மைதானத்தில் நடைபெறும்
Stall No. 70


## மரண அறிவித்தல்



### பாலசிங்கம் பாலசுப்பிரமணியம்

கன்னாதிட்டி றோட், காளிகோயிலடி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் பாலசுப்பிரமணியம் நேற்று (26.01.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் அந்தோனிக்கம்மாவின் (சிந்தா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் (ராஜி) மற்றும் சதீஸ்குமார் சியாமளா, பாலசுப்பிரமணியம் பரிஸ்குமார், சங்கீதன் சர்மிளா, பிரகலாதன் (லதன்) லாவண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் கபினாஸ், கம்ஷாயினி, ஷரிஸ், ஷரிஸ்ணா, ரதீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.01.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C 31811) (14.17) தகவல்: குடும்பத்தினர்.


20/-
இந்த வாரம்

- தலையெடுப்பாரா கலைஅமுதன்?
- இரண்டு கோடியும் சப்பைக்கட்டுகளும்
- என்ன செய்யப் போகிறார் மைத்திரி
- கைபேசி எமக்கு தந்தது என்ன?
- தொற்றா நோய்கள் தொலைக்கும் உயிர்கள்
- ஈழத்துக் கிராமங்கள் – கோண்டாவில்
- காலத்தோடு கையசைத்த எம் துள்ளிசை
- ஆரிட்டைச் சொல்லி அழ (புதிய தொடர்)

மற்றும் பல்சுவை அம்சங்களுடன்

சனிக்கிழமைகளில் அனைத்து முகவர்களிடமும் கிடைக்கும்.
தொடர்புகளுக்கு :- 021 493 2222



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தேவை செயல்களே வாக்குறுதிகள் அல்ல

வடக்கு – கிழக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களில் பாதுகாப்புத் தரப்பிடம் உள்ள விடுவிக்கப்படக்கூடிய காணிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கை இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தலைமையில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசதலைவர்செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உயர்மட்டச்சந்திப்பொன்றிலேயே இந்தத்தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இந்த வாக்குறுதியின்மட்டிலும் அதன்பின்னரானசெயற்திட்டத்தின்மட்டிலும்வடக்கு – கிழக்கு மக்கள் சந்தேகக்கண் கொண்டே பார்க்கின்றனர் என்பதே யாதார்த்தம். இராணுவத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்படும் என்று அடையாளமிடப்பட்ட – உறுதிப்படுத்தப்பட்ட – வாக்குறுதி வழங்கப்பட்ட காணிகள்கூட இன்னும்விடுவிக்கப்படவில்லை. இந்தநிலையில்புதிதாக மேற்கொள்ளப்படவுள்ள அடையாளப்படுத்தல் நடவடிக்கையில்எந்தளவுஉண்மைத்தன்மைஉள்ளதுஎன்றசந்தேகம் தமிழ்மக்கள்மனங்களில்ஆழமாகவேரூன்றியுள்ளது.தமிழ் மக்கள் கொண்டுள்ள இந்த நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளக் கூடியதும்கூட.

குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட மாவட்டச் செயலர்களும்,வாக்குறுதிவழங்கப்பட்டுவிடுவிக்கப்படாத காணிகள்தொடர்பில்தமது அதிருப்தியைப்பதிவுசெய்துள்ளனர். 'முகாம்களைஇடம்மாற்றுவதற்குத்தேவையானநிதி வழங்கப்படாமையேதாமதத்துக்குக்காரணம்' என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிப்பதற்கும் அது தொடர்பான நகர்வுகளுக்கும் உரிய நிதி விடுவிக்கப்படாத பட்சத்தில் புதிதாகஅடையாளப்படுத்தப்படவுள்ளகாணிகள்எந்தநிதியைப்பெற்றுக்கொண்டுவிடுவிக்கப்படவுள்ளனஎன்றகேள்வி மனதில் வலுப்பெறுகிறது. அத்துடன் தற்போது வழங்கப்பட்டுள்ள இந்த வாக்குறுதி வெறும் மாயைதானா என்ற சந்தேகமும் மனதில் ஆணித்தரமாகப் பதிகிறது. ஆக, தமிழ் மக்கள்கொண்டுள்ளகொதிநிலையை, அரசியல்அதிருப்தியைத் தவிர்க்க இத்தகைய கலந்துரையாடல்கள் நடத்தப்படுகிறதோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

வடக்குமாகாணசபையின்அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய வடமாகாண எதிர்க்கட்சித்தலைவர்சி.தவராசா, காணிச்சிக்கல்கள் நீக்கம்பெற புதிய அரசமைப்பு ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். உருவாக்கப்பட்டுவரும் புதிய அரசமைப்பில் கூட்டமைப்பு தனது மூன்று அம்சக் கோரிக்கைகளாக வடக்கு – கிழக்கு இணைப்பு, திரும்பப்பெறப்பட முடியாத இறுக்கமான பொறிமுறையின் ஊடாக அதிகாரப் பகிர்வு, நிதித்துறைச் சுதந்திரம் ஆகியவற்றைக் கேட்டுள்ளது. திரும்பப்பெறப்பட முடியாத இறுக்கமான பொறிமுறையின் ஊடாக அதிகாரப் பகிர்வு என்பதற்குள் வடக்கு மாகாண சபை நீண்டகாலமாகக் கேட்டுவரும் காணி அதிகாரமும்உள்ளடங்குகிறது என்றே தெரியவருகிறது. ஆனால் இந்த அரசமைப்பு நிறைவேற்றம் பெறுமா என்பதுதான் தற்போதுள்ள இமாலயக் கேள்வி.

ஏனெனில், புதிய அரசமைப்புநிறைவேறினால்தமிழர்தாயகம் உருவாகும் என்று நேரடியாகவே கருத்துத் தெரிவித்துள்ளார்முன்னாள்அரசதலைவர்மகிந்த. கொழும்பைவிடவும் மாகாண சபைகள் அதியுச்ச அதிகாரம் பெற்றுத் திகழும், இத்தகைய நிலைக்காகவா எமது இராணுவத்தினர் தமது இன்னுயிரைத் தியாகம் செய்தனர் என்றெல்லாம் அவர் தனது முன்னைய உரைகளில் முழங்கித்தள்ளியுள்ளார். ஆக, இத்தகையோரில் பெரும் எதிர்ப்பை மீறி மைத்திரி – ரணில் கூட்டு அரசால் அரசமைப்புநிறைவேற்றப்படுமா என்பதும் சந்தேகத்துக்குள்ளாகிறது.

காணி விடுவிப்பிலும்சரி, புதிய அரசமைப்பு உருவாக்கத்திலும்சரி தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது தமக்குச் சாதகமான நகர்வுகளையே. மாறாக அறிக்கைகளையோ வாக்குறுதிகளையோ அல்ல.



# குற்றச்சாட்டுகளில் இருந்து மீண்டெழுந்து மற்றவர்களுக்கு உதாரணமாக திகழும் தலைமை அமைச்சர்

## உயர்கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

ஆங்கில மூலம்: டெயிலிமிரர்

தமிழில்: ஆனந்த்

**கேள்வி:** அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த 16ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து வெளியேறியமை குறித்த உங்கள் கருத்து என்ன?

**பதில்:** அரசியலில் குற்றம் குறை கூறப்படுவதை பொறுத்துத்தானாக வேண்டும். ஊடகங்கள் சில எப்படி மோசமாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிக்கின்றன. ஆனால் அவர் அவற்றை புன்முறுவலுடனேயே ஏற்றுக் கொள்கிறாரல்லவா?

**கே:** பிணை முறி ஊழல் தொடர்பான அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடு என்ன?

**ப:** அது ஒரு தொகுப்பு அறிக்கை. அதில் பல விதமான பரிந்தரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் பரிசீலனைக்காக அது அனுப்பப்பட்டுள்ளது. அவர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்று பொறுத்திருந்து பார்ப்போர். அவர் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பார். அரச நிறுவனங்களின் கணக்கீடுகள் குறித்து விசாரணை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவான கோப் குழுவின் அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்படுவது இதுவே முதல் தடவையாகும். கடந்த காலங்களில் இத்தகைய 20-30 வரையான அறிக்கைகள் வெளியிடப்பட்ட போதிலும், அவற்றில் ஒன்றைத் தவிர ஏனையவை சட்டமா அதிபரது பரிந்துரைக்காக அனுப்பப்பட்டதில்லை. 150 பில்லியன் நிதி கையாள்கை தொடர்பான ஒரு அறிக்கை நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச கோப் குழுவின் தலைவராக இருந்த காலகட்டத்தில் சட்டமா அதிபரது ஆலோசனை கோரி அனுப்பப்பட்ட போதிலும் அது சம்பந்தமாக மேற்கொண்டு எதுவும் நடக்கவில்லை.

**கே:** ஆனால் 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அனுப்பப்பட்ட கோப் குழுவின் அறிக்கைக்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுபற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?

**ப:** அது சட்டமா அதிபர் பொறுப்பு. அவர் அதனை வாசித்த பின்னர் அதற்கான நடவடிக்கை தேவையாயின் எடுத்திருப்பார்.

**கே:** கடைசியாக வெளியான அரச தலைவர் விசாரணைக்குழுவின் அறிக்கையில் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்யக் கூடிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. நீங்கள் சபை முதல்வர் என்ற நிலையில் இதற்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளீர்கள். உங்களது நடவடிக்கை எப்படியானதாக அமையும்?

**ப:** நாங்கள் சட்டங்களை இயற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம். சட்டமா அதிபர் மத்திய வங்கியுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நாங்கள் தயாராகவுள்ளோம்.

**கே:** இது அரச தலைவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் உள்ள உறவுகளை எந்த அளவுக்குப் பாதிக்கும்?

**ப:** இதில் எந்தக் குரோதமும் இல்லை. நாங்கள் ஒரு வருடத்துக்கு முன்னரே கோப் அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்பியிருந்தோம்.

> “ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தமட்டில் நாங்கள் பலமுள்ளவர்களாகவே அரசில் இருக்கிறோம். 2020 ஆண்டுவரை இந்த அரசு தொடரும். நீங்கள் எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதிவரை பொறுத்து கொள்ளுங்கள். அதன் பின்னர் தெரியும், யார் இந்த நாட்டை ஆளப் போகிறார்கள் என்று?”

அதனையேதான் அரச தலைவர் இப்போது செய்துள்ளார். இந்த விடயத்தின் அடிமட்டம் வரை சென்று சகலவற்றையும்தெரிந்துகொள்ளவுள்ளோம். சட்டமா அதிபர்தான் இவற்றை ஆராய்ந்து அவரால் மட்டுமே குற்றவாளிகளை இனம் காண முடியும்.

**கே**: *சட்டமா அதிபருக்கு நீங்கள் கூறும்செய்திஎன்ன?*

**ப**: இந்த விடயத்தில் அடிமட்டம்வரை சென்றுஉண்மையைக்கண்டறிவதுதான் எங்கள் விருப்பம். முறையான பிணைமுறி வழங்கல் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியசெயற்பாடுதான். முறையற்றவிதமாகஇலாபம்சம்பாதிப்பதுதான் தவறானது. தவறானமுறையில்பிணைமுறி வழங்கல் செயற்பாடு இடம்பெற்றிருப்பதால் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

**கே**: *இதுபற்றிதலைமைஅமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும்போதுஇடம்பெற்றசம்பவங்களைபற்றிய உங்கள் பார்வை என்ன?*

**ப**: யார்இந்தவிவாதத்தைகோரினார்கள்? சுதந்திரக்கட்சி, கூட்டுஎதிரணி, ஜே.வி.பி. ஆகியவைதானே? இவைமுன்வைக்கப்படவில்லைஎன்பதைதெரிந்து கொண்டும்தானே அவர்கள் இதனைக் கோரினார்கள். நாங்கள்அதற்குஆயத்தமாகவேஇருந்தோம். ஆனால்அவர்கள் தாங்கள் ஆயத்தமில்லை என்று சொன்னார்கள். எல்லாவற்றையும் எங்களால் கதைத்திருக்க முடியுமா? எதிரணிதான் பிரச்சினையை உண்டாக்கினார்கள். நாங்கள் அல்ல.

**கே**: சபையில் பின்வரிசையில் இருந்தவர்கள் இதனை எதிர்த்தார்களே. அதுபற்றி உங்கள் கருத்து?

**ப**: எதிர்ப்புஒன்று இருக்க வேண்டும். அரசின் நல்ல நடவடிக்கைகளைக் கூடஎதிர்ப்பதுஎன்பதுகூட்டுஎதிரணியின் வழமையான போக்கே. உண்மையில் அவர்கள் தலைமை அமைச்சரது அறிக்கைக்கு பதில் கூறியிருக்க வேண்டும்.

**கே**: கூட்டுஎதிரணியின்நடவடிக்கை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லஎன நீங்கள் கருதுகிறீர்களா?

**ப**: ஆம்! இது ஏற்றுக் கொள்ள முடியாதது. கடந்த 3 வருடங்களில் பல முறைகூட்டுஎதிரணிசிறுவிடயங்களைக் கூட பெரிதுபடுத்துவதை வழக்கமாக ஆக்கிக் கொண்டுள்ளது. பேர்பெச்சுவல் நிறுவனத்துக்குச்சொந்தமான12மில்லியன்பெறுமதியானசொத்துக்கள்முடக்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபரால் அர்ஜுன அலோசியஸ் குற்றவாளி என்று இனங்காணப்பட்டால். ஏற்கனவேஅவருடைய சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளபடியால் அதுபற்றி அச்சமடையத் தேவையில்லை. குற்றம் நிரூபிக்கப்பட வேண்டும். அவ்வளவேதான்?

**கே**: இந்தப் பிணைமுறிகள் தற்சமயம் சந்தைப்படுத்தப்படுகின்றன. இதன் தாக்கம் நீண்டகாலத்துக்கு தொடரும். அது நாட்டின் பொருளாதாரத்திலும்தாக்கத்தைஏற்படுத்தக்கூடும். இது குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?

**ப**: கூட்டு எதிரணி அவ்விதம் குற்றம் சாட்டலாம். ஆனால்சட்டப்படிஇவை நிரூபிக்கப்பட்டாக வேண்டும்.

**கே**: எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி. சுதந்திரக் கட்சிக்கு எதிராக செயற்படுகிறது. இது அரசுக்குப் பாதிப்பெதனையும் ஏற்படுத்துமா?

**ப**: ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்தமட்டில்நாங்கள்பலமுள்ளவர்களாகவே அரசில் இருக்கிறோம். 2020 ஆண்டுவரை இந்த அரசு தொடரும். நீங்கள் எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதிவரைபொறுத்துகொள்ளுங்கள். அதன் பின்னர் தெரியும், யார் இந்த நாட்டை ஆளப் போகிறார்கள் என்று?

**கே**: அரச தலைவர் தமது பதவிக்காலம் முடிவடையும் காலஎல்லைபற்றிஉயர்நீதிமன்றத்திடம்கேட்டுத்தெளிவுபடுத்த முயன்றமைகுறித்துஉங்கள்நிலைப்பாடு என்ன?

**ப**: உயர்நீதிமன்றத்தின் கருத்து வெளிப்பாடு உயர்நீதிமன்றம் சுதந்திரமாக செயற்படுகிறது என்பதையே காட்டுகிறது. அது அரசியல் தலையீடு இல்லாமல் செயற்படுகிறது. ஆனாலும்பங்காளிக்கட்சிகளுடன்அரசதலைவர்கலந்தாலோசிக்காமையினால்தான் அமைதியின்மை ஏற்பட்டது.

**கே**: உயர்கல்வி அபிவிருத்தி சம்பந்தமாக உங்களது எதிர்காலத்திட்டங்கள் என்ன?

**ப**: நாங்கள்மூன்றுமருத்துவக்கல்லூரிகளை உருவாக்கி அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளையும் மேற்கொண்டுள்ளோம். தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பிப்பதற்காகபல்கலைக்கழகங்களில் 11பீடங்களையும்உருவாக்கியுள்ளோம். இதுமுக்கியமானது. இன்னும்5வருடங்களில் இவற்றில் படிக்கும் மாணவர்களின்தொகை.கலைப்பீடமாணவர்களது தொகையைப் பார்க்கிலும் அதிகமாக இருக்கும். இங்கு 3வித தொழில்நுட்ப பாடங்கள் கற்பிக்கப்படும். நாங்கள் விஞ்ஞான அடித்தளத்துடன்கல்வியை ஊக்குவிப்பதற்கே பல்கலைக்கழகங்களுக்கு அதிகாரம்வழங்கியுள்ளோம். பல்கலைக்கழக துணைவேந்தர்களும் அதன் செனெற்அங்கத்தினர்களுமேபல்கலைக்கழகங்களை நடத்த வேண்டும். அவர்கள்கண்டிப்புடன்நடந்துகொள்ள வேண்டும். தங்குமிட வசதிகளும் நடப்பு ஆண்டில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுவிடும். மாபொல உதவித் தொகையையும் அதிகரித்துள்ளோம். சைட்டம் நடைமுறை இல்லாமல் செய்யப்படும். அதற்கான தகுதியையும் கட்டுப்படுத்தியுள்ளோம். தற்போதுள்ள மாணவர்கள் ஒருதொகுதியாகக்கல்வியைத்தொடர்வார்கள். பல்கலைக்கழகவைத்தியபீடாதிபதிகள்இதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் ஒரு தொழிற் சங்கமாகும். அவர்கள்வைத்தியக்கல்வி சம்பந்தமான விடயங்களில் தலையிட முடியாது- என்றார்.

> *கடந்த 3 வருடங்களில் பலமுறை கூட்டு எதிரணி சிறு விடயங்களைக் கூட பெரிது படுத்துவதை வழக்கமாக ஆக்கிக் கொண்டுள்ளது. பேர்பெச்சுவல் நிறுவனத்துக்குச் சொந்தமான 12 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபரால் அர்ஜுன அலோசியஸ் குற்றவாளி என்று இனங்காணப்பட்டால், ஏற்கனவே அவருடைய சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ள படியால், அதுபற்றி அச்சமடையத் தேவையில்லை. குற்றம் நிரூபிக்கப்பட வேண்டும். அவ்வளவேதான்?*



## ஆசிரியருக்கான கடிதம்

### இவர்கள் திருந்தவே மாட்டார்களா?

நீர்வேலிவடக்குசீயாக்காடுமயானவளாகத்தில்நிழல்மரம்இல்லாமைநீண்டகாலக்குறையாகஇருந்து வந்தது. இந்தக் குறையை நீக்குவதற்காக பெருமனது படைத்தவரும், சமூக ஆர்வலருமான நீர்வேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் சின்னத்து[illegible] மகாலிங்கம் என்பவர் தனது வளவில் மிகுந்த சிரமங்களின் மத்தியில் ஆலமரம் ஒன்றை சுமார் 12 அடி உயரத்துக்கு வளர்த்து வந்துள்ளார்.

அந்த மரத்தை. குறித்த மயான அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் மிகுந்த சிரமப்பட்டு சுமார் 31/2மைலுக்குஅப்பால்நீர்வேலியின்கிழக்கெல்லையில்அமைந்துள்ளகுறித்தமயானத்துக்குகொண்டு சென்று. சவர் மண் பரப்பால் அமைந்த மயானப்பகுதியில் சவர் மண்ணை அகற்றி அந்தப் பகுதிக்கு 2 ரைக்டர் தோட்டமண் (செம்மண்) நிரப்பி குறித்த ஆலமரத்தை நாட்டியதோடு மரத்துக்குப் பாதுகாப்பாக கொங்கிறீற் தூண்கள் நட்டு, முட்கம்பி அடைத்துப் பராமரித்துள்ளார்.

இவரது இந்த மனிதநேயச்செயற்பாட்டைப்பலரும்பாராட்டியுள்ளனர். ஆனால்மனிதநேயமற்றவர்கள், பண்பாடு தெரியாத விசமிகள் சிலர் குறிப்பிட்ட மரத்தின் அடியில் ஒரு அடி நீளமான துண்டைவெட்டி எடுத்துச் சேதப்படுத்தி மரத்தைப் பட்டுப் போக வைத்துள்ளனர்.

இதைக் கண்ட மகாலிங்கம் மிகுந்த மனவேதனையுடன் மயான அபிவிருத்திச் சபையினரிடம் முறையிட்டுள்ளார்கள்.

மயான அபிவிருத்திச் சபையும் இந்த முறைகேடான செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றது. மிகவும்கவலையடைகின்றது. இப்படியானவிசமிகள்திருந்தவேமாட்டார்களா? எனஎதிர்பார்க்கின்றது.

த. பரராசசிங்கம்.
செயலாளர், வலி. வடக்கு சீயக்காடு மயான அபிவிருத்திச் சபை.

### யாழ். மக்களே ஒருகணம் சிந்தியுங்கள்

போதைப்பொருளைவாங்குவதற்குப்பணம்கிடைக்காததால்மூதாட்டிஒருவரைக்கொன்றுஅவரிடம்இருந்தநகைகளைக்கொள்ளையிட்டேன்எனகொலைமற்றும்கொள்ளைச் சந்தேக நபரான 21 வயது இளைஞனொருவன் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்தமை. யாழ்ப்பாணத்தின் தற்போதைய அபாயகரமான நிலையைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது.

போதைப்பொருள்பாவனையால்யாழ்ப்பாணத்துஇளைஞர் சமூகம் சீரழிந்து வருவதை இந்தச்சம்பவத்தின் மூலமாக அறியக் கூடியதாகவும் உள்ளது.

இந்த நிலை நீடிக்குமானால் யாழ்ப்பாணம் மக்கள் வாழ்வதற்குஇலாயக்கற்றதொருபூமியாகமாறிவிடும். இதைத் தொடர விட வேண்டுமா என்பதை இங்குள்ள மக்களே தீர்மானிக்க வேண்டும்.

பா. தவரஞ்சன். ஆனைக்கோட்டை.

# மரமும் மனிதனும்



ஒரு மனிதன் காட்டுக்குள் சென்று அங்கு நின்ற மரங்களைப் பார்த்தான். "மரங்களே, நான் கோடரி ஒன்று வைத்திருக்கிறேன். அதற்கு கைபிடி இல்லை. உங்களில் ஒருவர் எனக்கு உதவி செய்ய மாட்டீர்களா?" என்று கேட்டான். மற்றைய மரங்கள் எல்லாம் யோசித்துக்கொண்டிருந்த நிலையில் ஒரு மரம் மட்டும் அவன் மீது இரக்கம் கொண்டது. மனிதனே இதோ என் கிளைகளில் உனக்குப் பிடித்த பலமான கிளையொன்றிலிருந்து உன்கோடரிக்கு கைபிடியைச் செய்து போட்டுக் கொள் என்றது.

இப்போது மனிதன் மிகவும் மகிழ்ந்து "இந்தக் காட்டில் இவ்வளவு மரங்கள் இருக்கின்றன. ஆனால் அவர்களில் எவரும் என் மீது இரக்கம் காட்டவில்லை. நீ மட்டுமே என் மீது இரக்கம் காட்டினாய். உன் உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன்" என்று கூறி அம்மரத்தின் கிளையை தன் கோடரியால் சீவி எடுத்துச் சென்று பின்னர் பிடி செய்து போட்டுக் கொண்டான்.

ஒரு சில நாள்கள் சென்றன. அதே மனிதன் அந்தக் காட்டுக்கு வந்தான். அங்கிருந்த பலமான மரங்களையெல்லாம் அதே கோடரியால் வெட்டிச் சாய்த்தான்.

அப்போது அவன் தனது கோடரிக்கு பிடி தந்த அந்த வைர மரத்தடிக்கு வந்தான். மரத்தை மேலிருந்து கீழாக நன்றாகப் பார்த்தான். பின்னர் அதன் அடியில் கோடரியால் ஒரு பலமான வெட்டைப்போட்டான். இதனைச் சற்றும் எதிர்பாராத அந்த மரம் 'ஐயோ' என்று அலறிய படி 'மனிதனே என் இனத்தவர் எல்லோரையும் வெட்டுகிறாய் என்னையுமா? வெட்டுகிறாய்?" என்று பரிதாபமாகக் கேட்டது. மனிதனோ" "ஏன் உன்னை வெட்டக் கூடாதென்கிறாய்?" என்று கேட்டான். "நீ என்னை மறந்து விட்டாயா? உன் கோடரியில் பலமான கைபிடியாக இருப்பது நான் உனக்குத் தந்த என் உடலின் ஒரு பகுதி தானே! அவ்வளவு விரைவில் என்னை மறந்து விட்டாயா?" என்றது அந்த மரம்.

மனிதன் சிரித்த படி "என் தொழிலே மரம் வெட்டுவது தானே! உனக்கு மட்டும் என்ன நான் தனிச்சலுகை செய்ய வேண்டும். அந்த வேளை நீ தராது விட்டால் வேறொரு மரம் உதவி செய்திருக்கும். இதைப்போய் பெரிதாக நினைவில் வைத்திருக்கச் சொல்லுகிறாய்" என்றான் மனிதன். இவனது பதில் மரத்தை அதிர வைத்தது துரோகி, நான் உன்னில் இரங்கி உதவினேன். நீயும் என்றும் என்னை மறக்க மாட்டேன் என்றாய். இப்போது என்னை மட்டுமல்ல என் இனத்தையே அழிக்கின்றாயே. பாவி நான் பிழை செய்தேனே" என்று மரம் புலம்பி அழுது கொண்டிருக்க மனிதன் மீண்டும் இரண்டு வெட்டுகள் வைத்தான். மரம் முனகியபடி நிலத்தில் சாய்ந்தது.

இந்தக் காட்சியையும் இவர்களது உரையாடலையும் கவனித்துக் கொண்டிருந்த ஒரு வயதான மரமொன்று "இந்த மனிதரே இப்படித்தான். ஒருவன் உதவி செய்தால் அவனுக்கு மீண்டும் உதவி செய்யாவிடினும் உபத்திரவம் கொடுக்காமல் இருக்கவே மாட்டார்கள். பார், தீட்டிய மரத்தில் கூர் பார்ப்பது போல உதவி செய்த மரத்தையே வெட்டிச் சாய்த்து விட்டானே! அது மட்டுமல்ல நம் இனத்தவரையுமே அழித்து விட்டானே! நம்மவரில் ஒருவர் இரக்கம் காட்டப் போய் நம் இனத்துக்கே அழிவு வந்து விட்டதே. இந்த நிலையைத் தான் குலத்தை அழிக்க வந்த கோடரிக் காப்பு என்பார்களோ மனிதர்கள். இனியாகிலும் யாருக்கேனும் உதவி செய்யும் போது ஆளையறிந்து உதவி செய்ய வேண்டும். போலியானவர்களை நம்பி ஏமாந்து விடக்கூடாது. அதிலும் நன்றி மறக்கும் மனிதனை எவரும் நம்பவே கூடாது" என்று வேதனையுடன் கூறிக்கொண்டது.

## படங்களுக்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுவோம்


அணில்
ஆடு
ஆந்தை


எறும்பு
மயில்
காகம்


குதிரை
கட்டில்
கதிரை


கொக்கு
எலி
கிளி

## வண்ண மீன்கள்



அழகை எல்லோரும் விரும்புகிறோம். நாம் வாழும் சுற்றுச் சூழலும், நாம் வாழும் வீடும் அழகான இருக்க வேண்டும். எமது வீட்டிலே அழகுக்கு அழகு தருவன பூஞ்செடிகளும், நாம் தொட்டிகளிலே வளர்க்கும் வண்ண வண்ண மீன்களுமாகும். இந்த மீன்கள் கண்ணாடித் தொட்டிகளில் சுறுசுறுப்புடன் நீந்திச் செல்லும் அழகு எமக்கு வற்றாத மகிழ்ச்சியைத் தருகின்றன. எம் முன்னோர் இயற்கையுடன் ஒன்றித்து வாழ்ந்தார்கள். நிம்மதியுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்று நாமோ நவீன கண்டு பிடிப்புக்களின் பயனாக உள்ளங்கையில் உலகத்தை வைத்துக்கொண்டு வீட்டிற்குள் முடங்கி வருகிறோம். இப்படி வீட்டினுள் நிம்மதியைத் தேடுவதால் இயற்கையின் சில அம்சங்களையாயினும் வீட்டினுள் கொண்டு வரவேண்டும். மீன் தொட்டிகளில் அலங்கார மீன்களை வளர்த்தால் அவ்வாறான ஒரு செயற்பாடாகும்.


கண்ணாடி மீன் தொட்டிகளில் வண்ண மீன்கள் நீந்திச் செல்வதை மனம்கொண்டு இரசிப்போம். மீன்கள் ஒன்றை ஒன்று துரத்திச் செல்வது அழகோ அழகு.

இந்த மீன்கள் சுறுசுறுப்பாக நீந்திச் செல்வதற்கு ஒட்சிசனே காரணம். அந்த ஒட்சிசனை அவை பெற நீர்த் தாவரங்களைத் தொட்டியில் இடலாம். அல்லது தொட்டி நீரினுள் ஒட்சிசனைச் செலுத்தலாம். தொட்டி நீரினுள் ஒட்சிசன் குறைந்தால் மீன்கள் சோர்ந்துவிடும் ஒட்சிசனுடன் அளவான உணவும்தேவை. அத்துடன்மீன்தொட்டியை சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

இவ்வாறு அலங்கார மீன் வளர்ப்பது எமது உடல் நலத்துக்கும் நல்லதெனக் கூறுவர். இவற்றைப் பார்த்து மகிழ்வதால் மன அழுத்தம் குறைகிறது. குருதி அழுத்தம் உடையவர்களுக்கு அது குறைவதாகக் கண்டறிந்துள்ளனர்.

எனவே நாமும் அழகிய மீன்களைத் தொட்டிகளில் வளர்த்துப் பயன் பெறுவோம்.

## காந்தியடிகள்



காந்தி கட்டுப்பாடு மிகுந்தவர். ஆனாலும் சிறந்த மனிதாபிமானி. ஒரு நாள் காந்தி ஆச்சிரமத்தில் இருந்த போது, அங்கிருந்த நோய் வாய்ப்பட்டிருந்த ஒரு சிறுவன் 'கோப்பி' கோட்டான். கோப்பி சாப்பிடுவது ஆச்சிரமவிதிகளுக்கு முரணானது. ஆயினும் காந்தி ஆச்சிரமவிதிகளை உதறித் தள்ளிவிட்டு கோப்பி தயாரித்து சிறுவனுக்குக் கொடுத்தார்.

சில சமயங்களில் புகையிரதத்தில் பிரயாணம் செய்யும் பொழுது மற்றவர்கள் தூங்கினால் தேநீர் அருந்தும் பழக்கமுள்ள தமது நண்பர்களுக்காக புகையிரத நிலைய தேநீர்க் கடைக்குச் சென்று தேநீர் வாங்கி வந்து தூங்குகிறவர்கள் விழிக்கும்வரை காத்திருப்பார்.

புகையிர நிலையத்தில் பயணம் செய்ய வந்த போர் வீரன் ஒருவன் தனது பைகளைச் சுமப்பதற்கு 'கூலி' 'கூலி' என்று கூவி அழைக்கையில் தாமே அந்தப்போர் வீரனிடம் சென்று அவனது மூடைகளை வாங்கி சுமந்து சென்று புகையிரதத்தில் ஏற்றிக்கொடுத்தார். ஆனால் கூலி வாங்க மறுத்து விட்டார். பணிவிடை செய்வதில் காந்திக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. 1921ஆம் ஆண்டு காந்தியடிகள் தமிழ்நாட்டுக்கு வந்திருந்த பொழுது வயலில் அரைநிர்வாணத்துடன் வேலை செய்யும் குடியானவர்களைக் கண்டு அன்று முதல் தாமும் அவர்களைப் போல உடை அணிய உறுதி பூண்டார்.

அவரது அகிம்சை என்ற ஆயுதம் அணு குண்டைவிட மகா வல்லமை வாய்ந்ததாக இருந்தது. ஆங்கில ஆட்சியின் அடக்கு முறைகளையெல்லாம் அவர் தமது புன்முறுவலால் ஏற்றுக்கொண்டமையால் ஆங்கிலத்துரைமாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு அவரிடத்தில் வேலையில்லாது போய்விட்டன.

காந்தியடிகளின் அத்தனை பெருமைகளுக்கும் காரணம் அவரது தூய்மையும் எளிமையுமேயாகும்.

## வெற்றிதரும் பழமொழிகள்

மூத்தோர் சொல்லும் முழு நெல்லிக்கனியும் முன்பு கசக்கும் பின்பு இனிக்கும். முழு நெல்லிக்கனி உண்ட பின்பே இனிக்கும் இந்த முழு நெல்லியை கசக்கும் என்று சாப்பிடாமல் இருந்தால் சாப்பிட்ட பின்பு கிடைக்கும் இனிப்புச் சுவையை உணரமுடியுமா? அதுபோல வயதில் பெரியவர்கள் எமக்கு அறிவுரைகள் கூறும்போது அவற்றைக் கேட்பதும் கடைப்பிடிப்பதும் எமக்கு சிரமமாக இருந்தாலும் அவற்றைக் கடைப்பிடிப்பதால் நாம் பயன் அடையும் போது பெரியவர்களின் அறிவுரை எவ்வளவு இனிமையானது என்பதை உணர்வோம்.



இரு படங்களுக்கும் இடையே 6 வேறுபாடுகள் உள்ளன; கண்டுபிடியுங்கள்



# அன்புக்கும் உண்டோ அடைக்குந் தாழ்

சீனாவில், லீ ஆங் என்ற பெண்ணுக்குத் திருமணமாகி ,தன் கணவன்வீட்டிற்குச்சென்றுவாழத்துவங்குகிறாள்.
அங்கு லீ ஆங்கிற்கும் அவள் மாமியாருக்கும்எந்தவிடயத்திலும்ஒத்துப்போக வில்லை. எதற்கெடுத்தாலும் வாக்குவாதம்,சண்டை, சச்சரவு.
நாள்தோறும்இருவருக்குமிடையே வேற்றுமை வளர்ந்து கொண்டே இருந்தது.
லீஆங்கின்கணவனோஇருதலைக் கொள்ளி எறும்பு போல திண்டாடினான்.
ஒரு நாள் லீ ஆங்,அவள் தகப்பனாரின்நண்பரைப்பார்க்கச்சென்றாள்.
அவர்பச்சிலை,மூலிகைமருத்துவத்தில் கைதேர்ந்த மருத்துவர்.
அவரிடம் லீ ஆங், தனக்கும் தன் மாமியாருக்கும் உள்ள சண்டை பற்றிக்கூறி, மாமியாரைக்கொன்று விடவழிகேட்டாள்.
அந்த நாட்டு மருத்துவர்,மூலிகைப் பொடிஒன்றைக்கொடுத்து,இதுமெல்லக் கொல்லும் நஞ்சு,இதைத் தினம் உன் மாமியார் சாப்பாட்டில் கொஞ்சம் கொஞ்சமாக கலந்து கொடு. ஒரு சிலமாதங்களில்இயற்கைஎய்தியது போல் இறந்து விடுவார் என்று கூறினார். மேலும், மிகவும் கவனமாக செயற் படவேண்டும் முக்கியமாக உன் மாமியாரிடம் மிகுந்த அன்போடு நடந்து கொள். அப்பொழுது தான் உன் மேல் யாருக்கும் சந்தேகம் வராது. எல்லாம் ஒரு சில மாதங்கள் தானே என்று கூறி அனுப்பி வைத்தார்.
அதன்படி மருந்தை உணவில் கலந்து, அன்புடன் மாமியாருக்கு பரிமாறினாள்.
மருமகளின்அன்பைக்கண்டுமாமியாரும் அன்பாக நடந்து கொள்ள ஆரம்பித்தார்.
நாளடைவில் இருவருக்கும் நல்ல நெருக்கம் ஏற்பட்டது.
மாதங்கள் சென்றன. மாமியாரின் அன்பில் திக்குமுக்காடிய லீ ஆங் மருத்துவரிடம் ஓடினாள்.
ஐயா, இந்த மருந்துக்கு மாற்று மருந்து கொடுங்கள் எனக்கெஞ்சினாள், ஏன் இப்படி? எனஅவர்கேட்க, என்மாமியாரைநான் இழக்கவிரும்பவில்லைஎனஅழுதாள்.
அந்த மருத்தவர் சொன்னார், நான் நஞ்சு மருந்து எதுவும் கொடுக்கவில்லை அது வெறும் சத்துப்பொடி தான். அப்போதுநஞ்சுஉன்மனதில் தான் இருந்தது.
நீ அன்பாய் நடந்து கொண்டதால் உன் மனதில் இருந்த நஞ்சு கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து இப்பொழுது முழுவதும்நீக்கப்பட்டுவிட்டது.
சந்தோஷமாய் போய் வா என்று அனுப்பினார்.



# 32 மொழிகளில் வெளியாகிறது விக்ரமின் படம்

மகாபாரத கர்ணனை மையப்படுத்தி 'மஹாவீர கர்ணா' என்கிற படம் உருவாக இருப்பதாக சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.
மலையாள இயக்குநர் ஆர்.எஸ்.விமல் என்பவர் இயக்கவுள்ள இந்தப் படத்தில் கர்ணன் பாத்திரத்தில் விக்ரம் நடிக்கிறார்.
சுமார் 300 கோடி ரூபா செலவில் இந்தப் படம் உருவாக இருக்கின்றது..
இந்தப் படம் ஆரம்பத்தில் இந்தப் படம் ஹிந்தியில் மட்டும் தயாராவதாக சொல்லப்பட்டது.
தற்போது 32 மொழிகளில் வெளியிட தயாரிப்பு நிறுவனம் திட்டமிட்டிருக்கிறதாம்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பிறரது பேச்சை பொருட்படுத்த வேண்டாம். நம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழிலில் உற் பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**இடபம்:** திட்டமிட்ட செயல் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அமோகமாக இருக்கும். மேலதிக பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் போட்டியை எதிர்கொள்வீர்கள். இலாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்:** மனதில் புத்துணர்வு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கன்னி:** பிறர் விவகாரத்தில் கருத்து சொல்ல வேண்டாம். குடும்பத்தேவை ஓரளவு பூர்த்தியாகும். தொழிலில் இடையூறை உடனே சரிசெய்வது நல்லது. சுமாரான பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** முக்கிய பணி நிறைவேற தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் சிறு அளவில் போட்டி இருக்கும். பணவரவு மிதமாக இருக்கும்.

**விருச்சிகம்:** நற்செயலுக்கான நன்மை தேடி வரும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் ஆதரவை பெறுவர்.

**தனுசு:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும்.

**மகரம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு விட்டுக் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான அளவில் பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கும்பம்:** யாருக்கும் தேவையற்ற வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறையை பின்பற்ற வேண்டும்.

**மீனம்:** நற்செயலில் ஈடுபட்டு பெருமிதம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற வளர்ச்சி நிலையை கண்டு பிறர் வியப்படைவர்.



twitter.com/SKtwtz

இந்தக்கால குழந்தைகளின் விளையாட்டு மைதானம் கைகளில் **ஸ்மார்ட் போனாக**

நாம் புலம்புவது இரண்டே காரணங்களுக்காக...




எமக்கு மட்டும் ஏன் எதுவுமே நடக்கமாட்டேங்குது
எமக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்குது....

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | | | | |
| 3 | 1 | | | 8 | 5 | | | |
| | | | | | 7 | 9 | | 8 |
| | | | | | | 2 | 9 | |
| | 2 | | | | | | | |
| | 9 | 5 | | | | 4 | | 3 |
| | | 7 | 9 | | 3 | | 8 | |
| | | | 5 | | | 3 | 1 | |
| | | 1 | | | 4 | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 1 | 8 | 5 | 3 | 7 | 4 | 9 |
| 9 | 5 | 4 | 7 | 6 | 1 | 8 | 3 | 2 |
| 7 | 8 | 3 | 9 | 2 | 4 | 5 | 6 | 1 |
| 1 | 2 | 9 | 4 | 8 | 7 | 6 | 5 | 3 |
| 5 | 3 | 8 | 6 | 1 | 9 | 2 | 7 | 4 |
| 6 | 4 | 7 | 2 | 3 | 5 | 9 | 1 | 8 |
| 8 | 1 | 5 | 3 | 9 | 6 | 4 | 2 | 7 |
| 4 | 9 | 6 | 1 | 7 | 2 | 3 | 8 | 5 |
| 3 | 7 | 2 | 5 | 4 | 8 | 1 | 9 | 6 |

ES Printers
அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்
021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பெண்களுக்கான வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் இயங்கும் ஆச்சி பாரம்பரிய உணவகத்திற்கு உணவு தயாரிப்பதற்கு பெண்கள் தேவை. அரை நாளில் 2000/= இற்கு மேல் சம்பாதிக்கலாம்.

தொடர்பு - முகாமையாளர் 076 483 7468

**காணி விற்பனை**

திருநெல்வேலி சந்திக்கும் கல்வியங்காட்டு சந்திக்கும் இடைப்பட்ட இராமசாமி பரியாரி சந்தியில் இருந்து 10 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (CS9126 15/17)

தொடர்பு - 076 569 7586, 077 029 2546

**குழந்தையின்மை சிகிச்சைக்கான இலவச ஆலோசனை முகாம்**



வம்சம் டெஸ்டியூப் பேபி மையம்
இந்தியா Dr.D. சிலம்பு செல்வி M.D.,DGO.,DNB
வருகை தருகிறார்

குழந்தை இல்லா தம்பதிகள் இந்த முகாமுக்கு வருவதன் மூலமாக உங்கள் வம்சம் தழைக்கும்

கொழும்பு Jan 28.01.2018 காலை 8 மணி முதல்
யாழ்ப்பாணம் Feb 04.02.2018 தொடர்புக்கு :
வெள்ளவத்தை, மெனிங் பிளேஸ் 075 0 252 141, 075 291 2700

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று 25.01.2018 BMICH இல் General degree B.A in Social Sciences and Language என்னும் பட்டம் பெற்ற

**பாலினி குமாரவேலு**

அவர்களை சீரும் சிறப்புடனும் பல்கலையில் பல பட்டங்கள் பெற்று என்றும் இனிமையாக வாழ வாழ்த்துகின்றோம்.

Congratulations!

மீசாலை வடக்கு, கொடிகாமம்.

வாழ்த்துவோர் : பெரியப்பா (சுவாமிநாதபிள்ளை), அப்பா, அம்மா, தம்பிமார்.





கேரளா கொல்லூர்
**ஸ்ரீ மூகாம்பிகை தேவி உபாசகர்**
Dr.சிவகுமார், Ph.D.,

**நிகழ்கால மற்றும் எதிர்கால பலன்களை துல்லியமாக கூறி பிரச்சனைகளுக்கான தீர்வுகளை பிரபல ஆன்மீக அறிவியல் வழிமுறைகளின் மூலம் கணித்து கூறுகிறார். (ஜாதகம் தேவையில்லை)**

வரும் பெப்ரவரி 3ம் திகதி வரை **கொழும்பு** மற்றும் **யாழ்ப்பாணத்தில்** நேரில் சந்தித்து ஆலோசனை பெறலாம்.

**Art of Spiritual Science**

முன்பதிவு அவசியம்: 0778616396

**கார், வான் வாடகைக்குத்தேவை**

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்கு தேவை.
தொடர்பு - 071 0404 978

அம்பிகை துணை

# மயிலை வீரமாணிக்க தேவன்துறை அருள் மிகு ஸ்ரீ கண்ணகாதேவி தேவஸ்தானம் பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

கிரியாரம்பம் :
நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி - 7.00 மணி வரையுள்ள சுபவேளையில் பாலஸ்தாபனக் கிரியைகள் ஆரம்பமாகும்.

**பாலஸ்தாபனக் கும்பாபிஷேகம்**

29.01.2018 திங்கட்கிழமை காலை 5.30 - 6.35 மணிவரையிலான திருவாதிரை நட்சத்திரமும் மகரலக்கினமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபவேளையில் பாலஸ்தாபனக் கும்பாபிஷேகமும் தொடர்ந்து காலை 10.00 மணிக்கு விஷேட பூஜையும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும். அம்பிகை அடியார்கள் அனைவரும் இப் புண்ணிய வைபவத்தில் கலந்து அன்னையின் திருவருள் பெற்று உய்வீர்களாக.

ஆதீனகர்த்தாக்களும் அம்பிகை அடியார்களும்

# ✚ வைத்தியசேவை மீள் ஆரம்பம்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு:-
குடாநாடு திரும்பி வைத்திய சேவையை மீள ஆரம்பித்துள்ளேன் என்பதை அறியத்தர விரும்புகின்றேன்.

வைத்திய கலாநிதி
**லயன் சிற்றம்பலம் இராஜலிங்கம்**
M.R.C.G.P (LONDON), A.M.H.H. (MADRAS)
R.M.P. (SRI LANKA), J.P. WHOLE ISLAND
இளைப்பாறிய வைத்திய பொறுப்பதிகாரி
இராஜ வீதி, தோப்பு, அச்சுவேலி.

தொடர்பு:- 077 711 0088

# 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 09.03.1944 உதிர்வு 08.01.2018

கடந்த 08.01.2018 அன்று சிவபதமடைந்த எனது தந்தை

**தாமோதரம்பிள்ளை வல்லிபுரம்பிள்ளை**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இல. 29, 6 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம். (c13308)(17.8)

வ. சுதர்சன் (கண்ணன் - மகன்) 077 774 1389





லயன் பிரான்சிஸ் அல்பிரட் துரைசிங்கம் (சமாதான நீதிவான்)

லயன் சீமாட்டி விக்ரோறியா செல்வராணி

இன்று (27.01.2018) சனிக்கிழமை திருமண வாழ்வில் பொன் விழாக் காணும் இவர்களை வாழ்த்தி இறையாசீர் வேண்டி நிற்கும்

மகன் - வேந்தன்
மருமகள் - கலைவாணி

# மரண அறிவித்தல்



**பொன்னையா மோகனராஜன்**
(கமலக்கண்ணன்)

புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் இல. 62, இராமலிங்கம் வீதி, முடமாவடி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மோகனராஜன் 25.01.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோதியானந்தம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் ரஜிதா, பிருந்தாவன், ஸ்ரீவண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலாதேவி, சரோஜினிதேவி, பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற வாமதேவன், ஞானமலர் ஆகியோரின் அன்புச்சகோதரனும் பாலமுகுந்தனின் (முகுந்தன் ஒறியன் வீடியோ) அன்பு மாமனும் அபிநயா, அஸ்வினா, துஷிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் இராஜரட்ணம், விஜயகுமார் (அன்ரன் ஆசிரியர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.30 மணியளவில் திருநெல்வேலி, செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

62, இராமலிங்கம் வீதி, முடமாவடி, நல்லூர்.
077 678 7363, 077 211 5897 (CS 13322/ 15/17)

தகவல்: குடும்பத்தினர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இணுவில் மத்திய கல்லூரி மாண்வர்கள் கடந்த வருடம் இந்தியாவின் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற **"கலைச் சங்கமம்"** இசை நிகழ்வில் பங்கு பற்றி பாடசாலைக்கும், இணுவில் மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளனர். இந் நிகழ்வினை " தேசிய கல்வி நிறுவக அழகியற் துறை திட்டமிடல் பணிப்பாளர் " **திருமதி நிஷாந்தராகினி திருக்குமரன்** ஒழுங்கமைத்திருந்தார். திருமதி வைகுந்தம் கணேஷபிள்ளை அவர்களது எழுத்துருவாக்கத்திலும் திருமதி சோபனா சுதாகரன் அவர்களது நெறியாழ்கையினாலும் திரு கிருஷ்ணபிள்ளை சுதாகரன், திருமதி மகாலஷ்மி ஜெயநாதன் ஆகியோரது வாய்ப்பாட்டிசையிலும் உருவான " சீதா சுயம்வரம் " எனும் நாட்டிய நாடகம் இங்கு மேடையேறி அனைவரது அமோக பாராட்டினைப் பெற்றுத் தந்து பெருமை சேர்த்த இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/ இணுவில் மத்திய கல்லூரி.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



20.01.2018 அன்று விவசாய வீதி வடக்குப்புன்னாலைக் கட்டுவனில்
நிகழ்ந்த ராஜா பிளாசா மாதிரிக் கிராம முப்பது வீட்டுத்திட்ட வீடுகள் கையளிக்கும்
நிகழ்வின் பொழுது வீட்டுத்திட்ட பயனாளிகளினால்

**செங்கைப்புரவோன் திரு.இ.குவேந்திரநாதன்**

அவர்களின்தன்னலங்கருதாச் சமூகசேவையினைப் பாராட்டி
யாழ். மாவட்ட அரசாங்க அதிபா **உயர்திரு. நா.வேதநாயகன்** அவர்கள் முன்னிலையில்
**ஈகைச் செம்மல்** என்னும் பட்டம் வழங்கிக்
கௌரவிக்கப்பட்டமையை பாராட்டி அவரின் சேவை மென்மேலும்
சிறக்க நாமும் வாழ்த்துகின்றோம்.

(cs13276) (13.17)

உரிமையாளரும், ஊழியர்களும்,

**பெஷன் ஹவுஸ்** 203, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# Northsea Ltd

**Fishnet Manufacturing Factory**

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்படும் கம்பனியொன்று

**2018 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களை பதிவு செய்தல்**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் / சேவைகள் வழங்கலுக்காக Northsea Ltd உடன் பதிவு செய்ய விரும்பும் பெயர்பெற்ற வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ உள்ளூர் முகவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**கோர உத்தேசிக்கும் பொருள்கள் / சேவைகள் விவரங்கள்**

01. பல்வகையான நைலோன் இழை டுவைன் /நூல்.
02. மீன்பிடி வலைகள் (பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகள்).
03. நைலோன் கயிறு 2mm இருந்து 30mm வரை.
04. PPகயிறு 2mm இருந்து 30mm வரை.
05. பிணை 6 இருந்து 10 வரை
06. ஈயம் 10g. 25g. 50g.
07. மிதக்கும் பாரிய அளவிலான உருண்டைகள் 6.7.8.9.
08. நீலமாள் மீன்பிடி வலைகள் அனைத்து அளவுகளும்.
09. நைலோன் நூல் பந்துகள் மற்றும் கழி.
10. குருலோன் நூல்.
11. மீன் பிடி படகுகள். (கண்ணாடி இழை மற்றும் மரத்திலான)
12. கட்டு மரம் (10. 15 மற்றும் ஏனைய அளவு)
13. தெப்பம் (8. 15 மற்றும் ஏனைய அளவு)
14. கண்ணாடி இழை வள்ளம் 15. 25 மற்றும் அளவு.
15. கடற்தோணிகள் (18 மற்றும் ஏனைய அளவு).
16. மிதப்புகள் (6. 7 bar)
17. தூண்டில் (12 இலக்க அளவு)
18. தூண்டில் (10 இலக்க அளவு)
19. குள்ளா (16, 18)
20. படகு இயந்திரம் (2.5HP. 2.6HP. 3HP. 8HP. 15HP)
21. வலையை தயாரித்தல் / முறுக்குதல் இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்கள்.
22. பொதிசுமத்தல் (நாடளாவிய ரீதியில்) மூலப்பொருள்கள். பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகள்.
23. மீன்பிடி வலை உற்பத்தியாக்கல் இயந்திராதி.
24. நிறமூட்டி இயந்திரங்கள். கொதிகலன்கள்.
25. நைலோன் நூல் முறுக்கல் இயந்திராதி.
26. மீன்பிடி வலைகள் சீர்படுத்துவதற்கான நிறமூட்டிகள் மற்றும் ஏனைய இரசாயனங்கள்.
27. மின்சார மற்றும் இலத்திரனியல் உருப்படிகள்.
28. பொதியாக்கல் பொருள்கள் (பொலித்தீன் பி.பி)
29. அச்சடித்தல் மற்றும் காகிதாதியன.
30. கணினி உதிரிப்பாகங்கள்.
31. அலுவலக உபகரணங்கள்.
32. அலுவலக தளபாடங்கள்.
33. பாதுகாப்பு சேவை.
34. கழிவறை துப்புரவாக்கல்.

ஆர்வமுள்ள வழங்குநர்கள் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாகிய 1000 ரூபாவை அல்லது 10.00 அமெரிக்க டொலர்களை (வெளிநாட்டு வழங்குனர்களுக்கு ஏற்புடையது) கொழும்பு - 03 காலி வீதி 356B ஆம் இலக்க 03 ஆம் மாடியிலிருந்து அல்லது லுணுவில. வீரவில அல்லது யாழ்ப்பாணம் குருநகர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் கொடுப்பனவு செய்து உரித்தான பதிவு செய்யும் படிவத்தை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரித்தான துறையில் அனுபவம் உள்ள வழங்குநர்கள் மாத்திரமே பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தல் வேண்டும். கம்பனியின் சுயவிவரத்தை இணைக்கவும்.


2018 பெப்ரவரி 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக வந்தடையும் வகையில் விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் தலைவர். Northsea Ltd என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் உறையின் இடது பக்க மூலையில் "2018 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல் " என எழுதப்படல் வேண்டும். ஒரு வழங்கல் சாதனத்திற்கு அல்லது சேவைக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு பதிவு செய்தல் வேண்டுமெனின் தனியான விண்ணப்பங்கள் அவ்வாறான பொருள்க்ள் / சேவைகளுக்கு ஒரே உறையில் அனுப்பப்படல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே வழக்கமாக விலை மனுக்கள் கோரப்படினும் ஏனைய வழங்கு நரிடமிருந்து விலை மனுக்களை அழைப்பதற்கான உரிமையை Northsea Ltd கொண்டுள்ளது.

தொழிற்சாலைகள் அமைந்துள்ள திட்டவட்டமான பிரதேசங்களில் இருந்தும் விலை மனுக்கூறுகளை பெற்றுக் கொள்ளப்படலாம்.

**தலைவர்**
**Northsea Ltd,**
**356 B, 3 ஆம் மாடி,**
**காலி வீதி, கொழும்பு - 03**

(IN 8400) (14)





**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை**

# வடக்கு குபேரவாசல் கோபுர கும்பாபிஷேகம்

## ஸ்ரீ மகா மேருசக்கர இயந்திர கும்பாபிஷேகம்

**காலம்:**
**நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை**
**சுபவேளை**
**காலை 7.30 மணிமுதல் 8.27 வரை**

அம்பாள் அடியார்கள் அனைவரும் வருகைதந்து
நல்லருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

நிர்வாக சபை,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(m.1324) (13.17)

# 9வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
## Jaffna International Trade Fair

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

**JITF 2018**

**26 27 28**

**ஜனவரி / January**
**10.00 am - 8.00 pm**
**யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்**
**Municipal Ground - Jaffna**

MAIN SPONSOR S-lon | ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED | IN ASSOCIATION WITH CCIY | www.jitf.lk | jitf.lk

ICT | FOOD & BEVERAGE | APPAREL | AUTOMOBILE | CONSTRUCTION | AGRICULTURE

OFFICIAL PARTNERS
MOBILE TELECOMMUNICATION Telecom | ROOFING ANTON | FOOD RUHUNU FOODS | PRINT MEDIA | CONSTRUCTION SOLUTION PROVIDER INSEE | ELECTRONIC MEDIA | LUBRICANT Mobil | LIFESTYLE | RADIO
SUPPORTED BY SRI LANKA ASSOCHAM | ENDORSED BY | PARTNER COUNTRY India

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 26.01.2018 | 2242 | சிவப்பு |

விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள்: 07 08 21 22

ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி: ரூ. 90, 75, 748/=

2018.01.28 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது நுரித அழைப்பு 1919

கோடிபதி சவிதா

சீட்டிழுப்பு வாரம்: 246

வர்ணம் : செம்மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2018.01.26

ரூ. 82,848,416/-

D 08 41 51 79

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அறிவித்தல்

கரவெட்டி கிழக்கு தல்லையப்புலம் வீரபத்திரகாளி தேவஸ்தான கும்பாபிஷேக விஞ்ஞாபனத்தில் கும்பாபிஷேகம் சிறப்பிக்கும் குருமார்கள் என்ற தலைப்பில் **க. சோமசுந்தரக்குருக்கள்** என எனது பெயர் போடப்பட்டுள்ளது. 03.10.2017 இல் பூட்டுக்களை உடைத்து புதுப்பூட்டு இட்டு அங்கிருந்து வெளியேற்றிய பின் இங்கு நடைபெறும் காரியங்களுக்கும் எனக்கும் தொடர்பில்லை என்பதை தெரிவிக்கின்றேன். பங்குனி மாதம் பாலஸ்தாபனம் நடந்தமையால் பங்குனி மாதத்தில் 2 ஆம் வருடம் முடிய கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும். கணித பஞ்சாங்கத்தில் 26.01.2018 பி.ப. 1.32 வரை நவமியுள்ளது. கர்மாரம்பம் செய்வது தவறாகும். ஆடி மாதம் கும்பாபிஷேகம் செய்யும் குருமாருக்கும் எனக்கும் எவ்வித தொடர்புமில்லை.

**க. சோமசுந்தரக்குருக்கள்**
**மேற்படி ஆலய பிரதம குருக்கள்**
**தேசமாணி J.P. ஓய்வு நிலை அதிபர்.**

## மரண அறிவித்தல்

### கந்தையாபிள்ளை கனகராஜா



காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தையும் லிவர்பூல் பிரித்தானியாவையும் வசிப்பிடமாகக் கொண்ட கந்தையாபிள்ளை கனகராஜா (20.01.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோ.க.ஆ.கந்தையாபிள்ளை நாகம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை ஜெயராஜேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நடராஜா, பரமசிவம்பிள்ளை (சட்டத்தரணி), கௌரிநாயகி மற்றும் கோமலாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் கந்தசாமி, செல்வரத்தினம் (கனடா), நேசராஜா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும்திருமகள்(லண்டன்), திருக்குமார்(லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஞானச்சந்திரன் (லண்டன்), கல்பனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் கிரிதரன் (கனடா), கீதா (கனடா), சஞ்சீவ் (இலங்கை) ஆகியோரின் தாய்மாமனும் திரிசிகா, காசினி, தார்மீகன், தர்மிலன், கோபிஷா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.01.2018) செவ்வாய்க்கிழமை ஐக்கியராச்சியத்தில் உள்ள லிவர்பூலில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**க. திருக்குமார் (மகன் - 073 973 83738),**
**த. ஞானச்சந்திரன் (ஞானா - மருமகன் - 074 80474158)**

## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

### சி. தேவராஜா



மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சகோதரர் சுவிசேஷகருமாகிய சி.தேவராஜா நேற்று (26.01.2018) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்க நிகழ்வுகள் உடுவில் மல்வம் கிறிஸ்தவ சேமக்காலையில் அசெம்பிளி ஒவ் கோட் சுன்னாக சபையினரால் நடைபெறும். இந்த அறிவித்தலை உறவினர் மற்றும் தேவசபையார் ஆகியோருக்கு தெரியப்படுத்துகிறோம்.

**மாகியப்பிட்டி,**
**சண்டிலிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**ELTC International**

இடமிருந்து 10.000.00 பணத்துடன்

**நீங்களும் ஆசிரியர் ஆகலாம்**

மாதம் 40.000 மேல் சம்பாதிக்கலாம்

- Dip in Pre - school Teaching
- Dip in Abacus IQ Teaching
- Certificate in Teaching English (Primary)

Basic Qualification A/L 3 Pass

ஆறுமாத கற்கைநெறிகள் வெறும் 10.000/- ரூபாவுடன் நீங்கள் கற்கைநெறி ஒன்றை ஆரம்பித்து ஒப்பந்த அடிப்படையில் அத்துறையில் சம்பாதிக்கும் போது மிகுதிப்பணம் செலுத்தும் ஓர் அரியசந்தர்ப்பம். உங்கள் கல்விச்சான்றுகளுடன் நேரில் வருகைதரவும்.

இலவச கருத்தரங்கு 28.01.2018 முற்பகல் 10.00 மணி

English Language Teaching College - International.
Soft View Computer Education
Near Kachcheri.Jaffna - 077 074 3131

## முகத்தில் உள்ள அழுக்குகளை நீக்கும் சமையலறைப் பொருள்கள்

பொதுவாக சருமத்தில் உள்ள அழுக்குகள் மற்றும் இறந்த செல்களை முழுமையாக நீக்குவதற்கு ப்ளீச்சிங் தான் சரியான வழி. அதற்கு அழகு நிலையங்களுக்குச் சென்று ப்ளீச்சிங் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை. வீட்டிலேயே ப்ளீச்சிங் செய்யலாம்.

அதுவும் வீட்டின் சமையலறையில் உள்ள பொருள்களைக் கொண்டே மிகவும் இலகுவாக முகத்தின் பொலிவை அதிகரிக்கலாம். மேலும் ப்ளீச்சிங் செய்வதால் சருமத்தின்நிறமும்சற்றுஅதிகரித்துக்காணப்படும். இயற்கைப் பொருள்கள் அனைத்து வகையான சருமத்திற்கும் பொருந்தும். சரி, இப்போது முகத்தின் பொலிவை அதிகரிக்க உதவும் அந்த சமையலறைப் பொருள்கள் எவையென்று பார்ப்போம்.

- தக்காளியில் ப்ளீச்சிங் தன்மை உள்ளது. எனவே தக்காளியின் சாற்றினை முகத்தில் தடவி மென்மையாக மசாஜ் செய்து, சிறிது நேரம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவ வேண்டும். இப்படி வார இறுதியில் மட்டுமின்றி, தினமும் செய்து வந்தால், முகத்தில் சேரும் அழுக்குகளை உடனே நீக்கலாம்.
- தயிரில் உள்ள நொதிகள் மற்றும் லாக்டிக் அமிலம், சருமத்தின் நிறத்தை அதிகரிக்க உதவும். அதற்கு தயிரை முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் நீரில் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், 2 வாரத்தில் உங்கள் முகத்தில் ஒரு மாற்றத்தைக் காண்பீர்கள்.
- தக்காளியைப் போன்றே எலுமிச்சையிலும் ப்ளீச்சிங் தன்மை உள்ளது. அந்த எலுமிச்சையின் சாற்றினை படுக்கச் செல்லும் முன், நீருடன் கலந்து முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இப்படி வாரத்திற்கு 3 முறை செய்து வந்தால், சருமத்தின் நிறம் அதிகரித்திருப்பதைக் காணலாம்.
- உருளைக்கிழங்கை அரைத்து அதனை முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி வாரம் ஒருமுறை செய்து வந்தால், நல்ல பயனைப் பெறலாம்.
- பப்பாளியை அரைத்து, முகத்தில் தடவி 1/2 மணிநேரம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இதனால் அதில் உள்ள ப்ளீச்சிங் தன்மையால், சருமத்தில் உள்ள கரும்புள்ளிகள், இறந்த செல்கள், அழுக்குகள் போன்றவை நீங்கி, முகம் பளிச்சென்று இருக்கும்.

## மரண அறிவித்தல்

### திருமதி நந்தினி சிவலோகநாதன் (அளவெட்டி)



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நந்தினி சிவலோகநாதன் 25.01.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr.முருகேசம்பிள்ளை மல்லிகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமக்ளும் சுப்பிரமணியம் சிவலோகநாதன் (Teacher Uduvil Girls College) இன் அன்பு மனைவியும் கபிலன் (Faculty of Engineering Sri Venkadeshwara University, India), குணேசன் (Faculty of Engineering University of Moratuwa) ஆகியோரின் அன்புத்தாயாரும் இந்திராதேவி, சுவீந்திரன்(Canada), ரவீந்திரன் (District Manager, NHDA, Jaffna) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஸ்ரீலோகநாதன் (Canada), வாமாதேவி (Canada), சத்தியலோகநாதன், சந்திரகாந்தன்(Retired Manager, People's Bank), பிறேமாதேவி (Canada),ரஞ்சினி (Teacher Sandilipay Hindu Colllege) ஆகியோரின் அன்புமைத்துனியும் சந்திரவதனா (Canada), நடராசா (Canada), வான்மதி (Teacher Chulipuram Victoriya Colllege) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (29.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்கன், மாவிட்டபுரம், தெல்லிப்பழை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈமைக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 13311) (14.17)

**077 623 9879/ 071 866 5126**

## மரண அறிவித்தல்

### துரைராசா பராசக்தி

(CS 13325/15/17)



புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரம், கண்ணகி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொட்டடி, சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா பராசக்தி நேற்று (26.01.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**70, மானிப்பாய் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

**077 486 8104 - ஸ்ரீவிநாயகர் பன்சி ஹவுஸ்,**
**021 222 9393 - வாகீசன் விற்பனை நிலையம்**

# இதய பலவீனத்தைப் போக்கும் சர்ப்பாசனம்



சர்ப்பம் என்றால் பாம்பு என்று பொருள். இந்த ஆசனம் பாம்பு நிமிர்ந்து படம் எடுப்பது போன்ற தோற்றத்தைத் தருவதால் இதற்கு சர்ப்பாசனம் என்ற பெயர் வந்தது. இதையே புஜங்காசனம் என்றும் சொல்வதுண்டு.

**செய்முறை**

விரிப்பின்மேல் கவிழ்ந்து படுக்க வேண்டும். இரண்டு உள்ளங்கைகளையும் கவிழ்த்து இரண்டு காதுகளுக்கும் பக்கம் பக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். மூச்சை ஒரு முறை ஆழ்ந்து இழுத்து, இழுத்த மூச்சு முழுவதையும் வெளியே விட்டுவிடவேண்டும்.

இரண்டு உள்ளங்கைகளையும் தரையில் வசமாக ஊன்றிக்கொண்டு மார்பு, கழுத்து, வயிறு இவற்றை மேலே நிமிர்த்த வேண்டும்.

இடுப்பும் அதன் கீழ்ப்பகுதிகளும் நன்கு தரையில் படிந்திருக்கவேண்டும். பாதங்கள் தரையில் படியும்படியாக கால்கள் இரண்டும் நீட்டிய நிலையில் இருக்கவேண்டும். அதேசமயம் கால்கள், கைகள் இவற்றை விறைத்து நீட்டிக் கொள்ளக்கூடாது. எவ்வளவுக்கு அண்ணாந்து மேலே பார்க்க முடியுமோ அவ்வளவிற்கு அண்ணாந்து கூரையைப் பார்க்கவேண்டும்.

மூச்சில்லாத இந்த நிலையில் பத்து நொடிகள் இருந்தால் போதும். இந்தப்பத்து நொடிநேரம் சுவாசம் இல்லாமல் வெற்று நுரையீரலோடு இருக்க முடியா தவர்கள் இலேசாக சுவாசித்துக் கொள்ளலாம். பழகப்பழக இந்த நிலை சரியாக வந்துவிடும். பின்னர் கவிழ்ந்து தலையை மட்டும் ஒருக்களித்து வைத்துக்கொண்டு சில நொடிகள் இளைப்பாறிவிட்டு மீண்டும் செய்ய வேண்டும். இப்படிச் சர்ப்பாசனத்தை ஐந்து அல்லது ஆறு தடவைகள் செய்யவேண்டும்.

**பயன்கள்**

இந்தப்பயிற்சியால் நுரையீரல் வளம்பெறுகிறது. இதயம் வலிமைப்பட்டு இதயத்துடிப்பு சமப்படுத்தப்படுகிறது. இதயபலவீனத்தைப் போக்குகிறது. இதயத்தின் வால்வுகள்ந்க்கு நல்ல பயிற்சி கிட்டுகிறது.

இதயத்தைச் சுற்றியுள்ள எண்டோகார்டியம், எபிகார்டியம், மயோகார்டியம், பெரிகார்டியம் என்னும் நான்கு உறைகளும் வலிமை பெறுகின்றன. இதனால் இதயப்பிணிகள் எளிதாக அகலுகின்றன.

இடை, பிங்கலை நரம்புகளின் இயக்கம் செம்மைப்படுகிறது. தீர்வே இல்லாத கழுத்துவலித் துன்பம் நீங்குவது மட்டுமன்றிக் கழுத்துப்பட்டை போட்டுக்கொள்ளும் அவசியமும் அகலுகின்றது. முதுகெலும்பை மிக இலகுவாக வளைத்துப் பயிற்சி கொடுப்பதில் சீரிய ஆசனம் இது. தோள் எலும்புகள், தோள்மூட்டுக்கள், கைஎலும்புகள் ஆகியவை பலம்பெறுகின்றன. சிறுநீரகங்கள், சிறுநீர்பை, சிறுநீர்க்குழாய் போன்ற உறுப்புக்கள் இதனால் வளம்பெறுகின்றன.

பெண்களுக்குப் பிரசவத்தின் பின்னால் உண்டாகும் வயிற்றுச் சரிவைத் தடுக்கிறது. கருப்பை, ஓவரி, மார்பகங்கள் ஆகிய பகுதிகளுக்கு நல்ல பயிற்சி கிட்டுகிறது. கர்ப்பிணிகள் இவ்வாசனத்தைச் செய்யக்கூடாது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

Congratulations!

எமது நிறுவனத்தில் பணியாற்றும்
திரு. நிர்மலேஸ்வரன்
அவர்களின் புதல்வன்

**நி. டிலக்கேஸ்வரன்**



அவர்கள் கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவில் தோற்றி 3A பெறுபேறுகளைப் பெற்று பொறியியல்பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பதன் நிமிர்த்தம் அவருக்கும் அவரை ஊக்குவித்த ஆசிரியர்கட்கும் மற்றும் அவரது தந்தையான எம் சக பணியாளர் திரு. ம. நிர்மலேஸ்வரன் மற்றும் அவரது துணைவியாருக்கும் எமது அன்பான வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு மேலும் கல்வியில் சிறப்புப் பெற வாழ்த்துகின்றோம்.

மாவட்ட நிலை : 24
அகில இலங்கை நிலை : 287

தொகைசாலை அதிகாரியும் பணியாளர்களும்,
இலங்கை பெற்றோலியம் ஸ்ரோரேஜ் டேமினல் லிமிட்ட் காங்கேசன்துறை.


அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 149
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.01.26
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 60,088,810/-
வெற்றி இலக்கங்கள்
10 48 49 64 I
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 759
சீட்டிழுப்பு திகதி 2018.01.25 வியாழக்கிழமை
J 09 19 51 56
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 53,283,720/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
நீல நிற டிக்கட்டுகள் 27.01.2018ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Galaxy Star
வெற்றி வாரம் 232 திகதி 24.01.2018
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
04 45 47 53 58
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,564,992/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 25 . 12 . 1979

இறப்பு 06 . 02 . 2017

**குமாரசுவாமி விசாகன்**

திதி: பூர்வபக்க ஏகாதசி

ஓராண்டு கடந்த தென்று ஊர்சொல்லும் இதயம் ஏற்று
தேறவே இல்லை ஐயா! திருமுகம் நினைவை விட்டு
நீங்கலை ... "விசாகா!" தேடி நித்தமும் உறவு சுற்றம்
வாடினோம்.... மழை போல் ஏனும் வந்தெமை உயிர்க்க வை....வா!

சடையாளி,
காரைநகர்.

அம்மா, அப்பா, சகோதரன்,
மனைவி, மகள்.
021 221 1440

(cs.13248) (13.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06.12.1934

மறைவு 07.02..2017

அமரர்

**கந்தையா இராசரத்தினம்**

ஆண்டொன்று சென்றதோ ஆறவில்லை எங்கள் துயரம்
எங்கே மறைந்தீர்கள் கண்ணை இமை காப்பது
போல எம்மையெல்லாம் காத்து நின்றீர்கள்
இடையூறு அத்தனையும் எதிர்த்து நின்றீர்கள்
பேதமற்ற பாசத்தையும் பகிர்ந்து நின்று
ஊக்கமுடன் கல்வியையும் ஊட்டி விட்டு நன் மக்களாய் எம்மை வளர்த்துவிட்டு
சொல்லாமல் கொள்ளாமல் போனதென்ன காலத்தின் கோலம்
எங்களிடம் இருந்து பிரித்துவிட்டாலும்
எந்நாளும் எம் மனதில் காவியமாய் ஆகி விட்டீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

1 ஆம் குறுக்கு
இணுவில் வீதி.
மானிப்பாய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

**வேலுப்பிள்ளை செல்வநாயகம் (தங்கராசா)**

**(ஆசாரி)**



வேலணை மேற்கு, வங்களாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்வநாயகம் (தங்கராசா) 26.01.2018 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் ஜெயரூபன் (கொழும்பு), ஜெயரஜிதா (ஜேர்மனி), உதயரூபன் (ராசன், வேலணை), சத்திய றூபன் (ஆசிரியர், யா/ இராமநாதன்கல்லூரி) காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்களாவடி,
வேலணை.

தகவல்: குடும்பத்தினர்
0773693139, 0779697141






பெண்களுக்கான சாறி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன.
இவை2ஆயிரத்து 800 ரூபா தொடக்கம் 3 ஆயிரத்து 300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 12 . 1940



மறைவு 25 . 01 . 2018

# தம்பிராஜா சரவணமுத்து

இலுப்பைக்கடவை மன்னாரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா சரவணமுத்து (25.01.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராஜா சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் சோமசுந்தரம் பரிமளம் தம்பதியரின் அன்புமருமகனும் மனோன்மணி யின் அன்புக்கணவரும் செல்வம், செல்வராணி, செல்வச்சந்திரன் (சுரேஷ்) ,செந்தூரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவமாலா, சிவபாலன், சிந்துஜா, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமனும் கவீனா, அபினா, தாரணி, சாருசன், அஸ்வின், அபிசன் ஆகியோரின் அன்புப்பேரனும் பாலசிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இலுப்பைக்கடவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வம் 071652 4217, 0765020395,
செல்வச்சந்திரன் (சுரேஷ்)
0049 2131520299,
செந்தூரன் 0044 749 153 2132,
வீடு 0094 76322 8602

தகவல்:
குடும்பத்தினர்.

(cs13326)(17.8)


## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## சபை நிதி - 2018

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டடம், மற்றும் வீதி நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதிசுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ் விலைமனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்டகேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகதகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 021 2222019) என்னும் முகவரியிலிருந்து மேலதிகதகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலைநாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை 29.01.2018 – 12.02.2018 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் பூரணப்படுத்தி ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 29.01.2018ம் திகதியில் இருந்து 12.02.2018 திகதி வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 மற்றும் வரிகளைச் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 12.02.2018ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று) நாட்களுக்கு (16.04.2018 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பானமுன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 08.02.2018 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வரி நீங்கலாக | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணைத் தொகை | செல்லுபடி ஆகும் காலம் |
| 01. | JMC/WD/01/CF.Bu/2018/01 | Construction of Fencing Work (Coated Net) at Kullundai Stage 1 | 3.87 | 2 Months | C 8 | 50,000.00 | 91 Days (till 14.05.2018) |

தலைவர் / ஆணையாளர்
உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழு,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
26.01.2018

## மரண அறிவித்தல்



பிறப்பு 14.04.1927

இறப்பு 26.01.2018

# சின்னையா வேலுப்பிள்ளை

***(சின்னத்துரை)***

எழுதுமட்டுவாழ் தெற்கு, சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா வேலுப்பிள்ளை நேற்று (26.01.2018) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சீதேவி தம்பதியரின் அன்பு மகனும் மருதங்கேணியைச் சேர்ந்த சடையர் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்தங்கம், கணபதிப்பிள்ளை தங்கம்மா, வீரகத்தி, சிவசம்பு அன்னப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இராசகுமாரி, விஜயகுமாரி, நிர்மலாதேவி, சரோஜினி சிவானந்தம் சிலோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சத்தியநாதன், தர்மலிங்கம், காலஞ்சென்ற பத்மநாதன் பாலரஞ்சன், பராசக்தி, ஜெயகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் நளினி, சத்தியா, கோபிநாத் கஜேந்திரநாத், கார்த்திகா, பிரசன்னா, ரஜிந்தன் அருணன், பிரவீனா, பானுஷன், பிரிந்தா, வினோஜிதன் மிதுனன், நிரோஜன், நிரோஜா, நிதர்ஷன், நிருஷா, நிதர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் அஜித், அபிநயா அஷ்வின், திபீகா, அபிகேஷன், அதீசா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C 5673/15/17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## இறுதியில் ஆர்சனல்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான விலகல் முறையிலான தொடரில் ஆர்சனல் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
ஆர்சனலை எதிர்த்து செல்சி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் அணி வெற்றிபெற்றது. ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோல்களை கிரனிட் பெற்றார். செல்சியின் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஈடின் பதிவு செய்தார். (ம)




# குசல் பெரேரா வெளியேற்றம்


முத்தரப்புத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில், காயம் காரணமாக இன்றைய ஆட்டத்தில் இருந்து வெளியேறினார் குசல் ஜெனித் பெரேரா.
இலங்கை - பங்களாதேஷ் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது. சிம்பாப்வே வெளியேற்றப்பட்டு இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன. இலங்கை நேரப்படி முற்பகல் 11.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. இலங்கை அணியின் தலைவர் மத்தியூஸ் காயம் காரணமாக ஏற்கனவே தொடரில் இருந்து விலகியுள்ள நிலையில், மற்றொரு முன்னணி வீரரான குசல் பெரேராவும் காயம் காரணமாக விலகியுள்ளார். குசல் பெரராவின் இடத்துக்கு தனஞ்சய டி சில்வா அழைக்கப்பட்டுள்ளார். (ம)

## டோனிக்கு விருது

இந்திய அரசின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம பூஷண் விருது, இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனிக்கு வழங்கப்படவுள்ளது.
ஆண்டுதோறும் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு மத்திய அரசு உயரிய விருதான பத்மஸ்ரீ, பத்ம விபூஷண், பத்மபூஷண் விருதுகளை வழங்கி மதிப்புறுத்தி வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான விருது விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி, கிரிக்கெட் விளையாட்டில் சாதனை படைத்து வரும் முன்னாள் தலைவர் டோனிக்கு இந்த ஆண்டின் பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2009ஆம் ஆண்டு டோனிக்கு பத்மசிறி விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)




## தென்னாபிரிக்கா நேற்று அறிவிப்பு




இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான தென்னாபிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது.
இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் ம்டிவடைந்த பின்னர் இரு அணிகளுக்கும் இடையில் ஆறு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தென்னாபிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது.
தென்னாபிரிக்க அணி விவரம் பிளாசிஸ் (தலைவர்), அம்லா, குயின்டன், வில்லியர்ஸ், டுமினி, தாகிர், மார்க்ரம், மில்லர், மோர்கல், மொறிஸ், நிகிடி, பிளுக்வையோ, ரபாடா, ஷம்சி, சோண்டோ. (ம)

## ஆஸ்திரேலியாவுக்கு ஆறுதல் வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. தொடரின் முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை இங்கிலாந்து உறுதிப்படுத்தியுள்ள நிலையில் ஆஸ்திரேலியாவின் இந்த வெற்றி ஆறுதல் வெற்றியாகவே அமைந்துள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 44.5 பந்துப்பரிமாற்றங்களில் 196 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக வோக்ஸ் 78 ஓட்டங்களையும், கரன் 35 ஓட்டங்களையும், மொயின் அலி 33 ஓட்டங்களையும் பெற்றனர்.
கம்மின்ஸ் 4 இலக்குகளையும், ஹசில்வூம், டை இருவரும் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 37 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக ஹெட் 96 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஷ் 32 ஓட்டங்களையும், பெய்ன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)




## ‘கிரைக் சப்பல் என் கிரிக்கெட் வாழ்வை அழிக்க முயன்றார்’

இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் கிரைக் சப்பல், தனது கிரிக்கெட் வாழ்க்கையை அழிக்க முயன்றார் என்று காட்டமாகத் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.
கங்குலி ‘லெவன் கோட்ஸ் அன்ட் ஏ பில்லியன் இன்டியன்ஸ்’ என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்திலேயே அவர் இந்தக் கருத்தை வைத்துள்ளார்.
‘கடந்த 2005ஆம் ஆண்டு சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு முன்னதாக் ஒருநாள் மாலையில் பயிற்சியாளர் கிரைக் சப்பல் தனது அணித்தெரிவுப் பட்டியலை என்னிடம் காட்டினார். நான் அதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். அந்தப் பட்டியலில் முக்கிய வீரர்களின் பெயர்கள் இடம்பெற்றிருக்கவில்லை. ஏன் என்று எனக்குப் புரியவில்லை. ஏதோ தவறாகப் போய் முடியப்போகிறது என்பதை நன்கு உணர்ந்தேன். அவர் இந்திய அணியை கிரைக் சப்பலின் அணியாக மாற்ற முயன்றார். என்னுடைய, பலருடைய கிரிக்கெட் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவர எத்தனித்தார்’ என கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)



## மரண அறிவித்தல்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 09 . 08 . 1931 | 23 . 01 . 2018 |

### திருமதி பரமேஸ்வரி பிறைசூடி

கோப்பாய் மத்தி, அப்பிளானையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி பிறைசூடி 23.01.2018 செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் கோப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும், நுணாவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிறைசூடியின் (Administrative Officer, Road Development Authority) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவஞானப்பிரகாசம் (Planning Director, Department of Health), சிவானந்தராஜா (Public Health Inspector), சிவபாதசுந்தரம் (Deputy Director, Buildings Department), சிவராஜா (District Inspector Telecomminications, Sri Lanka Telecom), சிவநேசன் (Technical Officer, Land Development Department), சிவரத்தினம் (Director Special Projects, Department of Annimal Production & Health), சிவலிங்கம் (Quantity Surveyor, Department of Highways) மற்றும் சிவநாதன் (Investigating Inspector, Postal Department), சிவபாலன் (Former Store Keeper, Renuka Enterprises) ஆகியோரின் அருமைச் சகோதரியும் சீதா, செல்வமணி, தெய்வீகராணி, இராசமலர், செல்வராணி, இந்திராணி, ஜெயரஞ்சிதம், ஜெயலட்சுமி, காலஞ்சென்ற லீலாவதி ஆகியோரின் பிரியமான மைத்துனியும், சத்தியவாணி (Cultural Officer, Devisional Secretariat, Kinniya), சத்தியானந்தா (Accountant, Australia), சத்தியதேவி (Wallmart, Canada), சத்தியசீலன் (Acountant, UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகுணன் (Teacher, Selvanayakapuram HMV ), Dr.கவிதா (General Practitioner, Australia ), றமணேஸ் (Canada), சிவஷக்தி (Accountant, UK) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிராம், கீர்த்தனன், சுகாஷ், ரிஷி ஆகியோரின் பிரியமுள்ள பேர்த்தியுமாவார்.

'அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது கோப்பாய் இல்லத்தில் நாளை (28.01.2018) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரிகைகளுக்காக பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
"அப்பிளானை" கோப்பாய்மத்தி. (IN 5667) (14,17) குடும்பத்தினர்.

**0213207462/ 077 726 3097/ 076 944 1114/ 077 4214343**


## வாடகைக்கு

கோயில் வீதி, நல்லூரில் வீடு அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. தங்கிப் படிப்பவர்கள், வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது. கடையும் வாடகைக்கு உண்டு. -077 225 9030 (CS 13321/ 15/17)

## English Personal Classes

Grade 1 - 0/L வரை

TP. 077 3314 608 (CS13250 (12-17))

## A/L பொருளியல் புதிய பாடத்திட்ட நூல் 1

A/L 2015, A/L 2016 பரீட்சைகளில் 99 புள்ளிகளும்
A/L 2017 பரீட்சையில் 100 புள்ளிகளும் பெறவைத்த நூல்களின் ஆசிரியர்

புள்ளிகள் 100/100

**வே.கருணாகரன்**

2018 A/L பரீட்சைக்குரிய வினாவிடை MCQ நூல்களும் விற்பனையாகின்றன.

விலை ரூபா 200/=

பூபாலசிங்கம் புத்தகசாலை, அன்னை புத்தகசாலை

## போட்டிப் பரீட்சை இறுதி கருத்தரங்கு

Feb 17 நடைபெறவுள்ள SLAS IQ க்கு
சனி, ஞாயிறு
10.00 → 2.00

Feb 24 நடைபெறவுள்ள
கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு
சனி, ஞாயிறு
9.00 → 1.00

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்.நகர். (C 5668/ 15/17)

தொடர்புகளுக்கு 076 688 3394

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## இன்சுவை யாழ்.ஒடியல் கூழ்

தினமும் மு.ப. 11 மணிமுதல்

யாழ் பாடி,
49-51, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 0777 360 353, 075 9875 800 (CS 13184/ 15)

## சமையலாள் தேவை

யாழ். நகரில் புதிய உயர்தர அசைவ உணவகம் ஒன்றிற்கு ஆண் அல்லது பெண் சமையலாள் தேவை.
(மீன் / இறைச்சி / பிரியாணி)

071 110 0066


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி தங்கம்மா அப்பையா

பிறப்பு 30.04.1934

இறப்பு 08.02.2017

### கருணை மழைபொழிந்த பாசத்தாய்...!

உயிர் தந்து வளர்த்த தாய்
உயிர் பிரிந்து போன
துயரிலிருந்து நாம் மீளமுன்
அதற்குள் ஓரண்டு ஆனதுவா?
நேற்றுப் போல் இருக்கிறது எல்லாம்
தள்ளாத வயதிலும்
எம் கூட வாழ்ந்தாய் இன்று
இல்லாமல் போன
இடைவெளியை நிரப்ப இயலவில்லை
அம்மா அம்மா... தான்
அம்மாவுக்கு இணையாய் யார்தான்
ஒற்றைச் சொல்லால் 'அம்மா'
என்றழைக்கத் தன்
மொத்தப் பாசத்தையும்
கொட்டி வளர்த்தாய் - எம்மை
விட்டுப் போயினளே
நீங்கள் போட்ட பிச்சையம்மா
இந்த உயிரும், உடலும் உங்களை
நினைக்காமலா இருக்கும்
எம் மனமும், நினைவும்
உயிருள்ள வரை நிழலாய் -
நின் நினைவுகள் தொடரும்
அம்மா...!
புற்றடியான் பாதம் பற்றி
பூர்வ புண்ணிய சாந்திபெறுக
பெற்றவளே உங்கள் ஆத்மா.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.159/12,
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(IN 5621) (13.17)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27 .01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.